கோகுலம்


GOKULAM

ஜூன் '96 ரூ. 5/-



ஆஹா, ஐஸ்கிரீம்!

12 பக்க வண்ணப் படக்கதை!



NEW DIAMOND COMICS (MAY 96)

Pran's—Pinki's Garden
Pran's—Raman Ha! Ha!!
The Typhoon of Death (Dynamite Series)
Mahabali Shaka & The Pyramid
Tauji & The Blue Devil
Phantom-56 (Digest)
Mandrake-43
James Bond-46

JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering five books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/—)** you'll have to order five to six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 5 books of your choice available with us at that time. Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes ! would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these I promise to accept the V.P. every month.

NAME ______

ADDRESS ______

______

POST OFFICE ______ PIN CODE ______

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ______

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

NEW AMAR CHITRA KATHA (APRIL 96)

Krishna
Hanuman
The Sons of Rama
The Quick Witted Birbal
Akbar
Prithviraj Chauhan

NEW AMAR CHITRKATHA

Padmini
Rani Durgavati
Rama
A Bag of Gold Coins
The Gita
Shiva Parvati

DIAMOND COMICS PVT. LTD. X-30, OKHLA INDUSTRIAL AREA, PHASE-2, NEW DELHI-110020

DISTRIBUTORS : Madras : Sree Meenaksni News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore **Hyderabad:** • Shailendra Agencies, Bashir Bagh •Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar, •A.K. Agencies, Rajaji Nagar •The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road. **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut •Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut



கோகுலம்

1996

ஜூன்

மலர் : 14


இதழ் : 4

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும் - பாரதியார்.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம். கோடை விடுமுறையை எப்படிக் கழிக்கிறீர்கள்? அதைப் பற்றி எழுதியனுப்புங்களேன்?

சிறுகதைப் போட்டி அறிவிப்பைப் பாராட்டி ஏராளமானவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். போன முறை போட்டி வைக்கப்பட்ட போது, எங்களுக்குப் போதிய அவகாசம் தரவில்லை. கோடை விடுமுறையில் வையுங்கள் என்று கூட்டுக் கையெழுத்திட்டு பலர் வேண்டுகோள் அனுப்பி யிருந்தார்கள். அதனால் தான் இந்த முறை கோடை விடுமுறையில் இது அறிவிக்கப்பட்டது. உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சிதானே? எழுதத் துடிக்கும் பள்ளி மாணவர்கள் எல்லோரும் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.



கோகுலத்தில் "தாத்தா பாட்டிகளுக்காக" நான்கு பக்கங்கள் ஒதுக்குங்கள். கோகுலம் எல்லோரும் படிக்கும் இதழ் என்று திருச்சியில் இருந்து ஒரு தாத்தா பாட்டி எழுதியிருக்கிறார்கள். இது வித்தியாசமான வேண்டுகோள். இருப்பினும் பரிசீலிக்கிறோம்.

புவனா தேடிய புதையல் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. கடைசி வரை சஸ்பென்ஸ்தான்!


தபால்காரரைப் பார்த்தாலே ஒளியும் அளவுக்குக் கடிதங்கள் குவிகின்றன. எல்லாம் நீங்கள் எழுதியவைதான். இதைக் குறித்துப் பெருமைப்படும் நேரத்தில், கோகுலத்தை உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அறிமுகப்படுத்தி காசு கொடுத்து வாங்கிப் படிக்க வையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)



கோகுலம் 1996 ஜூன்

இந்த இதழில்....



* பவளம் தந்த பரிசு! (வண்ணப்படக்கதை) பக்கம் 45





* கரடிக் கோப்பை கிரிக்கெட் போட்டி பக்கம் 5

* ஆஹா ஐஸ்கிரீம்! பக்கம் 9




பல்லி சட்டை உரிக்குமா? பக்கம் 81





* பூச்சிகளின் விந்தை! (அறிவியல் சித்திரமடல்) பக்கம் 65



''இந்தத் தேர்தல்ல நம்மை நல்லா ஏமாத்திட்டாங்கடா.''

''எப்படி?''

''பள்ளிக்கூட நாள்ல வச்சிருந்தா லீவு கிடைச்சிருக்கும்; இப்ப, இல்லாம போச்சே!''

– சீர்காழி. வி. ரேவதி

"பிள்ளையாரப்பா, நான் பாஸானா உனக்கு பால் தரேன்."

"பால் வேணாம். இந்த வெயிலுக்கு இதமா, கூல்டிரிங்ஸ் வாங்கிக் கொடு.


- பா. ஜெயக்குமார்



''ஈ காட்டுடா கண்ணா பார்க்கலாம்.''

''அதோ பறக்குதே டாக்டர்...!''

– சீர்காழி. வி. ரேவதி





நமக்கு வேண்டும் பூ


பூபூ பூபூ பூபூ பூபூ
மெல்ல மலரும் பூ என்ன?
விழிப் பூ!

பூபூ பூபூ பூபூ பூபூ
நாளும் மணக்கும் பூ என்ன?
உழைப் பூ!

பூபூ பூபூ பூபூ பூபூ
எவரும் என்றும் விரும்பும் பூ!
சுறு சுறுப் பூ!

பூபூ பூபூ பூபூ பூபூ
மூன்றும் ஒன்றாய்ச் சேரும்பூ?
களிப் பூ!

பூபூ பூபூ பூபூ பூபூ
நமக்கு வேண்டும் பூ மூன்றே!
விழிப்பு - உழைப்பு - சுறு சுறுப்பு!



குட்டி இந்தியா


குட்டி இந்தியா - என்ஊர்
குட்டி இந்தியா!

மாடிவீட்டு மார்கரெட்
மாத்துவீட்டு பாத்திமா
எதிர்த்த வீட்டு லட்சுமி
எல் லாரும் எங்கள் தோழர்!

பாவாடை சட்டை பிடிக்கும்
பளபளக்கும் ஸ்கர்ட்டு
கவுனு, சல்வார் கம்மீஸ்
கொஞ்சம் அதிகம் பிடிக்கும்!

இட்லி அப்பம் ஒருநாள்
இனிப்பு சோமாஸ் ஒருநாள்
பூரி லட்டு ஒருநாள்
ராஸ் மலாயும் தின்போம்!

மராத்தி இந்தி சிந்தி
மலை யாளப் பாட்டு பாடி
குஜ ராத்தி சேட்டு வீட்டில்
கும்மாளம் போடும் நாங்கள்-
வாழுகின்ற ஊரு, ஒரு
குட்டி இந்தியா, ஒரு
குட்டி இந்தியா!





கரடிக் கோப்பை கிரிக்கெட் போட்டி!

சிங்கராஜாவின் அரசவை கூடியிருந்தது. வழக்கமான பணிகள், விசாரணைகள் முடிந்ததும், அமைச்சர் புலியார் பணிவாக எழுந்தார்.

"அரசே, இளைஞர்கள் ஒரு கோரிக்கையோடு தங்களைக் காணக் காத்திருக்கிறார்கள்."

சிங்கராஜவின் அனுமதி கிடைத்ததும் ஒரு பெரிய கூட்டமே உள்ளே வந்தது. அதில் யானை புலி, கரடி, சிவிங்கி, காண்டாமிருகம், நீர்யானை, என்று எல்லா மிருகங்களிலும் இளைய வயதுள்ளவை இருந்தன.

"வந்துள்ளவர்கள் சார்பில் யாராவது ஒருவர் பேசுங்கள்" என்று அனுமதி கிடைத்த பிறகு குரங்கார் முன் வந்து பேசினார்.

"சிங்க ராஜா அவர்களே, இது முடியாட்சி என்றாலும் உண்மையில் காட்டு விலங்குக் குடியரசாட்சியாகத்தான் நடத்தி வருகிறீர்கள். காட்டு விலங்குக் குடிமக்களின் விருப்பத்தை அறிந்து, தேவையை அறிந்து, நலன்களைக் காக்கும் நல்லாட்சியாக நடத்தி வருகிறீர்கள். விலங்குகள் விரும்பியபடி மனிதர்களே வியக்கும் வண்ணம் நாட்டிய மேளா நடத்தினீர்கள். இவைகளுக்கெல்லாம் நன்றி கூறுவதுடன், இளைய விலங்குகள் சார்பில் நாங்கள் ஒரு கோரிக்கையை வைக்கிறோம். நாட்டில், உலகக் கிரிக்கெட் தங்கக் கோப்பைப் போட்டி, வில்ஸ் தங்கக் கோப்பைப் போட்டி, பெப்ஸி கோப்பைப் போட்டி என்று பலவிதமான கிரிக்கெட் போட்டிகளை மக்கள் நடத்தி கலகலக்க வைக்கிறார்கள். நமது காட்டிலும் ஏராளமான கிரிக்கெட் ரசிகர்கள், திறமையாக



ஆடக் கூடியவாகள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் மகிழ்விக்க நமது காட்டிலும் ஒரு தங்கக் கோப்பை கிரிக்கெட் போட்டியை நடத்த வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்."

குரங்கார் தனது பேச்சை முடித்துக் கொண்டு ஒதுங்கிக் கொண்டார்.

சிங்கராஜா, அமைச்சர் புலியாரைப் பார்த்தார்.

"மகாராஜா, நமது காட்டிலும் கிரிக்கெட் அபிமானிகள் ஏராளமானோர் இருக்கிறார்கள். கிரிக்கெட் ஆடத்தெரிந்த விலங்குகள் இருக்கின்றன. எத்தனை நாட்கள்தான் இவர்களெல்லாம், மனிதர்

கள் ஆடும் கிரிக்கெட் போட்டிகளையே பார்த்துக் கொண்டிருப்பார்கள்? ஆடத் துடிக்கும் இவர்களுக்கு நாம் ஒரு நல்ல வாய்ப்பைக் கொடுத்து, இவர்களுடைய கிரிக்கெட் ஆடும் திறமையை ஊக்குவிக்க வேண்டியது மிகவும் அவசியம்" என்றார் புலியார்.

சிங்கராஜா சிரித்துக் கொண்டார். பிறகு "சரி, உங்கள் விருப்பப் படியே நமது காட்டிலும் ஒரு தங்கக் கோப்பை கிரிக்கெட் போட்டியை நடத்த அனுமதி வழங்குகிறேன். இதன் ஏற்பாடுகளை நமது அமைச்சர் புலியார் கவனிப்பார்'' என்றார்.

கை தட்டல் ஓசை அடக்க நீண்ட நேரமானது. அனுமதி வாங்கிக் கொண்டு கரடியார் பேசமுன் வந்தார்.

"அரசே, தங்கக் கோப்பை கிரிக்கெட் போட்டியை நடத்த அனுமதியளித்த தற்காக நன்றி. இந்தக் கோப்பையை யார் தரப்போகிறார்கள்?"

வயதில் மூத்த அனுபவ சாலியான கரடியார் இக்கேள்வியைக் கேட்டதும் சிங்கராஜாவின் முகத்தில் வியப்பு நிறைந்தது.

''இதென்ன கேள்வி கரடியாரே! போட்டியை நடத்த அனுமதித்தது சிங்கராஜாவாகிய நான்தான். எனவே, போட்டிக்கு உரிய தங்கக் கோப்பையை சிங்கராஜாவின் அரசாங்கம்தான் செய்து தரும்?"

"அதைப்பற்றித்தான் ஒரு கோரிக்கை அரசே. நாட்டில், தங்கக் கோப்பைப் போட்டிகளை தனியார் நிறுவனங்கள் தான் நடத்துகின்றன. அதாவது, போட்டியை நடத்தும் பொறுப்பு, செலவு முழுவதையும் கம்பெனிகளே ஏற்கின்றன."

"நாட்டில் அதற்கான வசதி இருக்கிறது. காட்டில் அந்த அளவுக்குச் செலவு செய்ய யாரால் முடியும்?"

"அரசே, எனக்கு ஒரே மகன் இருந்தான். அவனுக்குக் கிரிக்கெட் என்றால் பைத்தியம். தன் பெயரைக் கூட கிரிக்கெட் தாசன் என்று வைத்துக் கொண்டான். அந்த கிரிக்கெட் ஆசையே அவனுக்கு எமனாக முடிந்தது. அவனுடைய புத்தி சாலித் தனத்தையும் கிரிக்கெட் ஆசையையும் கண்ட ஒரு சுயநலவாதி, தன்னுடன் வந்தால் அவனை சர்க்கஸில் சேர்த்து கிரிக்கெட் ஆட வைப்பதாகக் கூறிக் கூட்டிக் கொண்டு போய்விட்டான். ஒரு சர்க்கஸுக்கு அவனை விற்று விட்டான். இப்பொழுது எந்த நாட்டில் எந்த நகரத்தில் இருக்கிறானோ!" என்று கண் கலங்கிய கரடியார், "அவன் நினைவாக நான் ஒரு தங்கக் கோப்பையைப் பரிசளிக்க விரும்புகிறேன். அதோடு, இந்தப் போட்டி, ஐந்து காடுகளைச் சேர்ந்த விலங்குகளும் கலந்து கொள்ளும் மகத்தான போட்டியாகவும் இருக்க வேண்டும் என்பதும் என் விருப்பம்" என்று முடித்தார் கரடியார்.

"ஐந்து காடுகளைச் சேர்ந்த விலங்குகளும் பங்கு கொள்ளும் போட்டியாக நடத்தினால் நமக்கும் பெருமைதான். ஆனால் அதற்கு கிழக்குமலை, மேற்கு மலை, வடக்கு மலை, தெற்குமலை சிங்கராஜாக்கள் சம்மதிக்க வேண்டுமே?" என்று கேட்டார் சிங்கராஜா.

"நாம் முயற்சி செய்தால் அவர்கள் ஒத்துழைப்பார்கள் என்று நினைக்கிறேன்" என்றார் புலியார்.

"அப்படியானால் அதற்கான முயற்சிகளை உடனே ஆரம்பியுங்கள். இந்தப் போட்டியை மூத்த காட்டுக் குடிமகன் கரடியாரின் விருப்பப்படி கரடிக் கோப்பை கிரிக்கெட்போட்டி என்றே அழைப்போம்" என்றார் சிங்கராஜா.

கரடிக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான ஏற்பாடுகள் மளமளவென்று நடந்தன. மற்ற நான்கு மலைக்காட்டு சிங்கராஜாக்களும் இதற்கு ஒத்துழைக்க விருப்பம் தெரிவிக்கவே, மிகப்பெரிய அளவில் ஏற்பாடுகள் நடந்தன. துவக்க விழாவை நடுமலைக்காட்டில் வைத்துக் கொண்டு,

---

"ஏண்டா தேர்வுக்குப் படிக்கலையா? சோகமா இருக்கே?"

"எனக்கு அடுத்த நம்பரான பாபுவுக்கு உடம்பு சரியில்லையாம்!"

—அனந்தபுரம் இரா. சிவராஜ்





இறுதி ஆட்டத்தைத் தெற்கு மலைக் காட்டில் வைத்துக் கொள்வது என்றும் முடிவானது. ஏற்கனவே டி.வி.யின் தாக்கம் எல்லாக் காடுகளிலும் வாழ்ந்த விலங்கு பறவைகளிடையே இருந்ததால், எல்லாமே எதிர்பார்த்தற்கும் மேலாக மிகுந்த ஆர்வம் காட்டின.

"கரடிக் கோப்பையை வழங்கப் போகும் மூத்த விலங்கார் கரடியார், நமது நடுக்காட்டைச் சேர்ந்தவர். போட்டியை நடத்த வேண்டும் என்ற யோசனையைத் தொடங்கியதே நம் நடுக்காட்டு அரசுதான். அதனால் இறுதி ஆட்டம் வரையிலாவது நமது நடுக்காட்டு அணி வரவில்லை என்றால் அது நமக்குத்தான் கேவலம்" என்று புலியாரிடம் கூறினார் சிங்கராஜா.

"இந்தச் சந்தேகமே உங்களுக்கு வேண்டாம். நம் நடுக்காட்டு அணியினர் மிகப் பிரமாதமாக விளையாடுவார்கள். கடுமையாக பிராக்டிஸ் பண்ணுகிறார்கள். அதனால், கரடிக் கோப்பை நம் நடுக்காட்டு அணிக்கே கிடைக்கும்" என்றார் புலியார்.

"இருந்தாலும், கரடிக் கோப்பையை நம் நடுக்காட்டு அணிவென்றால், நம் அணியினர் ஒவ்வொருவருக்கும் வசிக்க தனி குகை, ஆயிரம் பொற்காசுகள் பரிசு தருவதாக அறிவியுங்கள்" என்றார் சிங்கராஜா.

நடுக்காட்டு சிங்கராஜாவின் இந்த அறிவிப்பைப் பார்த்ததும், மற்ற சிங்கராஜாக்கள் சும்மா இருப்பார்களா? அவர்களும் இதேபோன்ற ஓர் அறிவிப்பைச் செய்து தங்கள் அணியினரை ஊக்குவித்தனர்.

இதற்குள் இறுதி ஆட்டம் நடைபெற இருந்த தெற்கு மலைக் காட்டின் சிங்கராஜா, தன் ஆலோசகர்களுடன் கலந்து ஆலோசித்தார். இறுதி ஆட்டத்தை நடுமலைக் காட்டில் வைத்துக் கொண்டதால், மிகப்பெரிய ஸ்டேடியம் தயாரானது. போட்டி மனப்பான்மையும், தந்திரம், வஞ்சகம், பொறாமை எல்லாம் கொண்டவர் நடுமலைக் காட்டு சிங்கராஜா. போட்டிக்கு கரடிக்கோப்பை என்று பெயர் வைத்ததையே அவர் விரும்ப

வில்லை. எனினும், மற்ற நான்கு ராஜாக்களும் மூத்த காட்டுக் குடிமகனான கரடியாருக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று கூறிவிட்டதால் வேறு வழியின்றி ஒப்புக் கொண்டார். தயாரான, ஸ்டேடியத்திற்குத் தன் பெயரான "தெற்கு மலைக்காட்டு சிங்கராஜா ஸ்டேடியம்" என்று பெயர் கொடுத்தார். எப்படியாவது நடுமலைக் காட்டு சிங்கராஜாவை மட்டம் தட்டி, அவருக்கு இருந்த செல்வாக்கை அழிக்க வேண்டும் என்பதே அவர் இலட்சியமாக இருந்தது.

இறுதி ஆட்டத்திற்கு விளையாட நடு மலைக் காட்டு அணியும், தெற்கு மலைக் காட்டு அணியும் தேர்வு பெற்றன.

"மகாராஜா, கோப்பை நமக்குக் கிடைப்பது கஷ்டம். இதுவரை நாம் வந்ததே பெரிய சாதனைதான். நடுமலைக்காட்டு அணி, மிக நன்றாக விளையாடும். தீவிரமான பயிற்சி வேறு. அவர்கள் இலட்சியத்திற்காக ஆடுகிறார்கள்," என்று கையைப் பிசைந்தார் அமைச்சர் நரியார்.

'நீங்கள்தான் தந்திரத்திற்குப் பேர் போனவர் ஆயிற்றே? என்னமாவது பண்ணி, நம் அணி வெற்றி பெற்று, நாம் கோப்பையை வெல்ல வேண்டும். நம் அணி தோற்றுவிட்டால், நீங்கள் அமைச்சராக நீடிக்க முடியாது. காட்டை விட்டே ஓட்டி விடுவேன்!'' என்று இறுதி எச்சரிக்கை தந்தார் தெற்கு மலைக் காட்டு சிங்கராஜா.

தந்திரத்திற்குப் பெயர்போன மூத்த நரிகளுடன் அமைச்சர் நரி கலந்து ஆலோசித்தார்.

"எப்படியாவது முதலில் பேட் செய்வது நம் அணியாக இருந்தால், இரண்டாவதாக பேட் செய்யும் நடுக்காட்டு அணி கண்டிப்பாகத் தோல்வி அடையும். நாம் அமைத்துள்ள 'பிட்ச்'சின் சிறப்பு அதுதான்'' என்றார் அணித் தலைவர்.

அமைச்சர் நரியாரின் முகத்தில் பளீரென்று வெற்றிச் சிறப்பு மிளிர்ந்தது. சரியான தந்திரம் ஒன்று அவர் மனதில் தோன்றிவிட்டது!

இறுதிப் போட்டிநாள். போட்டியைக் கண்டுகளிக்க ஐந்து சிங்கராஜாக்களும் வந்திருந்தனர். போட்டி ஆரம்பமாகுமுன், யார் 'பேட்' செய்வது என்பதற்கு 'பூவா தலையா' போட்டார்கள்.

"எங்களுக்குத் தலை" என்றார் தெற்குக் காட்டு அணித் தலைவர் கொரில்லா குரங்கார்.

முன்பே தயார் பண்ணி வைத்திருந்த இரு பக்கமும் தலை கொண்ட நாணயத்தை, மேலே சுண்டி விட்டனர். நாணயம் கீழே விழுந்ததும், யானையார் ஓடி அதை மண்ணுடன் அமுக்கி விடவேண்டும். தலை தான் மேலே தெரியும். ஆட்டத்தைத் துவங்க அது போதும் என்பது நரியாரின் திட்டம். நாணயம் கீழே விழுந்ததும், யானையார் ஓடி அமுக்கினார். அவர் காசை அமுக்கினது தான் தாமதம், எங்கிருந்தோ ஓடிவந்த ஒரு குரங்கு ரசிகர், புதைந்த நாணயத்தை எடுத்துக் கொண்டு ஓடியே போய் விட்டார்!

இரு அணியினரும் ஓடி வந்து பார்த்தனர்.

''இன்னொருமுறை பூவாதலையா போட வேண்டாம். இதோ, நாணயம் மண்ணில் புதைந்து அச்சுமாதிரி முழுசாகத் தலை பதிந்திருக்கிறது. பதிந்திருக்கும் பக்கம் தலை என்றால், மேல் பக்கம் பூவாகத்தான் இருக்க முடியும். பேட் செய்ய வேண்டியது எங்கள் அணியே'' என்றார் நடுமலைக்காட்டு அணியின் கேப்டன்.


யாராலும் மறுத்துப் பேச முடியவில்லை. கரடிக் கோப்பை நடுமலைக் காட்டு அணிக்கே கிடைத்தது என்பதைச் சொல்லவா வேண்டும்? பாராட்டு விழா நடக்கிறதாம். அழைப்புக் கொடுக்க தெற்கு மலைக்காட்டு சிங்கராஜாவின் அமைச்சர் நரியாரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவர் போன இடம் தெரியவில்லையாம்! உங்களுக்காவது தெரியுமா? சொல்லுங்களேன்!

'' 3சப்ஜெக்ட்லே 100 மார்க் வாங்கியிருக்கேன்டாடி!''

''நிஜமாவா!''

''கணக்குல 30, ஆங்கிலம் 30, தமிழ் 40.''

— சீர்காழி. வி. ரேவதி





உலகம் முழுவதும் உள்ள எல்லா வயது மக்களாலும் விரும்பிச் சுவைக்கப்படுவது ''ஐஸ்கிரீம்''. இதைச் சுவைக்க பெரிய பொருளாதார வசதி தேவை இல்லை. இரண்டு ரூபாயில் இருந்து இருநூறு ரூபாய் வரை, இடத்தைப் பொறுத்து தரத்தைப் பொறுத்து இந்தியாவில் இவை கிடைக்கின்றன. விமானத்தில் பயணம் செய்யாதவர்கள் இருக்கலாம். ஆனால், ஐஸ்கிரீமைச் சுவைக்காதவர்கள் கண்டிப்பாக இருக்க முடியாது.

இப்படி உலகெங்கும் மக்களால் விரும்பிச் சுவைக்கப்படும் ஐஸ்கிரீமின் வரலாறு என்ன? இது எந்த நாட்டில் தோன்றியது? இது தங்கள் நாட்டில்தான் தோன்றியது என்று இந்தப் பெருமைக்காகப் பல நாடுகள் உரிமை பாராட்டுகின்றன.

பல பொருள்களுக்குத் தாயகமான சீன நாட்டில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அரச குடும்பத்தினருக்கு ஐஸ்கிரீம் சாப்பிடும் வழக்கம் இருந்திருக்கிறது. மாவீரன் அலெக்ஸாந்தர் காலையில் உடற்பயிற்சி செய்யு முன்னும், செய்த பின்னும் தேனும் பாலும் கலந்த ஐஸ்கிரீமைச் சாப்பிட்டார். ரோமாபுரி மன்னர்கள் தேனும் பாலும் கலந்த ஐஸ்கிரீம் என்ற கூழை விதம்விதமான கோப்பைகளில் இருந்து, வண்ணக் கரண்டிகளில் எடுத்துத் தின்றார்கள்.

சீனாவில் இருந்து மார்க்கோபோலோ, வெனிஸ் நகருக்குச் சென்றபோது, அங்கே ஐஸ்கிரீம் கூழைச் செய்து அரசருக்கு அறிமுகப்படுத்தினாராம். வெனிஸ் இளவரசிக்கும் பிரான்ஸ் மன்னருக்கும் திருமணமானது. இளவரசி, தன் பிறந்த வீட்டில் இருந்து பிரான்சுக்குக் கொண்டு போன சீர் வரிசையில், ஐஸ்கிரீம் தயாரிப்பதில் வல்லவர்களான இருபது பேர் இருந்தனராம்!

பிரான்ஸ் இளவரசி, இங்கிலாந்து மன்னர் முதலாவது சார்லசை மணந்ததும், ஐஸ்கிரீம் இங்கிலாந்தை அடைந்தது. ஆனால், சார்லஸ் மன்னர் சுயநலவாதி. ஐஸ்கிரீம் தயாரிப்பை வெளியே பரவ விடாமல் கவனித்துக் கொண்டார். அரசர் அளிக்கும் விருந்துகளில் பிரபுக்களுக்கு மட்டுமே இது பரிமாறப் பட்டது. இதைத் தயாரிப்பதில் வல்லவர்கள் மாளிகைச் சிறையில் அடைத்து வைக்கப் பட்டனர்.

ஒருமுறை மன்னரின் பிறந்த நாளை ஒட்டிப் பெரிய விருந்து தயாரிக்கப்பட்டது. விருந்தில் பாயசம் போன்ற ஒரு இனிப்பும், பழரசமும் செலவழியாது ஏராளமாக மிஞ்சி விட்டது. அதை ஒன்றாகக் கலந்து பாத்திரத்தில் ஊற்றி, திறந்த வெளியில் வைத்தாள் தலைமை சமையற்காரி. மறுநாள் தன் வீட்டுக்குக் குழந்தைகளுக்குக் கொண்டு போய்க் கொடுக்கும் எண்ணம் இருந்ததோ என்னவோ? இரவு பெய்த பனிமழையில் ஊறிய பழரச பாயசம் கலந்த கலவை, புதுச்சுவையோடு, இனித்தது. தற்செயலாக அங்கே வந்த மன்னர் அதைச் சுவைத்துப் பார்த்து விட்டு, "இந்த ஐஸ்கிரீம் எப்படி இங்கே வந்தது?" என்று கேட்க, அதுவே ஐஸ்கிரீம் என்ற உண்மை பரவியது. ஐஸ்கிரீம் பிறந்தது இப்படித் தற்செயல் நிகழ்ச்சியாகத்தான் இருக்க வேண்டும்.

இன்று உலகம் முழுவதும் பரவியுள்ள ஐஸ்கிரீமை மிகச் சிறந்த முறையில் தயாரிக்கும் நாடாக அமெரிக்காவே விளங்குகிறது. ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் ஒரு தீவிரமான ஐஸ்கிரீம் பிரியர். சுதந்தர நாள் விழா விருந்தில், ஐஸ்கிரீமுக்குத் தனிச்சிறப்பு அளித்தார். அரசு விருந்துகளில் ஐஸ்கிரீம் வழங்கும் முறை இவராலேயே தொடங்கப் பட்டது.



அமெரிக்க முதலாளிகள், வியாபார நோக்கில் ஐஸ்கிரீம் தயாரிப்பில் ஆராய்ச்சிகளை நடத்தி, பல புதுமைகளைச் செய்து வருகிறார்கள். கையால் சுற்றி, வீட்டிலேயே ஐஸ்கிரீம் தயாரிக்கும் சாதனம் கண்டுபிடிக்கப்பட்டதும் அமெரிக்காவில்தான். இதைக் கண்டுபிடித்த பெருமைக்குரியவர் ஒரு பெண்மணி. பெயர் நேன்ஸி ஜான்சன். ஆண்டு 1846. ஐஸ்கிரீம் தயாரிக்க முதலில் தொழிற்சாலை தொடங்கப்பட்டதும் அமெரிக்காவில் உள்ள பால்டிமோர் (BALTIMORE) என்ற ஊரில்தான். ஆண்டு 1859.

அமெரிக்க மக்களுக்கு ஐஸ்கிரீமின் மேல் உள்ள ஆசை அளவிட முடியாதது! புதிய சத்து புதிய சுவை, புதிய வடிவம், போன்றவற்றில் ஐஸ்கிரீமைத் தர, அமெரிக்கத் தயாரிப்பாளர்களிடையே கடுமையான போட்டா போட்டி நடக்கிறது. புதிய தயாரிப்புக்களுக்குப் பரிசும் வழங்குகிறார்கள். கண்டுபிடிக்கப்படும் எல்லாப் புதுமைகளுக்கும் தக்க வரவேற்பு இருக்கும் என்று கூற முடியாது. 1874 ஆம் ஆண்டில் ஐஸ்கிரீம் கலந்த "ஐஸ் சோடா" என்ற குளிர்பானம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்குக் கிடைத்த பெரும் வரவேற்பு (சூழ்) ஐஸ்கிரீம் தயாரிப்பை மிகக் கடுமையாகப் பாதித்தது. இதைக் குடிப்பது மத நம்பிக்கைக்கு எதிரானது என்ற எதிர்வாதம் கூட பிரச்சாரம் செய்யப்பட்டது!

ஐஸ்கிரீம் ஆராய்ச்சித் துறையில் அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் தனி ஆர்வம் காட்டி வருகின்றன. குறிப்பாக ஒஹியா (OHIO) பல்கலைக் கழகத்தில் இதற்கெனத் தனித் துறையே இயங்கி வருகிறது.

ஐஸ்கிரீமைத் தயாரிப்பதிலும், வடிவமைப்பதிலும், புதிய சுவை, மணங்களை அளிப்பதிலும் தீவிர ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன.

ஐஸ்கிரீம் தயாரிப்பில் அமெரிக்காவில் ஏற்பட்ட சில முக்கிய மாறுதல்கள்.

- 1904 ஆம் ஆண்டு செயின்ட் லூயி பொருட்காட்சியில் அறிமுகமான கோன் (வடிவ) ஐஸ்கிரீம்.
- 1919 ஆம் ஆண்டில் அறிமுகமான

விதம் விதமான ஐஸ்கேண்டிகள்.

• 1925 ஆம் ஆண்டில் HOWARD JOHNSON என்ற கடைக்காரர் அறிமுகப் படுத்திய 4 புதிய சுவைகள். 1928 ஆம் ஆண்டில் இவரே அறிமுகம் செய்த புதிய 28 மணங்கள்!

• 1950 ஆம் ஆண்டில் BURTON BASKIND IRVINE ROBINS என்ற கலிபோர்னியா ஐஸ்கிரீம் கம்பெனிக்காரர் கள் அறிமுகம் செய்த 31 புதிய சுவைகள்/ மணங்கள்!

இன்று ஐஸ்கிரீம்கள் 500 சுவை/ மணங்களில் கிடைக்கின்றன என்றாலும் அதிகம் விரும்பிச் சுவைக்கப்படுபவை வனிலா, சாக்லேட், ஸ்ட்ராபெர்ரி ஆகியவை மட்டுமே. இவையே அதிக மக்களால் பெரி தும் வரவேற்று சுவைக்கப்படுபவை.

வெப்பம் மிக்க நாடான இந்தியாவில் ஐஸ்கிரீமுக்கு அதிக வரவேற்பு இருப்பது அதிசயம் அல்ல. கோடையில் இது தனித்த வரவேற்பைப் பெற்றாலும், ஆண்டு முழுவ தும் இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. பெரிய விருந்துகளில் கடைசியாக ஐஸ்கிரீம் தருவது வழக்கமாகி விட்டது. "பருப்பில்லாமல் கல் யாணமா?" என்பது போல் "ஐஸ்கிரீம் இல்லாமல் விருந்தா?" என்று கேட்கக்கூடிய நிலை.

நம் நாட்டில் அதிக அளவில் ஐஸ்கிரீம் சுவைக்கும் மாநிலம் குஜராத். பிறகு ராஜஸ்தான், டெல்லி. ஏழாவது இடம்தான் தமிழ்நாட்டுக்கு. இரவு சாப்பாட்டுக்குப் பின் கும்பலாகவோ, தனியாகவோ சென்று ஐஸ்கிரீம் சுவைக்கும் வழக்கம் குஜராத், ராஜஸ்தான், டெல்லியில் உண்டு. இங்கெல் லாம் விடிய விடிய ஐஸ்கிரீம் கடைகள் திறந்து வைக்கப்படுகின்றன.

தரமான ஐஸ்கிரீமில், பால் புரதச் சத்துகளும், வைட்டமின்களும் உள்ளன. அளவோடு, அளவான ஜில்லிப்பில் இவை களைச் சுவைத்தால் உடலுக்கு நல்லதே.

"ஐஸ்கிரீம் வேண்டா மனிதரும் உண்டோ!"

அட்டையில் ஐஸ்கிரீம் சுவைப்பது
சிறுமி ஆர். திவ்யபாரதி,
சிறுவன் கே. ஸ்ரீநிவாஸ்.
அட்டை வண்ணப்படம் : ஸ்ரீஹரி



மலேரியா ஏன் விட்டு விட்டு வருகிறது?

டாக்டர் கு. கணேசன்

● வி. பிரபாகர், விருத்தாசலம்.

? மலேரியாக் காய்ச்சல் ஏன் விட்டு விட்டு வருகிறது?

! மலேரியாக் காய்ச்சல் 'பிளாஸ்மோடியம்' என்ற ஒட்டுண்ணிகளால் ஏற்படுவதை நீ அறிவாய் தானே? இந்தக் கிருமிகளில் நான்கு வகை உண்டு. ஃபால்சிபாரம், ஓவேல், வைவாக்ஸ், மலேரியே என்று அவற்றுக்குப் பெயர்கள். இவை நம் உடம்பில் கல்லீரலில் குடியிருக்கும். ஒரு குறிப்பிட்ட இடைவெளிகளில் இக்கிருமிகள் ரத்தத்தில் கலந்து காய்ச்சலை உண்டு பண்ணும். இவை விட்டு விட்டு ரத்தத்தில் கலப்பதால் நமக்குக் காய்ச்சலும் விட்டு விட்டு வருகிறது.

● ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர்.

? காட்ராக்ட் என்றால் என்ன? இது எதனால் வருகிறது?

! காட்ராக்ட் என்பது கண்புரை நோய். கண்ணில் உள்ள விழிலென்ஸ் ஒளி ஊடுருவும் தன்மையை இழப்பது. வயதாகி விட்டால் தலைமுடி நரைக்கிறதல்லவா? அது மாதிரித்தான் இதுவும். நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வழக்கமாக பளிங்கு போல் இருக்கும் விழிலென்ஸ் சிறிது சிறிதாக இயல்பு மாறி சாக்பீஸ் கலருக்கு மாறிவிடும். இதனால் லென்ஸ் வழியாக ஒளி உள்ளே செல்ல முடியாது. இதற்குப் 'புரை வளர்தல்' என்று பெயர். முதுமைதான் இதற்கு முக்கிய காரணம் என்ற போதிலும் குழந்தை களுக்கும் இது வரலாம். சர்க்கரை நோய் இந்த நோய் வருவதைத் துரிதப்படுத்தும். இளமையில் காட்ராக்ட் வருவதற்குச் சர்க்கரை நோய்தான் பிரதான காரணம். இவை தவிர, கண்ணில் அடிபடுவது, கண்ணுக்குள் வீக்கம் ஏற்படுவது, நோய்த் தொற்று உண்டாவது, ஸ்டீராய்டு மருந்துகளை அளவுக்கதிகமாக உபயோகிப்பது போன்ற விஷயங்களாலும் காட்ராக்ட் நோய் வருகிறது.

● இரா. சந்திரசேகரன், விருதுநகர்.

? எய்ட்ஸ் நோய் உள்ளவர்கள் தலை வாரிய சீப்பினால் அடுத்தவர் தலை வாரினால் எய்ட்ஸ் நோய் பரவ வாய்ப்புள்ளதா?

! வாய்ப்பில்லை, தம்பி! பயப்பட வேண்டாம்.


● எஸ். வினோத்பாபு, கபிஸ்தலம்.

? பெனிசிலின் ஊசி எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?

! பெனிசிலின் ஊசி மருந்து ஆரம்பத்தில் 'பெனிசிலியம் நொட்டேட்டம்' (Penicillium Notatum) என்ற பூஞ்சைக் காளானிலிருந்து, தயாரிக்கப்பட்டது. பின்பு 'பெனிசிலியம் கிரைசோஜினம்' (Penicillium Chryosogenum) என்ற பூஞ்சைக் காளானிலிருந்து தயாரிக்கத் தொடங்கினர். இரண்டாவதாகக் கூறப்பட்ட பூஞ்சைக் காளானிலிருந்து பெனிசிலின் மருந்தை மிக அதிக அளவில் தயாரிக்க முடிகிறது.

● த. பரதன், திருவாரூர்.

? போலியோ தடுப்பு இயக்கத்தில் 'பல்ஸ் போலியோ' என்று



கேட்கட்டுமா டாக்டர்?

சொல்கிறார்களே? முன்பெல்லாம் 'போலியோ மருந்து' என்று தானே சொல்வார்கள்? இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

! நல்ல கேள்வி, பரதன். இந்தியாவில் தேசிய அளவில் ஏற்கெனவே ஒரு போலியோ ஒழிப்பு இயக்கம் நடைமுறையில் உள்ளது. இதையும் மீறி நம் நாட்டில் ஆங்காங்கே ஆண்டு தோறும் குழந்தைகளுக்கு போலியோ நோய் வந்து கொண்டுதானிருக்கிறது. ஆகையால் இந்த நோயை முற்றிலும் ஒழிப்பதற்காக மற்றொரு முனைப்பான திட்டம் தேவை என்று உலக சுகாதார நிறுவனம் விரும்பியது. அதன்படி சென்ற டிசம்பர் 9, ஜனவரி 20 தேதிகளில் இந்தியா முழுவதும் ஒரே நாளில் 3 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் அனைவருக்குமே போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்டது. எந்தப் போராட்டம் என்றாலும் அதற்கு ஒரு பெயரைக் கொடுத்து விடுவது நாட்டு நடைமுறை. அந்தக் காலத்தில் 'கலிங்கத்துப் போர்' என்பதிலிருந்து இந்தக் காலத்து 'அறிவொளி இயக்கம்' வரை! இது போலியோவுக்கு எதிரான போராட்டம். ஆகவே, 'பல்ஸ் போலியோ தடுப்புத்திட்டம்' என்று பெயர் கொடுத்து விட்டார்கள். இதன் பொருள் : 'தீவிர போலியோ தடுப்பு இயக்கம்'. பெயர்தான் புதிதே தவிர இந்த இரண்டு இயக்கங்களிலும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் தடுப்புச் சொட்டு மருந்து ஒன்றுதான். அது போலியோ சொட்டு மருந்து!

● *எஸ். ரேணுகா, நீடாமங்கலம்.*

? குழந்தைகளுக்கு தினந்தோறும் காபிக்குப் பதிலாக 'ஹார்லிக்ஸ்' தரலாமா?

! தரலாம். இரண்டு அல்லது மூன்று முறை மட்டும்!

● *பி. மீனாட்சி, மன்னார்குடி.*

? கண்ணில் குறைபாடு உள்ளவர்கள் கண்தானம் செய்யலாமா?

! கண்ணில் 'கார்னியா' எனப்படும் கருவிழியில் குறை உள்ளவர்கள் மட்டும் கண்தானம் செய்ய முடியாது. மற்றபடி காட்ராக்ட், மாலைக்கண் நோய், விழித்திரை நோய், மாறுகண், கிட்டப்பார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து உள்ளவர்களுக் கூடக் கண்தானம் செய்யலாம்.

● *த. சுபாஷ்குமார், எரயம்பட்டி.*

? காயங்களுக்கு முகப்பவுடர் போடுவது சரியா?

! சரியில்லை சுபாஷ்குமார். காயம் ஏற்பட்டவுடன் அதைத் தண்ணீரில் கழுவி, துடைத்து, சுத்தமாகப் போட்டால் நோய்த்தொற்று உண்டாகும். காயம் சீக்கிரம் ஆறாது. அப்படியே பவுடர் போட விரும்பினால் 'ஆண்டிபயாட்டிக்' பவுடர் ஒன்றை காயத்தின் மீது போடலாம். வேறு எந்தப் பவுடரையும் அதில் போடக் கூடாது.

● *பி. கீதா, புதுடெல்லி.*


? சுவாசக் கோளாறுகள் உள்ளவர்களுக்கு மாற்று உறுப்புகளைப் பொருத்தி சரி செய்ய இயலுமா?






! 'சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ்' (Cystic Fibrosis) என்ற நோய் காரணமாக ஏற்படுகின்ற சுவாசக் கோளாறுக்கு மாற்று நுரையீரலைப் பொருத்தி சரி செய்கிறார்கள். இது நம்நாட்டில் இல்லை! அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற வெளிநாடுகளில்! இந்த நவீன சிகிச்சை வெகு விரைவில் இந்தியாவுக்கும் வரவிருக்கிறது.

● *ஜே. குமரன், கோட்டுச்சேரி.*





? முந்திரி பருப்பை அதிகமாகச் சாப்பிட்டால் அது தசையை அரித்து விடுமா டாக்டர்?

! இல்லை, குமரன்! முந்திரிப் பருப்பு நல்ல சத்துள்ள உணவு. கொழுப்பு, புரதம், வைட்டமின்கள், தாதுக்கள் நிறைய அதில் உள்ளன; உடல் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவது. இதை அதிகமாகச் சாப்பிட்டால் கொழுப்புச் சத்து அதிகரிக்கும். தசையை அரிக்காது.






கோடை விடுமுறைப் போட்டி – 2

இங்கே மொத்தம் 21 படங்கள் உள்ளன. இவைகளில் உள்ளவை எல்லாமே, 4 அல்லது 3 எழுத்துக்கள் கொண்டவை. இவைகளில், ஏழு படங்களில் உள்ளவைகளின் முதல் இரண்டு எழுத்தையும், ஏழு படங்களில் உள்ளவைகளின் கடைசி இரண்டு எழுத்துக்களையும் சேர்த்தால், மீதி உள்ள ஏழு படங்களிலுள்ளவை (4 எழுத்துக் கொண்டவை) கிடைக்கும். உதாரணம் "கரும்பு" "திருடன்". கரும்பிலுள்ள முதல் இரண்டெழுத்தான "கரு"வையும், திருடனில் உள்ள கடைசி இரண்டெழுத்தான "டன்"னையும் சேர்த்தால் வருவது கருடன் (படத்தில் உள்ளது.) இதே போல் மற்ற ஆறுக்கும் கண்டுபிடித்து எழுதியனுப்புங்கள். இதற்கு முதலில் நீங்கள் செய்ய வேண்டியது, மீதி 18 படங்களில் உள்ளவைகளை தனித் தாளில் எழுதிச் சிந்திப்பது.. உதவக்கூடிய குறிப்பு : 4 அல்லது 3 எழுத்துக் கொண்டவை. உங்களால் கண்டுபிடிக்க முடியும். மறக்காது உங்கள் பெயர், முகவரியை எழுதுங்கள். முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முகவரிக் கூப்பன் இல்லாது வருபவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்திய தொடர்பு முகவரியைக் கட்டாயம் தரவேண்டும். முடிவு தேதி 30.6.96. தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு கோகுலம் அலுவலகம் பொறுப்பல்ல. ஒன்றுக்கு மேல் சரியான விடை இருந்தால் குலுக்கல் முறையிலேயே பரிசு முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர், கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 97.





☒ "தும்பியின்" படக்கதை உலகின் உன்னதமான பிறவியாகிய நாய்களின் உயர்வைக் காட்டியது. சில இடங்களில் உருகி விட்டேன். படமும் அமைப்பும் அற்புதம். - நாகை. ட. ர. மகேஸ்வரி, கபிஸ்தலம் எஸ். வினோத் பா. பு. பரங்கிப்பேட்டை காசி. நடராஜன், நெற்குப்பை கி. மனோகரன், பவித்திரமாணிக்கம் டி. முருகேசன், சோழன்மாளிகை நா. அன்பழகன், ஆரணி ப. ஞானமூர்த்தி, புத்திராம்பட்டு கோ. மதிவாணன், திருச்சி இரா. சிவக்குமார்.

☒ 'சாட் பீட் சீத்' ஏன் முழு நாவலை எழுதும்படி துப்பறியக் கூடாது? - வேனுப்பட்டி மா. அரியரத்தினம், சிவகங்கை து. வஹாப், கபிஸ்தலம் என். வினோத்பாபு, சின்னசேலம் ஆர். பிரசன்னகுமார், தேவனாங்குறிச்சி பா. வடிவேல், விருத்தாசலம் வி. பிரபாகர், மணிநகரம் ம. இராஜ்குமார், விழுப்புரம் வை. சண்முகம், புத்திராம் பட்டு கோவி. அஞ்சகம், கருமத்தம்பட்டி இரா. அருண் பிரகாஷ்.

☒ 'படிக்க வந்த பாட்டி' - அறிவொளி இயக்கம் செய்ய வேண்டிய மகத்தான பணிக்கு மாலை அணிவித்த மாதிரி இருந் தது. - திண்டிவனம் மா. ஸ்வரூப், எருக்கஞ்சேரி வி. திருவாணன், மாயனூர் வா. பெர்னான்டஸ், சர்க்கார் கொல்லப் பட்டி பெரு. இளங்கம்பன், சின்னசேலம் இரா. பிரசன்னகுமார்.

☒ உலகக் கோப்பைப் போட்டியை சிறுவர் சிறுமியர் அலசினவிதம், பெரிய கிரிட்டிக்குகள் கூடச் செய்யாத நுணுக்கம்! - மாயூரம் து. பொன்னுசாமி, சிதம்பரம் வா. நாகராஜன், பேராவூரணி தா. செல்லத்தாயி, திண்டிவனம் மி. புவனகுமாரி, குடந்தை ஆர். எஸ். நாதன், திருச்சி இரா. சிவக்குமார், சின்னசேலம் ஆர். பிரசன்னா, கருமத்தம்பட்டி இரா. அருண் பிரகாஷ்.

☒ தேர்தலைப் பற்றி இத்தனை தெளிவாக சிறுவர்களுக்குப் புரியும் வண்ணம் கட்டுரை வெளியிட்ட பெருமை கோகுலத்திற்கே. - மாமண்டூர் கு. ராஜகோபால், சிறுவயல் எம். முத்துவேல், விருத்தாசலம் வி. பிரபாகர்.

☒ காட்டில் நாட்டிய மேனா - படித்து மகிழத் தெவிட்டாத கதை. என்ன சார், எழுதியவர் பெயரில்லையே! - சக்தி பூ. மாணிக்கம், பெரம்பலூர் கி. வனிதா, காங்கேயம் க. தீரசூரன், சின்னாளம்பட்டி பா. ராஜூ, கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு, புத்திராம்பட்டு கோவி. அஞ்சகம், கருமத்தம்பட்டி இரா. அனிதா ராஜப்பன்.

☒ 'வலமும் இடமும்' இதுவரை அறியாத கவனிக்கத் தவறிய பல உண்மைகளைத் தொகுத்துக் காட்டியது! - குடந்தை ஆர். எஸ். நாதன், கபிஸ்தலம் என். வினோத்பாபு, மணல்மேடு எஸ். பிரகாஷ்.


☒ 'தனக்கு வந்தால்' பரிசுக் கதை சிறுவர் கதை உலகில் ஒப்பற்ற கற்பனை! சிறுகதைப் பிரிவில் கோகுலம் சிறுகதைப் போட்டி தனித்த இடத்தைப் பெறும்! - விஜயமங்கலம் மா. கருணாகரன், மேட்டுப்பாளையம் வி. ஜெயந்தி, புத்திராம்பட்டு கோ. மதிவாணன்.

☒ என்ன சார்! 'எங்கள் ஊரில் நடந்தது' பகுதியில் நான் எழுதியதை வெளியிடும் போது ஊர் பெயரை 'கருப்பம்புலம்' என்பதற்குப் பதில் 'கறுப்பன் பாளையம்' என்று போட்டு விட்டீர்களே!
கருப்பம்புலம், பஞ்சவர்ணமகன்.

(இப்பொழுது சரிதானே! - ஆசிரியர்)

☒ 'ஐயாதான் நீதிபதி!' சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சிறுகதை - மன்னார்குடி து. கபேதா, திருமங்கலம் மா. சீதா, வெள்ளைக்காரன் பட்டி வீ. அகிலா, சாத்தூர், அகமத்பாட்சா நண்பர்கள், திருச்சி வி. ஆர். இருத்திகா, கருமத்தம் பட்டி அ. இராஜப்பன்.

☒ ஆதிரை பற்றிய கட்டுரையும் செய்திகளும் சுவையாகவும் அதிசயிக்கும்படியும் இருந்தன! - கருமத்தம்பட்டி அ. இராஜப்பன், ஆரணி ப. ஞானமூர்த்தி, திருச்சி இரா. திலீப். மற்றும் பலர்.



சாட் பீட் கீத்!

சாதிக்கின் முகம் திகைப்பால் மாறியதை பவானி கவனிக்கத் தவறவில்லை.

"என் கையடக்கக் கால்குலேட்டர் திருட்டுப் போய்விட்டது உண்மைதான் சாதிக். என்னை நம்பு. உனக்கு இரவல் கொடுக்க விருப்பமில்லாமல் நான் இதைச் சொல்லவில்லை. கால்குலேட்டர் மட்டுமா திருட்டுப் போச்சு? என் மாமா பிறந்த நாள் பரிசாகத் தந்த ஹீரோ பேனா, கைக்கடிகாரம் எல்லாம் போச்சு," என்றாள் பவானி.

"அதுதான் எப்படித் திருட்டுப் போச்சுன்னு கேட்கிறேன்? நீங்க இருப்பது ஃபிளாட்ஸ்ல. திருடன் 6வது மாடிக்கு எப்படி வந்தான்?"

"அதுதான் எனக்கும் புரியலே! எல்லா ஃபிளாட்ஸுக்கும் நடுவில்தான் மாடிப் படி இருக்கு. அதுக்குப் பக்கத்திலே லிஃப்ட். எல்லா ஃபிளாட்ஸுக்கும் ஒரு பால்கனியோட சின்ன வராண்டா இருக்கும். இங்கதான் துணி காய வைப்பாங்க. அதை ஒட்டி ஒரு

சின்ன பாபு

அறை. அதில் இரண்டு பெரிய ஜன்னல் இருக்கு. காத்துக்காகப் பெரும்பாலும் 6வது மாடில இருக்கும் ஃபிளாட்ஸ்காரங்க எல்லோருமே இந்த இரண்டு ஜன்னல்களையும் திறந்து வைத்துவிடுவோம். எந்தத் திருடனால் 6வது மாடிக்கு, பிடிமானமில்லாத இடத்தில், சுவர்க்காலை மீறிக் கொண்டு ஏறிவர முடியும்? இது வரை ஒரு துரும்புகூடத் திருட்டுப் போனது கிடையாது."

"இப்போ போயிடுத்தே?"

"அதான் பெரிய அதிசயமா இருக்கு சாதிக். 6வது மாடி ஃபிளாட்ஸ்காரங்க வீட்டுல எல்லாமே அன்னிக்கி இந்த மாதிரி சின்னச் சின்னப் பொருளா திருட்டுப் போயிருக்கு. எதிர் ஃப்ளாட்டுல பாக்கெட் அலாரம் கடிகாரம், குட்டி டிரான்சிஸ்டர். பக்கத்து ஃப்ளாட்டில பென்சில் டார்ச், கைக்கடிகாரம். இந்தப் பக்கத்து ஃப்ளாட்டில பாக்கெட் டீ.வி. அதோட ஒரு மைனர் செயின்."

"ஆக மொத்தம்,

யாரோ திருடன் 6வது மாடிக்கு வந்து திறந் திருந்த ஜன்னல் வழியாப் புகுந்து சின்னச் சின்னப் பொருள்களைத் திருடிக் கொண்டு போயிருக் கான்!''

''ஆமாம் சாதிக். ஆனால் திருடன் எப்படி வந்திருப்பான்னு எங்களுக்குப் புரியலே!''

''அதான், திறந்த ஜன் னல் வழியா வந்திருக்க ணும்னு சொன்னியே?''

''அந்தத் திறந்த ஜன்ன லுக்குத் திருடன் எப்படி வந்திருப்பான்னுதானே தெரியலே!''

''ஏன்? சன்ஷேடு இருக் குமே? அதிலே ஏறினா, படிப்படியா 6வது மாடிக்கு வந்துடலாமே?''

''அது முடியாத காரி யம் சாதிக். ஏன்னா, அத் தனை உயரத்துக்கு சன் ஷேடைப் புடிச்சுக்கிட்டே ஏறி வர்றது என்பது சாதாரணமான காரியம் அல்ல. ஏறி வரவாவது வந்துடலாம். ஆனால், சன் ஷேடைப் புடிச்சுக்கிட்டே இறங்குவது என்பது நடவாத காரியம். அதோட கூர்க்கா, வேற காவலுக்கு இருக் கான். அவன் கண்ணுக்குத் தப்பவே முடி யாது.''



கேட்டுக் கொண்டே வந்தனர் பீட்ட ரும் கிதாவும்.

''போலீசுல புகார் பண்ணினீங்களா?'' என்று கேட்டான் கிதா.

''நாலு ஃபிளாட்காரங்களுமா சேர்ந்து ஒன்னா புகார் பண்ணினோம். போலீஸ் காரங்களும் வந்து பார்த்தாங்க. வேலைக் காரங்க, பால் பாக்கெட் கொண்டு வர்ற வங்க, பேப்பர் போடறவங்க, கறிகாய்க் காரங்க என்று எல்லாரையும் புடிச்சு மிரட்டியிருக்காங்க. அதன் விளைவு என்னவாச்சு தெரியுமா? இவங்க யாருமே எங்க ஃபிளாட்டுக்கு உள்ளவே வரமாட் டேங்கறாங்க!''

''எதுக்கும் நாம இவங்க ஃபிளாட்டை நேரில் போய்ப் பார்ப்போம்'' என்றான் பீட்டர்.

மறுநாள் சனிக்கிழமை. பள்ளி விடு முறை. எனவே, சாட் பீட் கித் காலை ஏழு மணிக்கே பவானி குடியிருந்த ஆறா வது மாடி ஃபிளாட்டுக்கு வந்துவிட்டனர்.

ஆறாவது மாடி என்பதுடன், நல்ல உயர்ந்த கட்டடமாகவும் இருந்தது பவானி குடியிருந்த ஃபிளாட். சர்க்கஸ்



வேலைகளில் பழக்கப்பட்டவனாகவே ஒரு திருடன் வந்திருந்தால் கூட, வெறும் 'சன்ஷேடு'களைப் பிடித்துக் கொண்டு, யார் கண்ணிலும் படாமல் ஆறாவது மாடிக்கு ஏறிப் போய்த் திருடிக் கொண்டு, கீழே இறங்குவது இயலாத காரியம். ஆனால் திருட்டு நடந்திருக்கிறதே! இது எப்படி முடிந்திருக்கிறது!

திருட்டுக் கொடுத்த நான்கு ஃபிளாட்காரர்களையும் சாட் பீட் கீத் விசாரித்தனர்.

"என்னென்ன பொருள்கள் திருட்டுப் போனது?"

பவானி, ஏற்கெனவே கூறிய அதே பட்டியலைத்தான் நால்வரும் ஒப்பித்தனர்.

"வேறு எதுவும் போகவில்லையா? நன்றாக யோசித்துப் பாருங்கள்?"

"விலை உயர்ந்த பொருள்கள் என்பவை இவைதான்."

"அப்போ, விலை குறைந்த பொருள்களும் இருக்குமா?"

"கொஞ்சம் நன்றாக யோசித்துச் சொல்லுங்களேன்?"

நான்கு வீட்டுக்காரர்களும் நெற்றியைச் சுருக்கிக் கொண்டனர்.

"அண்ணா, அண்ணா, திருடன் அப்பாவோட கைக்கடிகாரத்தோடு என்னுடைய காபி பைட் சாக்லேட்டையும் திருடிக்கிட்டுப் போயிட்டான். நீங்க அதைத் தேடிக் கொடுங்க," என்று ஓடி வந்தான் ஒரு சுட்டிப் பையன்.

பீட்டரின் முகம் ஆவலால் பூரித்தது. பவானியை நோக்கினான்.

"இவன் எதிர் ஃபிளாட் பையன். ரொம்ப சுட்டி. இவனுக்குக் கொடுக்க இவங்க அப்பா காபி பைட் சாக்லேட் ஒன்னு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார். அவர் வருவதற்குள் இவன் தூங்கிவிட்டான். அதனால் கைக்கடிகாரத்துடன் அதையும் மேஜை மேல் வைத்திருக்கிறார். மற்ற பொருள்களோடு, சாக்லேட்டும் திருட்டுப் போச்சு!" என்று சிரித்தாள் பவானி.

"சாக்லேட்டைத் திருடன்தான் தூக்கிக் கொண்டு போனான் என்பது என்ன நிச்சயம்?" என்றான் கீதா.


"வந்த திருடன் சாக்லேட்டைத் திருடிக் கொண்டு போகவில்லை.

"பாயாத புலி எது, சொல்லு?"

"தெரியாது. நீயே சொல்லு!"

"அம்'புலி'!"

- ஏ. கணேசன். ஓமலூர்.



அங்கேயே பிரித்துத் தின்று காகிதத்தைப் போட்டுவிட்டுப் போயிருக்கிறான்! இதோ பாரு அக்கா!" - சிறுவன் வருத்தம் தாங்காமல் தன் சின்ன பிளாஸ்டிக் பெட்டியைத் திறந்து காட்டினான். அதில் கிளிஞ்சல், ஸ்டாம்ப், வண்ணப் பாசி மணி, நூல்களுடன் இரண்டு துண்டுகளாக இருந்த சாக்லேட் காகிதமும் காணப்பட்டது. ஒன்று முறுக்கிய பகுதி. மற்றொன்று சாக்லேட் வைக்கும் நடுப்பகுதியுடன் இன்னொரு பக்க முறுக்குப் பகுதி.

"இதை, நீ கிழிச்சியா?"

"இல்லே அக்கா. இப்படியே கிழிச்சுத் தான் கிடந்தது. நான் பிரிச்சு எடுத்து வைத்தேன்."

சாட் பீட் கித் திரும்பத் திரும்ப அந்த சாக்லேட் காகிதத்தை நோக்கினர்.

"இந்த மாதிரி, அற்பமானது என்று நீங்கள் கருதும் வேறு பொருள்கள் ஏதாவது திருடு போயிருக்கா?" என்று கேட்டான் சாதிக்.

"என் பேரன், இரண்டு வாழைப்பழம் வாங்கிக் கொண்டு வந்தான். ஒன்றைத் தின்றுவிட்டு, மற்றொன்றை மேஜைமேல் வைத்திருந்தேன். திருடன் அதை உரித்துத் தின்றுவிட்டு, தோலை அங்கேயே போட்டு விட்டுப் போயிருக்கிறான்!" - வலது பக்க ஃபிளாட்டில் இருந்த பாட்டி குறைப்பட்டுக் கொண்டாள்.

"பாதி தின்ற பிஸ்கட் பாக்கெட்டை மேஜைமேல் வைத்திருந்தேன். திருடன், கன்னாபின்னாவென்று பாக்கெட்டைக் குதறிக் கிழித்து பிஸ்கெட்டைத் தின்று விட்டுப் போயிருக்கான்!"

சாட் பீட் கித், பாமாலியிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினர்.

"திருடன் யாராக இருக்கக் கூடும் என்பது எனக்குத் தெரிந்துவிட்டது!"

"எனக்கும்!"

"எனக்கும் கூட!"

மூவரும் தனித்தனியாக எழுதிச் சீட்டை மாற்றிக் கொண்டு பிரித்துப் பார்த்தனர். மூவரின் சந்தேகமும் ஒன்றாக இருந்தது! மகிழ்ச்சியோடு கைகுலுக்கிக் கொண்டனர்.

வகுப்புத் தோழன் செந்திலின் தாத்தாவுக்கு அன்று அறுபதாம் கல்யாணம் என்ற 'சஷ்டியப்தபூர்த்தி'. சாட் பீட் கித்துக்கு ஸ்பெஷல் அழைப்பு வந்திருந்தது. போனார்கள். அது நடைபெற்ற இடம் மயிலை கபாலீசுவரர் ஆலய கோபுரத்துக்கு எதிரே இருந்த மண்டபம். உறவினர் நண்பர்கள் கூட்டம் நிறைந்திருந்தது.

மண்டபத்தின் திறந்த மொட்டை மாடியில் சிறுவர் பட்டாளம், ஒரு சின்ன ரப்பர் பந்தை வைத்துக் கொண்டு கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந்தது. ஒரு பையன் வேகமாக அடித்த பந்து, சற்றும் எதிர்பாராமல் உயரப் பறந்து, கோபுரத்தில் இருந்த யாளி பொம்மையின் கழுத்தில் இருந்த இடைவெளியில் 'சிக்'கென்று சிக்கிக் கொண்டுவிட்டது!

கோபுரத்தின்மேல் யாரால் ஏற முடியும்? கால் வைத்து ஏறத்தான் அனுமதிப்பாங்களா? பந்தைப் பறிகொடுத்த சிறுவன் எழுப்பிய அழுகையில் மண்டபமே கலகலத்தது! யாராலும் அவனைத் தேற்ற

முடியவில்லை!

"வேற பந்து வேண்டாம். அந்தப் பந்து தான் வேணும்!"

வசதியான குடும்பம் போல் இருக்கிறது. "அந்தப் பந்தை எடுத்துத் தருபவர்களுக்கு இருபது ரூபாய் பரிசு" என்றார் பையனின் தந்தை. குச்சியைக் கட்டி முயன்றார்கள். டியூப் போட்டுப் பார்த்தார்கள். எதுவும் பலனளிக்கவில்லை! தெருவிலே போன சம்பந்தா சம்பந்தமில்லாதவர்கள் எல்லாம் வந்து முயன்றார்கள்.

திடீரென்று நாகரீகமான தோற்றத்தில், வேட்டி சட்டை அணிந்த கடுக்கன்காரர் ஒருவர் வந்து நின்றார். "பந்தை எடுத்துக் கொடுத்தால் இருபது ரூபாய் தருவீர்களா?" என்று சிறுவனின் தந்தையிடம் உறுதி வாங்கிக் கொண்டு போன அவர், உடனே திரும்பி வந்தார். அவர் தோளில் ஒரு குட்டிக் குரங்கு! கோபுரத்தைக் காட்டி, ஏதோ சைகை செய்து குரங்கைத் தட்டிக் கொடுத்தார் அவர். குட்டிக் குரங்கு 'விறுவிறு'வென்று கோபுரத்தில் ஏறியது. பத்தே நிமிடங்களில் பந்தை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தது! இருபது ரூபாய் நோட்டை வாங்கிக் கொண்டு கிளம்பினார் கடுக்கன்.


"இருங்க சார். இது செய்த வேலைக்கு நீங்க பரிசை வாங்கிக்கிட்டீங்க! இதுக்குப் பரிசு தரவேண்டாமா?" என்று சொன்ன சிதா, பிரிக்காத ஒரு காபி பைட் சாக்லேட்டைக் குரங்குக் குட்டியிடம் தந்தான். படக்கென்று அதை வாங்கி, முறுக்கிய ஒரு பக்கத்தைப் பல்லில் கடித்துத் துப்பிவிட்டு, மீதியைப் பிரித்து சாக்லேட்டை வாயில் போட்டுக் கொண்டு, மீதி காகிதத்தைக் கீழே எறிந்தது குரங்கு!

சாதிக் கொடுத்த பிரிக்காத கால் பாக்கெட் பிஸ்கட்டைக் கன்னாபின்னாவென்று பல்லில் வைத்துக் கிழித்துக் குதறி, பிஸ்கட்டை எடுத்துத், தின்றுவிட்டு, குதறிய பாக்கெட்டை எறிந்தது குரங்கு!

சாட் பீட் சித் சிரித்துக் கொண்டனர். அவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில், சாதாரண உடையில் இரண்டு போலீஸ்காரர்கள், கடுக்கன்காரரையும் குரங்குக் குட்டியையும் கண்காணித்தனர். அன்று இரவே, அடுக்கு மாடிக் கட்டடங்களில் மிக எளிதாகத் தாவி ஏறி கதவு திறந்திருந்த ஃபிளாட்டுகளுக்குள் புகுந்து, சின்னச் சின்ன விலை மிக்க பொருள்களைத் திருடிக் கொண்டு வந்த குரங்குக் குட்டியை அதன் முதலாளி கடுக்கனுடன் கைது செய்தனர் போலீசார்.

"மனிதர்களால் அத்தனை உயரத்தில் ஏற முடியாது. திருட வருபவன் தின்பண்டங்களுக்கு ஆசைப்பட மாட்டான். அப்படியே சாக்லேட் கிடைத்தாலும், யாரும் பிரித்துத் தின்பார்களே தவிர, இப்படிக் காகித உறையுடன் கடித்துத் தின்ன மாட்டார்கள். அதோடு, பழகிய குரங்கால் மட்டுமே இது முடியும் என்று மூவருமே எண்ணினோம்" என்றான் சாதிக்.

"சரி, சாக்லேட்டைப் பிரித்துச் சாப்பிடுங்கள்" என்றாள் பவானி. மூவரும் சிரித்தனர்.



"இந்த லீவில் நீ என்ன செய்யப் போறே?"
"என்னோட பரீட்சை பேப்பரெல்லாம் எந்த சாரிடம் இருக்கோ அவங்க வீட்டுக்குப் போய் எடுபிடி வேலை செய்யப் போறேன்."

- பாக்யலக்ஷ்மி

அந்தக் காசு ஒட்டுமா?

மிதிவண்டியை ஓரமாக நிறுத்தி, அதன் மீது சாய்ந்து நின்றபடி பள்ளி வாயிலைப் பார்த்துக் கொண்டிருந்தான் முத்துமணி. அப்போது சொக்கலிங்கம் ஒரு புத்தம் புது மிதிவண்டியைத் தள்ளிக் கொண்டு பள்ளியை விட்டு வெளியே வருவதைக் கவனித்தான். பள்ளிக்குள் யாரும் வண்டி மீது ஏறி ஓட்டிக் கொண்டு போகக் கூடாது என்பது அந்தப் பள்ளியில் எல்லா மாணவர்களுக்கும் தெரியும்.

"சொக்கா!" என்று கூவியழைத்தான் முத்துமணி.

"அடடே! நீ எனக்கு முந்தியே வந்திட்டியா?" என்று கேட்டுக் கொண்டே, வேகமாக வண்டியைத் தள்ளிக் கொண்டு அவன் அருகே வந்து நின்றான் சொக்கலிங்கம்.

"வா, வா! கொஞ்ச நேரம் நிற்போம். ஏழுமலை, முருகன் ரெண்டு பேரும் வரட்டும். பார்த்துப் பேசிட்டுப் போவோம்" என்றான் முத்துமணி.

''கொஞ்ச நேரம்தான் நிற்கலாம். இத்தோட நாற்பது ஐம்பது நாள் கழிச்சுத் தானே பார்க்க முடியும்? பள்ளிக்கூடம் இன்னைக்குக் கடைசி நாள் இல்லையா? அப்புறம், யார் யாரு எந்தெந்த ஊருக்குப் போய் விடுவோமோ? மறுபடியும் ஜூன் மூணாம் தேதிதானே ஸ்கூல்?'' என்றான் சொக்கலிங்கம்.

பேசிக் கொண்டே அவன் சைக்கிளை, முத்துமணியின் சைக்கிளின் பக்கமாக ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினான். சைக்கிளைக் கவனித்தான் முத்து.

''என்னடா, இன்னைக்குச் சைக்கிள்ளே வந்திருக்கே! அதுவும் புது சைக்கிள்! ரிசல்ட் தெரியறதுக்கு முன்னாடியே கேட்டு வாங்கிக்கிட்டியா?''

"ஏன்... ரிசல்ட்டிலே உனக்கு சந்தேகமா? எல்லாப் பாடத்திலேயும் நூத்துக்கு எண்பதுக்குக் குறையாது!" என்று உறுதியான குரலில் உரைத்தான் சொக்கலிங்கம்.

"அது சரி. இன்னைக்கு என்ன சைக்கிள்? வழக்கமா நடந்துதானே வருவே?" என்றான் முத்து.

''இன்னைக்கு, என் மாமாவோடு மதுரைக்குப் போறேன். சீக்கிரம் வீட்டுக்குப் போகணும். அதனாலேதான் அண்ணன் வண்டியை எடுத்துக்கிட்டு வந்தேன். அவரும் இன்னைக்குப் பாக்டரிக்கு நைட் டூட்டி போகணும். சைக்கிளைக் கொண்டு போய்ச் சீக்கிரம் கொடுக்கணும்...'' என்று சொக்கலிங்கம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, பதற்றத்தோடு குறுக்கிட்டான் முத்து.

''என்னடா! இன்னைக்கு கடைசி நாள், சினிமாவுக்குக் கூட்டிக்கிட்டுப் போறேன்னு சொன்னியே? ஆசை ஆசையாக் காத்துக்கிட்டிருந்தால் திடீர்னு இப்படிச் சொல்றியே?'' என்று ஏக்கத்தோடு கேட்டான்.

''நான் இன்னைக்கே ஊருக்குப் புறப்படுவேன்னு எதிர்பார்க்கல்லியே? சினிமா எப்ப வேண்டுமானாலும் பார்த்துக்கலாமே? ஆமாம்... விடுமுறையிலே நீ எந்த ஊருக்குப் போகப் போறே?'' என்று பேச்சை மாற்றினான் சொக்கலிங்கம்.

''நான் வேலூருக்குப் போவேன். அங்கே என் அத்தை வீடு இருக்கு'',என்று கூறிவிட்டுத் தன் ஏமாற்றத்தை வெளியே

காட்டிக் கொள்ளாமல் சமாளிப்பதற்காக, "சைக்கிள் புதுசு போல இருக்கே?" என்று கேட்டு வைத்தான் முத்துமணி.

அவன் அப்படிக் கேட்டதும் தன் அண்ணன் சைக்கிளைப் பெருமையோடு பார்த்தான் சொக்கலிங்கம். ஆனால் அடுத்தகணமே அவன் முகம் மாறி விட்டது.

"என்னடா இது! முன் சக்கரத்திலே காற்றே இல்லை?" என்று கூவினான் அவன்.

அப்போதுதான் கவனித்தான் முத்துமணியும். அவனுக்குச் சிரிப்பாக வந்தது.

"என்னடா உனக்குச் சிரிப்பாயிருக்கா?" என்று கேட்டான் சொக்கலிங்கம்.

"இல்லேடா.... உன் வண்டியைக் கொண்டு வந்து, என் பழைய ஓட்டை வண்டி பக்கத்திலே நிறுத்தியதும், பிச்சைக்காரன் பக்கத்திலே பணக்காரன் நிற்பது போலத் தோன்றியது எனக்கு இப்பப் பார்த்தால் ஓட்டை சட்டியிலும் கொழுக்கட்டை வேகும். என் வண்டியாவது ஓடக்கூடிய நிலையில் இருக்கு. உன் புது வண்டி புஸ்ஸுன்னு காற்றுப் போய் நிற்குதே! நினைச்சேன். சிரிப்பு வந்தது" என்றான் முத்துமணி.

"இதிலே நீ வேறு சீக்கிரம் போகணும். பாவம் என்ன பண்ணுவே?" என்று அவனே முத்தாய்ப்பு வைத்த போது, அவன் கேலி செய்கிறானா, நிஜமாகவே வருத்தப்படுகிறானா என்பது புரியவில்லை சொக்கலிங்கத்துக்கு.

"சரிடா... வா! அந்த பாபு பையன் சைக்கிள் கடைக்குப்



பூவை அமுதன்

போவோம்" என்றான் சொக்கலிங்கம்.

இருவரும் சைக்கிளை உருட்டிக் கொண்டு, எதிரே தெரிந்த சைக்கிள் ரிப்பேர் கிடைக்குப் போனார்கள். அந்தக் கடையில் இருந்த பையன் பெயர்தான் பாபு. அவனுக்கும் இவர்கள் வயதுதான் இருக்கும்.

தங்களைப் போலப் படிக்க வேண்டிய வயதிலே, பாபு சைக்கிள் கடையில் வேலை செய்து கொண்டு எண்ணெய்ப் பசையும் உடம்பெல்லாம் கரியும் கந்தலாடையுமா இருக்கிறானே என்று அவர்கள் பரிதாபப்பட்டதுண்டு.

"பாபு! இந்தச் சைக்கிள் பஞ்சரா என்னன்னு பாரு. நான் சீக்கிரம் போகணும்" என்றான் சொக்கலிங்கம். அப்போது பாபு மட்டுமே கடையில் இருந்தான். ஒரு தகரத் தட்டில் மண்ணெண்ணெயில் ஊறப் போட்டிருந்த சைக்கிள் செயினை எடுத்துத் துடைத்துக் கொண்டிருந்தான் அவன்.

பம்ப்பை எடுத்துக் கொண்டு வந்த பாபு, புது வண்டியின் முன் சக்கரத்தில் காற்று அடித்தான். பலமுறை அடித்துப் பார்த்தான். காற்று கொஞ்சம் கூட ஏற வில்லை. உதட்டைப் பிதுக்கினான் பாபு.

"டயர் பஞ்சராயிருக்கும். பார்க்கட்டுமா?" என்றான்.

"ட்யூப்தானே பஞ்சர் ஆகும்!" என்று சிரித்தான் முத்துமணி.

"சரிதாம்பா. அப்படித்தான் வச்சிக்கோயேன். நான் படிக்காதவன்தானே? உன்னைப் போல கரெக்டா பேச முடியுமா?" என்று கேட்டுக் கொண்டே சக்கரத்திலிருந்து டயரை ஒதுக்கி, ட்யூபை வெளியே இழுத்துப் பார்க்க முயன்றான் பாபு.

"எவ்வளவு நேரம் ஆகும்? சீக்கிரம் ஆயிடும் இல்லே?" என்று பதற்றத்துடன் கேட்டான் சொக்கலிங்கம்.


"ஒரு பஞ்சராயிருந்தால், கா மணி நேரம் இல்லே... அரை மணியாகலாம். ரெண்டு மூணு பஞ்சராயிருந்தால்... தேய்ச்சு, சொல்யூஷன் போட்டு உலர வைச்சி ஒட்டணுமே" என்று சொல்லிக் கொண்டே சொக்கலிங்கத்தின் முகத்தைப் பார்த்தான் பாபு.

'சீக்கிரம் போகணுமே...! மாமா காத்துக் கொண்டு இருப்பாரே! சைக்கிளுக்கு இப்படி. ஆச்சின்னு அண்ணனுக்குத் தெரிஞ்சா கோபப்படுவாரே! அண்ணன் பாக்டரிக்கு நைட் டூட்டிக்கு ஆறு மணிக்கெல்லாம் இந்தச் சைக்கிள்லேதானே போயாகணும்!'

அவனுடைய தவிப்பு முத்துமணிக்குப் புரிந்தது. சொக்கலிங்கம் முகத்திலே தெரிந்த கவலை ஒருவகையிலே அவனுக்குச் சந்தோஷத்தையும் கொடுத்தது.

'கடைசி நாள், ஒரு நல்ல படம் பார்க்கக் கூட்டிக்கிட்டு போறதாச் சொல்லி ஏமாத்திட்டானே! இவனுக்கு நல்லா வேணும்!' – முத்து தன் மனதுக்குள்ளேயே கருவிக் கொண்டான். அதே நேரத்தில் தன் வீட்டில் சினிமாவுக்குப் போவதற்கெல்லாம் காசு கொடுப்பது இல்லையே என்று எரிச்சலும் அடைந்தான். ஆனால் எதையும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

''பாருடா, சொக்கா! என் வண்டி புது தான். ஆனால் இப்படி ஒரு நாள் கூட



சந்தர்ப்பத்தில் கழுத்தை அறுத்து கிடையாது. இந்த வண்டி.... புத்தம் புதுசாயிருக்கு இது போயி... இப்படி... மோசம் பண்ணுதே!'' என்று முணுமுணுத்துவிட்டு, "சரி. ரிப்பேருக்குக் காசு வச்சிருக்கியா?" என்று உரக்கவே கேட்டான் முத்து.

அவன் தன்னை ஏளனம் செய்கிறானா, இரக்கம் காட்டு கிறானா என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கும் நிலை யில் இல்லை சொக்கலிங்கம். அவன் மனம் மதுரையில் இருந்தது.

"காசு இருக்கு பாபு. நீ ரிப்பேர் பாரு. சீக்கிரம் ஆகணும்" என்று எரிச்சலோடு சொல்லிக் கொண்டே கடையில் இருந்த சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தான் சொக்கலிங்கம். அது குதிரை வேகத்தில் ஓடிக் கொண்டிருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

மணி ஐந்தரை. இன்னும் அரை மணி நேரத்துக்குள் அவன் வீட்டில் இருந்தாக வேண்டும். அழுகையே வரும் போலிருந்தது. விரல் நகங்களை வாயில் வைத்துக் கடித்துத் துப்பினான். அப்போது திடீரென்று அவனுக்கு ஓர் யோசனை உதித்தது.

"முத்துமணி! நான் இப்படிச் செய்யறேனே! உன் சைக்கிளை நான் எடுத்துக்கிட்டுப் போய் என் வீட்டிலே விட்டு வைக்கறேன். நீ இந்த வண்டியை ரிப்பேர் பார்த்துக் கொண்டு வா! இந்தா! என் விடம் பத்துப் பதினைஞ்சி ரூபா இருக்கு. ரிப்பேர் செலவுக்கு வச்சிக்கோ. மிதியை வீட்டிலே கொடுத்திட்டுப் போ!'' என்றவன், அப்போது முத்துமணியின் முகம் ஒரு மாதிரியாகப் போவதைக் கவனித் தான்.

''மன்னிச்சுக்கோடா. சினிமாவுக்கு இன்னொரு நாளைக்குப் போயிக்கலாம். எல்லாம் எதிர் பாராமே நடக்குது'' என்று இரண்டு பணத் தாள்களை அவன் சட்டைப் பையில் திணித்து விட்டுப் பழைய சைக் கிளைத் தள்ளி ஏறி மிதித்தான் சொக்க லிங்கம்.

அவன் வேகமாகப் போவதைப் பார்த்தபடி, ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான் முத்துமணி. பாபு ரிப்பேர் வேலையில் சுறுசுறுப்பாக இருந்தான்.


மணி ஆறாகி விட்டது. பாபு குரல் கொடுத்தான்.

"ரிப்பேர் ஆயிடிச்சு. வண்டியை எடுத்துக்கிட்டுப் போகலாம். டயரிலே ஆணி குத்தியிருக்கு. அது ட்யூப்பிலே பட்டுப் பொத்தல் பண்ணியிருக்கு. நல்ல வேளை ஒரு பஞ்சர்தான். ரெண்டு ரூபாய் கொடு!" என்றான் பாபு.

முத்துமணி தன் சட்டைப் பையில் இருந்த பதினைந்து ரூபாயைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். கால் சட்டைப் பையில் கையை விட்டு இரண்டு ரூபாய் நாணயத்தை எடுத்து பாபுவிடம் கொடுத்தான்.

இரண்டு ரூபாய் முழு நாணயத்தை வாங்கிக் கொண்ட பாபு, அந்த நாணயத்தையே உற்றுப் பார்த்தான்.

"ஜாக்கிரதையா இல்லேன்னா... இது ஒரு ரூபாயா ஓடிப் போயிடுமே!'' என்று சிரித்துக் கொண்டே தகரப் பெட்டியில்



போட்டு மூடினான்.

அப்போது முத்துமணியின் சிந்தனை வேறுவிதமாக ஓடிக் கொண்டிருந்தது.

'சொக்கலிங்கம் ஊருக்குப் போய் விட்டிருப்பான். எத்தனை நாள் கழித்து வருவானோ? சைக்கிள் ரிப்பேருக்குப் பதினைஞ்சி ரூபாயும் செலவழிஞ்சதா சொல்லிடலாமே..! அதுவும்கூட அவன் வீட்டில் யாராவது கேட்டால்தான். இல்லேன்னா கண்டுக்காமே விட்டிடலாம். ட்யூபிலே எத்தனை பஞ்சர் போட்டாங்கன்னு, காற்றை இறக்கி வெளியே எடுத்தா, எண்ணிப் பார்க்கப் போறாங்க? நிறைய பஞ்சர் இருந்ததுன்னு சொன்னாலும் நம்பத்தானே போறாங்க? மீதிப் பணத்தை ஜாலியா, சினிமா பார்க்க நாமே வச்சிக்கலாமே!

அவன் எண்ணம் அந்தத் திசையில் வேகமாக ஓடிக் கொண்டிருந்த போது பாபு அவனிடம் அங்கிருந்த ஒரு சைக்கிளைச் சுட்டிக்காட்டினான்.

"இதோ பாரு தம்பி! இந்தச் சைக்கிள் காரர் காலையிலே இப்படித்தான் அவசரமா வந்தார். அப்பவும் கடையிலே நான் மட்டும்தான் இருந்தேன். முதலாளி ராத்திரி ஒன்பது மணிக்குத்தான் வருவார். வெளியே போயிருக்கார்... இந்தச் சைக்கிள் காரர் சொன்னார், என்னப்பா இந்த வண்டி ஒரே ரோதனையாயிருக்கு! முன் சக்கரத்திலே அடிக்கடி காத்து இறங்கிப் போகுது. கழற்றிப் பாரு. ட்யூப் பழசாயிருந்து பிரயோசனம் இல்லேன்னா, அதைக் குப்பையிலே தூக்கிப் போட்டுட்டு புது ட்யூப் ஒன்றை வாங்கி மாட்டி, வண்டியை ரெடி பண்ணி வை. சாயந்திரம் வர்றேன்னு சொல்லிட்டுப் போனார். நூறு ரூபாய் கொடுத்திட்டுப் போனார். அப்புறம் பார்த்தா... ட்யூப் நல்லாதான் இருக்கு. வால்வு ட்யூப்தான் மாத்தணும். இதைக் கவனிக்காமே புதுசா ட்யூப் வாங்கச் சொல்லிட்டாரு அவரு. ஒரு ரூபாய்ச் செலவுக்கு நூறு ரூபாய் ஆகுமுன்னு தப்பா நினைச்சிட்டார் போல!" என்று சிரித்தான் பாபு.

அவன் சிரித்து வாயை மூடுவதற்குள் அங்கே அவசர அவசரமாக வந்து நின்றார் ஒருவர். அவர்தான் பாபு சொன்ன சைக்கிளை விட்டு விட்டுப் போனவர்.

"என்னப்பா... புது ட்யூப் வாங்கி மாட்டி வச்சிட்டே இல்லே" என்று கேட்டார் அவர்.

"இல்லே சார்!" என்றான் பாபு.

"சொல்லிட்டுப் போனேனே? என்ன தம்பி நீ!"

"வண்டி ரெடி சார். ஒரு ரூபாய் கொடுங்க. இந்தாங்க உங்க நூறு ரூபாய்" என்று அவர் முன் பணத்தாளை நீட்டினான் பாபு. "வால்வ் ட்யூபை மட்டும் தான் மாத்தினேன். இனி ரோதனை கொடுக்காது!" என்று புன்னகைத்தான்.

"தம்பீ! உனக்கு நல்ல மனசு. அந்த ட்யூப்பைத் தூக்கிப் போட்டுட்டேன். புதுசா வாங்கி மாட்டியிருக்கேன்னு சொல்லியிருந்தாலும் நான் நம்பியிருப்பேன்" என்றார் அவர்.


"நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா சார்! நான் வாழணும்; வளரணுமே! உழைக்காம ஏமாத்தி வாங்கும் காசு, உடம்பிலே ஒட்டுமா? உண்மையா உழைச்சிப் பொழைக்கணும். அதுதான் சார் எப்பவுமே நல்லது!" என்றான் பாபு.

அவர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டான் முத்துமணி. அவனை யாரோ 'பளார் பளார்' என்று கன்னத்தில் அறைவதைப் போலிருந்தது. அடுத்தகணமே புது சைக்கிளில் வேகமாகச் சென்றான். மீதிக் காசைச் சொக்கலிங்கத்தின் தாயிடம் கொடுத்து விட்டு நிறைந்த மனத்துடன் தன் மார்பைத் தடவி விட்டுக் கொண்டான்.

"புலியண்ணே, ஏன் உன் பையன் அடம்புடிக்கறான்?"

"அவன் உடம்புல இருக்கற வரியோட டிசைன் நல்லா இல்லையாம். வேற டிசைன் இருக்கணுமாம்."

— பா. ஜெயக்குமார்



குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் வெளியிடத் தேர்ந்தெடுக்கப் பட்ட 9வது கதை.



நீயா கதிரேசா?

பள்ளி வாயிலில் பஸ் வந்து நிற்பதைக் கண்டதும் மைதானத்தில் ஆங்காங்கே நின்று கொண்டு இருந்த மாணவ-மாணவிகள் பஸ்ஸை நோக்கி ஓடினர். பஸ்ஸில் ஜன்னல் அருகே உட்கார்ந்து கொள்ள எல்லோருக்குமே ஆசை. நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டு கொண்டு அடித்துப் பிடித்துக் கொண்டு ஏறி ஜன்னல் சீட்டைப் பிடிக்க முயன்றனர்.

ரவிக்கு எப்போதுமே சுயநலம் அதிகம். உலகிலுள்ள சிறப்பான எல்லாமே தனக்கே முதலில் கிடைக்க வேண்டும் என்ற ஆசை. அதை ஆசை என்பதைவிட வெறி என்று கூடக் கூறலாம். பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதால் பெற்றோரும் அவன் மனம் கோணாமல் நடந்து கொண்டனர். அவன் எது கேட்டாலும் வாங்கிக் கொடுத்தனர். அதனால் விரும்பியது எல்லாம் அவனுக்குப் போட்டிக்கு ஆளின்றிக் கிடைத்து வந்தது.

இதுவரை அவன் குற்றாலம் போனதில்லை. அதனால் இப்போதுதான் முதன் முதலாகக் குற்றாலம் நீர் வீழ்ச்சியைக் கண்டு களிக்க மாணவர்களுடன் உல்லாசப் பயணம் வந்திருக்கிறான்.

பஸ்ஸில் ஜன்னலருகே அமர்ந்து கொண்டு வேடிக்கை பார்க்க வேண்டும், இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிக்க வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் இருந்தது போலவே கதிரேசனுக்கும் இருந்தது. அவன் ரவியுடன் அதே வகுப்பில் படிப்பவன்.

ரவி முட்டி மூண்டி முதலில் ஓடிப் போய் பஸ்ஸில் ஜன்னல் அருகே இடம் பிடித்துக் கொண்டான். ரவியைப் போலவே இன்னும் சில மாணவர்களும் அடித்துப் பிடித்து ஏறி நடந்து கொண்டதால் ஆசிரியருக்குக் குழப்பமாகி விட்டது. மாணவர்கள் இப்படி நடந்து கொள்வார்கள் என்பதை அவர் எதிர் பார்க்கவே இல்லை. ஏறியிருந்த எல்லா மாணவ-மாணவிகளையும் பஸ்ஸில் இருந்து கீழே இறங்கச் சொல்லி, வரிசையாக நிற்க வைத்து பிறகு ஏறி, அதே வரிசை கலையாமல் அமர வைத்தார்.

அதில் கதிரேசனுக்கு ஜன்னல் பக்கமும், ரவிக்கு அவன் பக்கத்திலும் இடம் கிடைத்தது. ரவிக்குக் கதிரேசன் மேல் காரணமில்லாமல் கோபமும், ஆத்திரமும் பொங்கி வந்தது.

கதிரேசன் ரவியைப் போல் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்ல. மிகச் சாதாரணமான ஏழைக் குடும்பத்

பா. ஜெயக்குமார்



கைச் சேர்ந்தவன்தான். அவன் தந்தை பாம்பை வைத்துப் பிழைத்து வரும் பாம் பாட்டி. அரசு பின்தங்கியவர்களுக்கென சில சலுகைகளைக் கொடுத்ததால் அவ னுக்கும் படிக்கும் வாய்ப்புக் கிடைத் திருந்தது.

ஏற்கெனவே தாழ்ந்தவன்; ஏழை என்ப தால் கதிரேசனைக் கண்டால் ரவிக்குப் பிடிக்காது. இப்போது தனக்குக் கிடைக் காத வாய்ப்பு அவனுக்குக் கிடைத்து விட்டதன் காரணமாக அது அதிகமானது. பார்வையிலேயே வெறுப்பை உமிழ்ந்தான். கதிரேசனுக்கு இரக்க சுபாவமும் பிறரது எண்ணங்களைப் புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றலும் இருந்தது.

ரவிக்குத் தன் பக்கத்தில் உட்கார விருப்பமில்லை. அதோடு ஜன்னல் சீட் கிடைக்கவில்லை என்பதால், எதையோ பறி கொடுத்தவன் போல் துக்கப்படுகிறான் என்பதை உணர்ந்து கொண்டு, ஆசிரிய ரிடம் சொல்லி ரவியைத் தன் இடத்தில் உட்கார வைத்து, அவனிடத்தில்தான் அமர்ந்து கொண்டான். ரவி கதிரேசனுக்கு நன்றி கூடக் கூற மனமில்லாமல், பெரிய ஜம்பமாக, அலட்சியமாக அமர்ந்து கொண் டான். அவன் தனக்கு நன்றி கூறுவான் என்பதைக் கதிரேசனும் எதிர்பார்க்க வில்லை. கூறியிருந்தால்தான் அதிசயப்பட் டிருப்பான்!

பயணத்தின் போது ரவி, தன் கை யோடு கொண்டு வந்திருந்த விலையுயர்ந்த பிஸ்கெட், சாக்லேட் போன்ற தீனிகளைத் தானே தின்றான். கொண்டு வந்திருந்த பழங்களையும்தானே விழுங்கினான். இன்னும் என்னென்னவோ தின்றான்.

பெயருக்கு, பண்பாட்டுக்குக் கூட ஒரு தடவையாவது 'உனக்கும் வேணுமா?' என்று கதிரேசனிடம் கேட்கவில்லை. அவ னும் எதுவும் கேட்கவில்லை. ஆசிரியர் கொடுத்த உணவையும் தின்பண்டங்களை யும் மட்டும் வரிசையில் நின்று வாங்கித் தின்றான்.

பஸ் குற்றாலத்தை அடைந்தது. மாண வர் அனைவரையும் ஆசிரியர் அழைத் தார். எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறினார். எந்த இடத்திற்கும் தனியாகப் போகக் கூடாது. அவரவர் இஷ்டப்படி எங்கும் சுற் றக்கூடாது. குறிப்பாக ஆசிரியரின் துணை யின்றி அருவிப் பக்கம் யாரும் செல்லக் கூடாது என்றும் கண்டிப்பாகக் கூறினார்.

ரவி ஒருவனைத் தவிர, எல்லா மாண



வர்களும் ஆசிரியர் சொற்படி நடந்து கொண்டனர்.

ரவி எல்லோருடனும் வராது தன் இஷ்டப்படி பிரிந்து சுற்றப் போனான். எதை எதையோ வாங்கித் தின்றான். ஆசிரியருக்கு இதெல்லாம் சிறிதும் பிடிக்கவில்லை. கூப்பிட்டு எச்சரிக்கை செய்வதற்கு பெரிய ஆளான ஒரு மாணவனை அனுப்பியபோது, ரவி தனியாக மலை ஏறிக் கொண்டிருந்தான்.

'வரட்டும் அவன்' என்று ஆசிரியர் கோபத்துடன் பல்லைக் கடித்துக் கொண்டார். ரவியை அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

சிறிது நேரம் ஓடியது.

'ஐயோ' என்ற அலறல் சப்தம் கேட்டு கதிரேசன் அந்த இடத்தை நோக்கி ஓடினான். அங்கே - ரவியை ஒரு பாம்பு கடித்து விட்டு ஓடுவது தெரிந்தது.

பாம்பு கடித்ததால் ரவி அலறிச் சுருண்டு கீழே விழுந்திருந்தான். அவன் இன்னும் சிறிது தள்ளிக் காலை வைத்து விழுந்திருந்தால், அதல பாதாள பள்ளத்தில் விழுந்து போயிருப்பான்.

நல்லவேளை, கதிரேசன் ஓடி வந்து ரவியைத் தாங்கித் தூக்கி வந்தான். புதரிலிருந்து பாதைக்குச் சுமந்து வந்தான்.

ஆசிரியரும் மாணவர்களும் ரவியை நோக்கி ஓடினர். ரவிக்கு பாம்பு கடித்த இடத்தில் காலுக்கு மேல் தன் கைகுட்டையைக் கயிறு போல் முறுக்கி இறுக்கமாகக் கட்டுப் போட்டான். பிறகு, தன் வாயை வைத்து விஷத்தை உறிஞ்சி, வெளியே துப்ப ஆரம்பித்தான்.

'என்ன ஆச்சு கதிரேசா?' என்று ஆசிரியர் குரல் கொடுத்த போது, அவன் வாயை வைத்து விஷத்தை எடுத்துக் கொண்டிருந்ததால், அவரை சும்மா இருக்கும்படி சைகை காட்டினான். தொடர்ந்து ரவியின் உடம்பிலிருந்து உறிஞ்சித் துப்பி விஷத்தை வெளியேற்றிக் கொண்டிருந்தான்.

ஏறத்தாழ செத்துப் போனவன் மாதிரி கண் சொருகி உடம்பில் அசைவில்லாமல் பரிதாபமாக மயங்கிக் கிடந்த ரவியையும், கதிரேசனின் செய்கையையும் பார்த்ததும் ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் என்ன நடந்திருக்கிறது என்பது புரிந்து போனது. அதோடு அவர்களுக்கு பயமும் பிடித்துக் கொண்டது. என்ன செய்வதென்று தெரியாது குழம்பினர்.

கதிரேசன் இவ்வளவு தைரியமாகச் செய்கிறானே? இவனுக்கும் ஏதாவது ஆபத்து வந்து விடக் கூடாதே! ரவியும் பிழைக்க வேண்டுமே என்ற பயத்தால் அனைவரும் இறைவனைப் பிரார்த்திக் கொண்டிருந்தனர்.

ஆசிரியருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. பேசாமல் மருத்துவமனைக்குக் கொண்டு போய் விடலாமா? பக்கத்தில் டாக்டர் யாராவது இருக்கிறார்களா? இல்லை கதிரேசனே காப்பாற்றி விடுவானா? அவனும் சிறு பையன் தானே என்று பலவாறாகக் குழம்பினர்.

எல்லோரும் ரவியையும் கதிரேசனையும் பதைபதைப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர். கால் மணி சென்றது.

ரவி மெதுவாகக் கண் திறந்து பார்த்தான். கைகால்களை அசைத்தான். எல்லோர் முகத்திலும் மலர்ச்சி. கதிரேசனுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. 'அப்பாடா இனிமேல் ஆபத்து ஏதுமில்லை' என்றவன் அருகிலுள்ள சுனைக்குச் சென்று வாய் அலம்பிக் கொண்டு வந்தான்.

திரும்பி வந்த கதிரேசனை ஆசிரியரும்

மாணவ மாணவிகளும் பாராட்டினர். ரவிக்குத்தான் கண்டது கனவா நனவா என்பது தெரியவில்லை.

"நீயா கதிரேசா என்னைக் காப்பாற்றி னாய்!" என்று கட்டிப்பிடித்து ஆனந்தக் கண்ணீர் விட்டான்.

தான் அவனை அலட்சியப்படுத்தியது, கேவலமாகப் பேசியது, பஸ்ஸில் பயணம் செய்யும் போது அவனுக்கு எதுவுமே கொடுக்காமல்; பண்பாட்டுக்குக் கூடக் கேட்காமல் தானே தின்றது எல்லாவற்றை யும் நினைத்து ரவி வருத்தப்பட்டான். மன்னிப்புக் கேட்டான். தான் அவனைப் பாம்பாட்டி மகன் என்பதால் வெறுத்தது குறித்து வருந்தினான். அவனுக்கு பாம் பைப் பற்றித் தெரிந்து இருக்காவிட்டால் தன்னை யாராலும் காப்பாற்றியிருக்க முடி யாது என்று கண்ணீர் விட்டான்.

ரவியின் மனமாற்றத்தைக் கண்டு அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர்.

கதிரேசனிடம் "விஷத்தை இப்படி எடுக்க வேண்டும் என்பது உனக்கு முன்பே தெரியுமா?" என்று கேட்டார் ஆசிரியர் .

"எங்க அப்பா பாம்பாட்டிதானே? சின்னக் குழந்தையிலிருந்தே பாம்போடு பயமில்லாது பழகுவேன். விஷத்தையும் எப்படி எடுக்கணும்னு எங்கப்பா சொல்லிக் கொடுத்திருக்கார். நம்ம ரவியைக் கடிச்சது மொண்ணை மூக்கன் என்ற பாம்பு. இது கடித்தால் உடம்பு தடித்து விடும். அரிப்பு, சொரி எல்லாம் வந்து கஷ்டப்படுவார்கள். பாம்பு கடித்ததும் ரவி பயந்து விட்டான். இங்க வர்றப்போ எங்கப்பா ஒரு வேரைக் கொடுத்து அனுப்பினார். பாம்பின் விஷத்தை எடுக்கக் கூடியது இந்த வேர், யாருக்காவது பாம்பு கடிச்சா விஷத்தை உறிஞ்சி எடுத்துவிட்டு இந்த வேரைக் கடித் துத் துப்பிவிடு'ன்னு அனுப்பினார். ரவி பிழைச்சதுக்கு இதுதான் காரணம்' என் றான், கதிரேசன்.

ஊர் திரும்பும் போது ரவியும், கதிரே சனும் ஒருவருக்கொருவர் நெருக்கமாகப் பழக ஆரம்பித்து விட்டனர். சிரித்துப் பேசி விளையாடினர். ரவியின் மாற்றம் கதிரேசனுக்கு மகிழ்ச்சியை அளித்தது. அங்கே ஓர் அற்புதமான இணைபிரியாத நட்பு மலர்ந்து கொண்டிருந்தது.

என்ன குறள்?

போட்டி முடிவு

அடேயப்பா! வாசகர்களைக் கொஞ் சம் திக்குமுக்காட வைக்கும் என்று எதிர் பார்த்து வைக்கப்பட்ட போட்டி இத்தனை எளிதாக இருக்கும் என்பதை எதிர்பார்க் கவே இல்லை. 1200 பேருக்கு மேல் இதில் பங்குகொண்டு ஒரு சாதனையே படைத் திருக்கிறார்கள். இந்த ஆண்டில் அதிக அளவு வாசகர்கள் கலந்து கொண்ட கோகு லம் போட்டி இதுவாகத்தானிருக்கும் என்று எண்ணுகிறேன். அத்தனையும் சரியான விடைகள்! ஒருவர் கூடத் தவறாக எழுத வில்லை. கடைசியில் குலுக்கல் முறையே பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க உதவியது.

சரியான விடை :

அடக்கம் அமரருள் உய்க்கும்
அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. இ. எழிலரசி, புதுச்சேரி – 605 010, 2. எஸ். பேபி அம்மணி, தஞ்சை – 613 001., 3. ஏ. முகமது அரிஃப், கச்சிராபாளையம்., 4. ஏ. கணேஷ்குமார், ஏம்பலம் போஸ்ட், பாண்டிச்சேரி., 5. என். முகமது இத்ரீஸ், சிங்கம்புணரி, 6. எஸ். ஹரிஹரன், புதுடில்லி – 110 067., 7. எஸ். கந்தரேசன், கல்கத்தா – 700 045., 8. எல். பெர்னான்டு, சிங்கநல்லூர், கோவை – 641 005., 9. சு. காசி விசுவநாதன், வீரவநல்லூர் – 627 426., 10. சா. வைகறை, நெய்வேலி – 607 803., 11. ஜி. குருவாயூரப்பன், அட்டகட்டி – 642 116., 12. எஸ். நாமகிரிலக்ஷ்மி, நாமக்கல்., 13. வெ. கௌதம், கோவை - 641 002., 14. ஹா. முகமது தௌபிக், திட்டச்சேரி., 15. சே. சகாயராணி, புதுவை – 5., 16. ஜெ. ஏஞ்ஜலின், முருகன் குறிச்சி, பாளை – 2., 17. மு.சி. உம்மு அம்மாரா, இலால்பேட்டை – 608 303., 18. எஸ். ராமானுஜன், புதுடில்லி – 110 091., 19. கே. ஜரீஸ் சகாயபாமா, திட்டுவிளை., 20. பி. அமுதவள்ளி, மன்னார்குடி – 614 001., 21. து. வெண்ணிலா, பழனி – 624 602., 22. எம். அச்சுதானந்தம், மீட்டூர் – 635 702.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.



சிறுவர் இலக்கியம் செழிக்கத் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட, கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் நினைவாக இந்த ஆண்டும் இந்தச் சிறுவர் சிறுகதைப் போட்டியை அறிவிப்பதில் கோகுலம் பெருமை கொள்கிறது.

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா
நினைவுச் சிறுகதைப் போட்டி - 1996
பரிசு
ரூ. 1000/-

1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவ மாணவியர் (இவ்வாண்டு (1996) +2 எழுதியவர்கள் உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம். ஆசிரியர் அல்லது பெற்றோரின் கையொப்பமிட்ட சான்று இணைக்கப்பட வேண்டும்.

2. சிறுகதைகள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என்று எதைப் பற்றியதாக வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழியுடன் அனுப்ப வேண்டும். கோகுலத்தில், கதைகள் 3 முதல் 4 பக்கங்களுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும்.

3. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதலாம். கையெழுத்து தெளிவாகப் புரியும்படி இருக்க வேண்டும். தட்டச்சு செய்தும் அனுப்பலாம். ஆனாலும் கட்டாயமில்லை.

4. பரிசு பெறாத, பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையைக் கதைகளுடனேயே இணைக்க வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை. இது குறித்து எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப் பட மாட்டாது.

5. இதில் கலந்து கொள்ளக் கட்டணம் ஏதும் இல்லை. ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக உறுதிமொழி இருக்க வேண்டும்.

6. முதல் பரிசு ரூ. 300/- (ஒரு கதைக்கு) இரண்டாவது பரிசு ரூ. 200/- வீதம் இரண்டு கதைகளுக்கு. மூன்றாவது பரிசு ரூ. 100/- வீதம் மூன்று கதைகளுக்கு. ஆக மொத்தம் ரூ. 1000 பரிசாக வழங்கப்படும்.

7. தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூபாய் ஐம்பது பரிசாகப் பெறும். கதைகளை முதல் முறையாக வெளியிடும் உரிமை கோகுலத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே.

8. **முடிவு தேதி 30.6.96.** இதற்கு மேல் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்பட மாட்டா. தபாலில் ஏற்படும் தாமதத்திற்கு கோகுலம் பொறுப்பேற்காது. நடுவர் குழு பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

9. அயல்நாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தரவேண்டும்.

10. கதைகளை, "ஆசிரியர் கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் "அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி" என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

11. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும், சந்தேகங்களுக்கும் கோகுலம் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானதாகும்.



வீட்டுத் தோட்டம்

வீட்டைச் சுற்றி வெற்றிடமாய்
விட்டிருப்போமே - அதை
வெட்டித்தட்டிப் பாத்திகளாய்க்
கட்டிவைப்போமே!
ஆட்டை, மாட்டைத் தடுக்கவேலி
இட்டுவைப்போமே - சுரை
அவரை, வெண்டை, முருங்கை,
வாழை
நட்டு வைப்போமே!

கூட்டியள்ளும் குப்பைகொண்டு
கொட்டிவைப்போமே - வீண்
கொல்லைகீரைப் பாசனமாய்க்
கெட்டி வைப்போமே!
நீட்டுகின்ற களைமுளையைக்
கொத்திவைப்போமே - கொஞ்சம்
நெற்றிவேர்வை நிலத்திலும்தான்
சொட்ட வைப்போமே!
ஊட்டச்சத்துக் காய்கனிகள்
உட்புசிப்போமே - மீதி
உள்ளவற்றைக் கேட்பவர்க்கு
விற்று வைப்போமே!
ஈட்டும்காசைச் சேமிப்பிலே
எண்ணிவைப்போமே - ஒரு
இக்கட்டுக்கு அதையடுத்துச்
செலவு செய்வோமே!

கேட்டைத்தரும் அசுத்தக்காற்றுக்
கேட்டிருப்போமே - நோய்க்
கிருமிநமை அண்டிடாமல்
எட்டிவைப்போமே!
தோட்டம்தரும் தூயகாற்றைத்
துய்த்திருப்போமே - பிணித்
துயரில்லாமல் நீண்டகாலம்
உய்த்திருப்போமே!

- தளவை. இளங்குமரன்


எங்கள் பள்ளி

பாடம் படிக்கும் பள்ளி இது
பண்பை வளர்க்கும் பள்ளி இது.
மூடத் தனங்கள் அகன்றிடவே
முயற்சி செய்யும் பள்ளிஇது.

நாட்டைக் காக்கும் குடிமகனை
நன்கு வளர்க்கும் பள்ளி இது.
படிப்பு பண்பு வீரத்தைப்
போற்றி வணங்கும் பள்ளிஇது.

எனக்குப் பிடித்த பள்ளி இது
எவரும் விரும்பும் பள்ளிஇது
தன்னம் பிக்கை நட்பினையும்
தந்து உயர்த்தும் பள்ளி இது!

– ச.இளையராஜா, கீழ்நெல்விமலை.



எங்கள் பசு


புல்லைத் தின்னும் பசு இது
புனித மான விலங்கிதுவே.
வல்ல ஆற்றல் நல்கிடும்
வெள்ளைப் பாலைத் தந்திடும்.

செல்வம் காட்டி வீட்டினிலே
சுகமாய் வளர்க்கும் விலங்கிது!
நல்ல குணங்கள் நிறைந்தது
நலங்கள் யாவும் தருமிது!

'அம்மா' என்று அழகாக
அழகுத் தமிழில் அழைக்குமிது!
அம்மா போன்ற பாசத்தை
அள்ளித் தந்திடும் விலங்கிது.

பெருகி விளைச்சல் கண்டிடவே
போடும் சாணம் உரமாகும்
விரும்பி இதனை வீட்டினிலே
வளர்த்தால் நன்மை கூடிடுமாம்!

– எம்.ஏ.எஸ். அமிர்தவள்ளி,
அருப்புக்கோட்டை.



அம்மா

அம்மா மிகவும் நல்லவள்
அதனால் தினமும் போற்றிடுவேன்

ஆர்வம் எனக்கு அளித்திடுவாள்
அழகாய்ப் பாடிக் காட்டிடுவாள்!

பாடம் படிக்க வைத்திடுவாள்
பாலும் சோறும் ஊட்டிடுவாள்

நாட்டை நேசிக்க வைத்திடுவாள்
நல்ல கதைகள் சொல்லிடுவாள்.

– வி.பி. வேலுச்சாமி, நரசிபுரம்.



பிருந்தாவனக் கவியரங்கம்



தோட்டம்

தோட்டம் நல்ல தோட்டம்
தாழு வீட்டுத் தோட்டம்
வாட்டம் அறியாத் தோட்டம்
வண்ண மலர்த் தோட்டம்!

வட்ட வட்டப் பூசணி
வானம் பார்த்துச் சிரிக்குது
குட்டை கத்தரி பீர்க்கையும்
குலுங்கிக் காய்த்து சிரிக்குது!

பாம்பு போலப் புடலங்காய்
பார்க்கப் பார்க்க ஆசையாம்!

தின்னக் கசக்கும் பாகற்காய்
தோன்றி நம்மை அழைக்குது!

சோம்பித் திரியும் எவரையும்
சுலப மாக மாற்றிடும்
வம்பு பேசித் திரிவதை
,வியக்கும் வண்ணம் திருத்திடும்!

- கோ. மோகனா,
கடையநல்லூர்.


எழுந்தாச்சு!

பள்ளிக் கூடம் விட்டாச்சு
வீட்டுப் பாடம் முடிச்சாச்சு
அம்மா கிட்டே வைச்சாச்சு
டீ.வி. இப்போ போட்டாச்சு!

கார்டூன் படமும் வந்தாச்சு
அறிவியல் பாடம் பார்த்தாச்சு
விளையாட்டுப் போட்டி முடிவாச்சு
செய்திச் சுருக்கம் கேட்டாச்சு

இப்போ டீவி அணைச்சாச்சு
இதமாய் தூக்கம் வந்தாச்சு
கட்டில் மேலே படுத்தாச்சு
குரட்டை ஒலியும் எழுந்தாச்சு!

- இரா. தென்றல் நிலவன்,
சேலம் மாவட்டம்.



பிருந்தாவனக் கவியரங்கம்

கரடி

கரடியாரே கரடியாரே
எங்கே போறீங்க?
காய்கறிகள் வாங்கிவரக்
கடைக்குப் போறேங்க.
காய்கறிகள் வாங்கி வந்து
என்ன செய்வீங்க?
காரசாரச் சமையலொன்று
செய்யப் போறேங்க.
சமைச்ச பின்னே அப்புறமா
என்ன செய்வீங்க?
சப்புக் கொட்டி உட்கார்ந்து
சாப்பிடுவேனுங்க.
சாப்பிட்ட பின் அப்புறமா
என்ன செய்வீங்க?
சாய்ந்து படுத்துச் சுகமாக
தூங்கப் போறேங்க.
தூங்கி எழுந்து அப்புறமா
என்ன செய்வீங்க?
மிச்சமுள்ள உணவையெல்லாம்
சாப்பிடுவேனுங்க
சாப்பிட்ட பின் அப்புறமா
என்ன செய்வீங்க?
தொட்டு விட்ட தூக்கத்தையே
தொடர்ந்து செய்வேங்க.
இப்படியே தூங்கித் தூங்கி
என்ன செய்வீக?
இப்ப இருக்கும் உடம்பையே
பெருக்க வைப்பேங்க
உண்டு உடம்பைப் பெருக்க வைச்சா
மண்டுக் கரடியே
உடம்பு ஊளைச் சதையாகி
உப்பிப்போகுமே!

- சிறுவயல் செயமணி.





குரங்காரே!

குர்குர் குர்குர் குரங்காரே
குறும்புத் தனத்தில் தேர்ந்தவரே
'விர்விர்' என்றே முறைக்காதீர்
வீணாய்த் தொல்லை கொடுக்காதீர்.
குட்டியை வயிற்றில் தாங்குகிறீர்
குதித்துத் தாவி ஓடுகிறீர்!
பல்டி அடித்துத் தாவுகிறீர்
பார்ப்போர் மனதைக் கவர்கின்றீர்!
அடியேன் அழைத்தால் வருவீரோ
அமர்ந்து பழத்தை ஏற்பீரோ?

- முருகேசன், தேனி.



அன்போசை!

கடலில் கேட்பது அலை ஓசை
வானில் கேட்பது இடி ஓசை

காட்டில் கேட்பது குயில் ஓசை
காற்றில் கேட்பது புயல் ஓசை

மலையில் கேட்பது எதிர் ஓசை
மனதில் கேட்பது அன்போசை!

– ஏ. குமார், வரிகல்.



மாம்பழம்

மாம்பழம் குண்டு மாம்பழம்
மகிழ்ந்து உண்ணும் மாம்பழம்

தித்திக்கச் சுவைக்கும் மாம்பழம்
தெவிட்டா இன்பம் மாம்பழம்

மஞ்சள் வண்ண மாம்பழம்
மல்கோவா பச்சை மாம்பழம்

கொட்டை உடைய மாம்பழம்
கோடையில் விளையும் மாம்பழம்

பல்வகை வடிவம் மாம்பழம்
பறித்திடத் தூண்டும் மாம்பழம்.

மக்கள் விரும்பும் மாம்பழம்
மனதை மயக்கும் மாம்பழம்

மூக்கு உடைய மாம்பழம்
முக்கனி முதலில் மாம்பழம்!

– எஸ். புகழேந்தி, கீழ்நெல்லிமலை.



காப்போம்!


அன்புக்குக் கை கொடுப்போம்!
பண்புக்குப் பரிசளிப்போம்!

உண்மைக்கு உயர்வளிப்போம்!
உழைப்புக்குத் தோள்கொடுப்போம்!


வன்முறைக்கு விடையளிப்போம்!
வாழ்ந்திடக் கல்வி உவந்தளிப்போம்!

சோம்பல் எனும் களையெடுப்போம்!
சுத்தம் பேணிப் பெருமை காப்போம்!

– எஸ். ராஜகோபாலன், புதுவை-6.



கண்ணாடி!



பளபளக்கும் கண்ணாடி
பளிங்கு நிறமாம் கண்ணாடி

முகத்தைக் காட்டும் கண்ணாடி
மூன்றடி உயரக் கண்ணாடி

பெல்ஜிய நாட்டுக் கண்ணாடி
பூக்கள் பொறித்த கண்ணாடி

இத்தனை பெருமைக் கண்ணாடி
இல்லா வீடும் இருக்கிறதா?

முகத்தைக் காட்டும் இதுபோல
அகத்தைக் காட்டும் பொருளுண்டோ?

– தேன்மொழி, நெய்வேலி -3.

நாய்க்குட்டி

நான் வளர்க்கும் நாய்க்குட்டி
நாக்கை நக்கும் நாய்க்குட்டி
எண்ணம் போல முன்னாலே
எட்டிக் குதிக்கும் நாய்க்குட்டி

பட்டை மூஞ்சி ஆனாலும்
பெரிய காது நாய்க்குட்டி
குட்டை வாலை ஆட்டியே
கூடவே நடக்கும் நாய்க்குட்டி.

பாலும் பழமும் கேட்காது
பாதம் அல்வா கேட்காது.
பழைய சாதம் போட்டாலே
பெரிதும் மகிழும் நாய்க்குட்டி.

பத்து நாளாய் காணுங்க!
பார்த்தவர் உண்டோ, சொல்லுங்க!
எத்தனை பாசம் எங்களுக்குள்!
எவரும் கண்டால் சொல்லுங்கள்!

– எம்.கே.நாகராஜன்,கோவை – 9.



கவிக்குயில்

ஆங்கில மொழியில் வல்லவராம்
அழகுக் கவிதை புனைபவராம்
காந்தி வழியில் நடந்தவராம்
கற்பனை உள்ளம் கொண்டவராம்

பாரதி போற்றிய புதுமைப்பெண்
போன்றே இவரும் இருந்தாராம்.
வீர சுதந்திரப் போரினிலே
விரும்பி தண்டனை பெற்றாராம்!

தண்டியில் உப்புப் போராட்டம்
தந்த தங்கம் இவரேதான்.
இன்னும் யாரென அறியீரோ
இவரே கவிக்குயில் சரோஜினியாம்!

– கே.பி.ஜவஹர் சசிகுமார், ஈரோடு.



[redacted]

கொசு பறக்குது தெரியுமா?
குரலின் ராகம் கேட்குதா?
வீசும் காற்றும் தோற்குதே!
வெற்றி கீதம் இசைக்குதே!

காய்ச்சல் யானைக் காலையும்
கொண்டு வந்து சேர்க்குதே!
வாய்க்கால் போல சாக்கடை
வாழ்ந்து பெருக நின்றதே!

வீட்டைச் சுற்றி நீரையே
வடிந்து ஓட வையுங்க
நாட்டை விட்டுக் கொசுவையே
நாடு கடக்க வையுங்க!

-ஸ்ரீ நிவாஸ் பிரபு,
சென்னை - 90.





மனிதன்

அடக்கமாய் வாழ்பவனே மனிதன்
அன்போடு பழகுபவனே மனிதன்

பகையின்றி இருப்பவனே மனிதன்
பாசத்தைப் பொழிபவனே மனிதன்

துன்பத்தைத் தீர்ப்பவனே மனிதன்
தோல்வியை நீக்குபவனே மனிதன்.

பொறுமையுடன் இருப்பவனே
மனிதன்
பொறுப்புடனே வாழ்பவனே மனிதன்

நெறிவழி நடப்பவனே மனிதன்
நேர்மையை மதிப்பவனே மனிதன்.

- வீ. பாலசுப்ரமணியன்,
பொன்புதுப்பட்டி.





11. சிக்கிக் கொண்டனர்!



புவனா தேடிய புதையல்

புவனாவைக் கடத்த முயன்ற இரண்டு முரடர்களும் விபத்துக்குப் பலியாகி விட்டார்களா!

ராணாவுக்குச் செயலாளராக இருந்த புவனாவின் தந்தை சுந்தரத்திடம் வேலை பார்த்தவர்கள் என்பதால், புவனா அவர்களிடம் பேசிப் பார்த்தால் மறந்து போன பழைய நிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொண்டு வரலாம். அது புதையலைப் பற்றி அறிய உதவலாம் என்று அவர்களை எத்தனை ஆவலாக ஓடி வந்தார்கள்! எல்லாம் ஏமாற்றமாகப் போய் விட்டதே! பெருத்த ஏமாற்றத்திற்கு ஆளானவள் புவனாதான். அந்த யோசனையைத் தந்ததே அவள்தானே?

இனிமேல் என்ன செய்யலாம்? யாருக்கும் உருப்படியாக எந்த யோசனையும் தோன்றவில்லை. ஏதேதோ குருட்டாம்போக்கு வழிகள்தான் தோன்றின!

டாக்டர் தனியாக உட்கார்ந்து யோசித்தார். புவனாவுக்கு தன் குழந்தைக் கால வாழ்க்கையைப் பற்றிய உண்மைகள் எல்லாமே தெரிந்து விட்டிருந்தது. ராம்தம்பூர் ராணாவின் அரண்மனையில் வாழ்ந்த வாழ்க்கை நிகழ்ச்சிகள் எல்லாமே அவளுக்கு நினைவில் இல்லை என்றாலும் தெளிவில்லாத சில சுவடுகள் அவள் மூளையில் பதிந்து விட்டிருந்தன. அவைகளில் ஒன்றுதான், மாடிப்படியில் அவள் தந்தை சுந்தரத்திற்கு ஏற்பட்ட முடிவு. தனக்கு முன்னால் மாடிப் படிகளில் இறங்கிக் கொண்டிருந்த தந்தையின் மேல், மிகப் பெரிய லஸ்தர் விளக்கு விழுந்து அவரை மாய்த்த பயங்கரக் காட்சி, அவள் மூளையின் எங்கோ ஒரு மூலையில் பதிந்து விட்டிருந்தது.

அதன் காரணமாகவே அவள், வீடியோவில் அந்த மாடிப்படி காட்சி தெரிந்ததும் தொடர்ந்து மயக்கமானாள். அதற்கு என்ன காரணம் என்பதை அவளால் அப்போது ஊகிக்க முடியவில்லை. டாக்டராலும் மற்றவர்களாலும் கூட அறிய முடியவில்லை. முரடர்கள் கூறிய பிறகுதான் மாடிப்படியின் முக்கியத்துவம் அவர்களுக்குப் புரிந்தது. அந்த மாடிப்படிக்கு புவனாவை அழைத்துச் சென்று காண வைத்து, அவளுக்கு ஏற்படும் மன

மதிஒளி

மாற்றத்தைக் காண வேண்டும் என்பதுதான் டாக்டர், ரவி இருவரும் எடுத்த முயற்சி. ஆனாலும் அந்த மாளிகைக்குள் போன பிறகும் கூட புவனா அந்த மாடிப்படியை இன்னும் நேரில் காணவில்லை. அதற்கு முன்பே கடத்தப்பட்டு விட்டாள். டாக்டரும் ரவியும் முயற்சி செய்து ராம்தம்பூருக்கு அவளை அழைத்து வந்த போது, அந்த மாடிப்படியின் முழுப் பின்னணி அவர்களுக்குத் தெரியாமல் இருந்தது. ஆனால், இப்பொழுது அது அவர்களுக்குத் தெரிந்து விட்டது. புவனாவுக்கும் கூட அது தெரிந்து விட்டிருந்தது. அதனால், முன்பு அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு அவளுக்கு அதிர்ச்சி ஏற்படும் என்பதை எதிர்பார்க்க முடியாது. ஒரு பயம்; பீதிதான் ஏற்படும். அதோடு, கூடவே பழைய நினைவுகளின் சுவடுகளும் தோன்றி, புதையலைப் பற்றி புதிய தகவல்களை அறிய உதவலாம் என்று எண்ணினர்.

புவனா இப்பொழுது எல்லாம் அறிந்தவள் ஆகி விட்டாள். மனத்தில் துணிவும் வளர்ந்து விட்டது. இல்லாவிட்டால், முரடர்களிடம் தானே பேசிப் பார்க்கிறேன் என்று கிளம்புவாளா? அவளை அழைத்து வந்து மாடிப்படியைக் காண வைத்து, சிந்திக்க வைத்தால் ஏதாவது புதிய தகவல்கள் கிடைக்கலாமே?

டாக்டர், ரவியிடம் தன் யோசனையைக் கூறினார். ரவி அதை வரவேற்றார்






இருவரும் புவனாவிடம் கேட்டனர்.

"நானே இதைக் கேட்க எண்ணினேன். நீங்களே கேட்டு விட்டீர்கள்" என்று கூறிய புவனா, "மாடிப்படியைக் காண வைக்க வேண்டும் என்றுதானே என்னை நீங்கள் இங்கே அழைத்து வந்தீர்கள்? முதலில் நீங்கள் எதிர்பார்த்த அளவுக்கு அதிர்ச்சி இப்பொழுது எனக்கு இருக்காது. என் குழந்தைக்கால வாழ்வில் இந்த மாடிப்படியின் முக்கியத்துவம் என்ன என்பது எனக்குத்தான் இப்பொழுது தெரிந்து விட்டதே" என்று சிரித்தாள்.

மூவரும் மட்டும் கிளம்பினர். நல்லவேளை, அன்று ஏதோ உள்ளூர் பந்த். அதனால், மாளிகையில் பார்வையாளர் கூட்டம் அதிகமில்லை. சோபா ஊஞ்சலைக் கடந்து மாடிப்படியை நெருங்கினர். புவனா மௌனமாக ஒவ்வொரு படியாக இறங்கினாள்.

"மனதை திடப்படுத்திக் கொள். நினைவுகளை மீண்டும் கொண்டுவர முயன்று பார் புவன். நீ அற்பமாக எண்ணும் எந்த ஒரு நினைவுச் சுவடும் நமக்கு மிகவும் உதவக் கூடியதாக இருக்கும்," என்றார் டாக்டர்.

புவனா மௌனமாகத் தலையாட்டி விட்டு இறங்கினாள். தந்தை சுந்தரத்திற்கு ஏற்பட்ட முடிவின் நினைப்பு அவள் மனதைக் கலங்க வைத்திருக்க வேண்டும். கண்கள் கலங்கின. "அப்பா அப்பா" என்று தன்னையறியாது விசும்பினாள். சில நிமிடங்களில் அது அழுகையாக வெடித்



''உங்க பையன் கிளாஸ்ல தொண தொணன்னு பேசிக்கிட்டே இருக்கான் அங்கிள்.''

''அது எப்படி உனக்குத் தெரியும்?''

'''அவன் பேசறதே என் கூடத்தானே!''

– சீர்காழி. வி. ரேவதி

தது.

அவளைத் தேற்ற முயன்ற ரவியை, டாக்டர் தடுத்தார். "இத்தனை ஆண்டுகள் தேக்கி வைக்கப்பட்டிருந்த இனம்காணா துக்கம் இப்பொழுது வெளிப்படுகிறது. துக்கச் சுமை குறையும் அளவுக்கு அவள் அழட்டும். சிறிது நேரம் அழ விடுவோம். இப்பொழுது அவள் சாதாரணச் சிறுமி அல்ல. சென்னையில் இருந்தபோது இருந்த மெல்லிய மனம் படைத்த புவனா இல்லை இவள். எதையும் எதிர்கொள்ளும் அளவுக்கு மனஉறுதியை வளர்த்துக் கொண்டு விட்ட புதிய புவனா. இப்பொழுது அவள் நம்முடைய ஆறுதலையோ, தேறுதலையோ எதிர்பார்க்காத மனஉறுதி படைத்தவள். பாருங்கள் நடப்பதை" என்றார் மெதுவாக டாக்டர்.

சில நிமிடங்களிலேயே தன்னைத் தேற்றிக் கொண்டு விட்ட புவனா, "டாக்டர், நானும் அப்பாவும் பேசிக் கொண்டே இந்த வழியில்தான் இறங்கினோம். என் கையில் அழகான ஒரு பொம்மை இருந்தது. அதைத் தோளில் சாய்த்தபடி அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு இறங்கினேன். இந்தத் திருப்பத்தில் இறங்குவதற்குமுன் என் பொம்மை, மேல்படியில் தவறி விழுந்து விட்டது. நான் அப்பாவின் கையை உதறிவிட்டு இரண்டு மூன்று படி மேலே ஏறிப் போனேன். அதற்குள் அப்பா இன்னும் இரண்டு படி கீழே இறங்கி விட்டார். சதிகாரர்களின் திட்டப்படி, மேலே இருந்த மிகப் பெரிய லஸ்தர் விளக்கு அறுந்து அவர் மேல் விழுந்தது. நான் உயிர் தப்பி, மயக்கமானேன்," என்றாள்.

முரடர்கள் விவரித்த அதே காட்சிதான் என்றாலும், குறுக்கிடாது புவனாவின் வாயால் இப்பொழுது அதைக் கேட்டனர் இருவரும்.

''அந்த பொம்மை என்ன பொம்மைம்மா?''

"உங்க அப்பாவின் முகம், ராணாவின் முகம் நினைவிருக்கிறதா புவனா?"

"இல்லையே மாமா. ஆனால் இப்படித்தான் இருப்பார்கள் என்று என் மனத்தில் கனவு உருவங்கள் போல் ஒரு நினைப்பு இருக்கிறது. ஆனால், உங்களுக்குப் புரியும் படி என்னால் விளக்கிச் சொல்ல முடியவில்லை."

மூவரும் மாடிப்படிகளில் இரண்டு மூன்று முறை இறங்கி ஏறிப் பார்த்தனர். பழைய நினைவுகளின் கவடுகள் ஏதாவது நினைவுக்கு வருகிறதா என்று புவனாவும் முயன்று பார்த்தாள். பலன் இல்லை. வேறு வழியின்றி அடுத்திருந்த பெரிய மண்டபத்தில் நுழைந்தனர். அங்கே ராணாக்கள் பயன்படுத்திய ஈட்டி, வாள்கள், கேடயங்கள், தலைக்கவசம் போன்ற போர்க் கருவிகள் வண்ணக் கிரீடங்கள் எல்லாம் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

அவைகளைப் பார்த்துக் கொண்டே வந்த புவனா, ஒரு இடத்தில் வந்து நின்று பார்த்தாள். அங்கே மங்கிப் போன பழங் காலத்துப் புகைப்படங்கள் சில மாட்டி வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் ஒன்றில் மாளிகைப் பணியாளர்களுடன் ராணா இருந்தார். அதையே சிறிது நேரம் உற்றுப் பார்த்த புவனாவின் முகம் மகிழ்ச்சியாலும், வியப்பாலும் விரிந்தது.

"இதோ பாருங்கள்! இவர்தான் எங்க அப்பா சுந்தரம். கீழ் வரிசையில் தரையில் உட்கார்ந்து இருப்பவர்களில், மூன்றாவதாக இருப்பவள்தான்... எங்க வீட்டு வேலைக்காரி. என்னைத் தாயைப் போல் கவனித்து வளர்த்தவள். பெயர் கூட..." – நெற்றியைச் சுருக்கிய புவனா, "இப்போ நினைவு வருது... பெயர் இந்திராணி. முதலில் ராணாவிடம்தான் வேலை பார்த்தாள். ராணாதான், தாயற்ற என்னை கவனிக்க அவளே ஏற்றவள் என்று எங்க வீட்டுக்கு அனுப்பி வைத்தார். இந்திராணி

ரொம்ப நல்லவள். அவளுக்குக் கதை சொல்லத் தெரியும். பாட்டுப் பாடுவாள். ஆட்டம் பாட்டம் கோலாட்டம் எல்லாம் தெரியும். எத்தனை அழகாகக் கோலம் போடுவாள் தெரியுமா? என்றாள்.

"புதையலைப் பற்றி ஏதாவது நினைவுக்கு வருதாம்மா?" என்று ஆவலாகக் கேட்டார் டாக்டர்.

"ராணா என்னிடம் மிகவும் அன்பாக இருப்பதையும், தன்னோடு தோட்டத்தில் வாக்கிங் போக அழைத்துப் போவதையும், என்னைத் தன் மடியில் தூக்கி வைத்துக் கொஞ்சியதையும் கண்ட இந்திராணி, 'பாப்பா, மகாராணாகிட்டே புதையல் எங்கே இருக்குன்னு கேளேம்மா?' என்று அடிக்கடி தூண்டுவாள். நானும் விவரம் புரியாது கேட்பேன். மகாராணா சிரித்து மழுப்பி விடுவார்."

தங்கள் பேச்சை பார்வையாளர் போர்வையில் ஒருவர் கவனிக்கிறார் என்பதை மூவருமே கவனிக்கத் தவறி விட்டனர்.

புவனா தொடர்ந்தாள்.

"ஒருமுறை. அன்று எனக்குப் பிறந்த நாள். புதுசு போட்டுக் கொண்டு ராணாவுக்கு நமஸ்காரம் பண்ண வந்தேன். கன்னத்தைத் திருகிக் கொஞ்சி வாழ்த்திய ராணா, "உனக்கு என்ன பரிசு வேண்டும்" என்று கேட்டார். "என்ன கேட்டாலும் தருவீர்களா?" என்று உறுதிவாங்கிக் கொண்டு, "புதையல் எங்கே இருக்குன்னு" கேட்டேன். ராணா, இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. அசந்து போனார். அப்பா சுந்தரத்துக்கு ஒரே கோபம். "கழுதை, வாடி இப்படி" என்று என் கையைப் பிடித்து இழுத்தார்."

புவனா நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தாள்.

"மகாராணா அப்பாவைத் தடுத்தார். சுந்தரம், குழந்தை இந்தக் கேள்வியைத் தானாகக் கேட்கவில்லை. மற்றவர்கள் தூண்டி விட்டுக் கேட்க வைத்திருக்கிறார்கள். குழந்தைக்கு என்ன தெரியும்?" என்று அப்பாவை அடக்கினார். பிறகு என்னிடம் திரும்பி, "நான் உறுதியளித்தேன் இல்லையா? அதனால் கண்டிப்பாக உன் காதில் புதையல் இரகசியத்தைக் கூறுகிறேன். ஆனால் யாரிடமும் நீ அதைக் கூறிவிடக் கூடாது" என்று குனிந்தார். அப்பா பதறினார். "எனக்கே கூடத் தெரியாது தாங்கள் காப்பாற்றி வந்துள்ள புதையல் இரகசியத்தை வெளியிடாதீர்கள். வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு மகாராணா. இது குழந்தைக்கே கூட ஆபத்தாக முடியும்" என்று தடுத்தார். ராணா கேட்கவில்லை. குனிந்து என் காதில் கிசுகிசுத்தார்."

திடீரென்று அந்த மாளிகையின் கதவுகள் மூடப்பட்டன. அவர்கள் இருந்த மண்டபத்தின் மிகப் பெரிய கதவுகளும் மூடப்பட்டுத் தாளிடப்பட்டன!

"நம் பரபரப்பில் சூழ்நிலையை மறந்து விட்டோம். முட்டாள்தனமாக சிக்கிக் கொண்டு விட்டோம்" என்று பரபரத்தார் ரவி.

(தொடரும்)



"நீ தினமும் ராத்திரி எத்தனை மணி வரை படிப்பே?"

"தூக்கம் வர்ற வரைக்கும்."

"எப்ப தூக்கம் வரும்?"

"புத்தகத்தைக் கையில எடுத்ததும்!"


– சீர்காழி. வி. ரேவதி

"அங்க... போறானே அவன் என்னோட படிக்கிறான்!"

"பொய் சொல்லாதே! உன் கிளாஸ்னு வேணும்னா சொல்லு!"

- சோமசேகர்




சிரிப்...
"முதுகுலே அரிக்குது. கொஞ்சம் சொறிஞ்சு விடறியா?"
"ஓட்டை கழட்டி வச்சிட்டு வா! சொறிஞ்சு விடறேன்.
"என்னடா, மைல் கல்லைப் பார்க்கிறே?"
"பாவம்டா! 100க்கு ஒரு மார்க்குதான் வாங்கி இருக்குடா."
— ஏழ்வரைக்குடியான்
"எல்லாரும் பாம்புக்குப் பால் வைப்பாங்க. நீ என்னடான்னா தண்ணி வைச்சிருக்கியே!"
"அது தண்ணி பாம்புடா, அதான்..."
"எந்தமான்டா, அந்தமான்லேருந்து வரவழைச்சது?"
"அந்தமான் டா!..."
"என்னவேணும்?"
"ஸ்டாம்ப் ஒட்ட, கம் வேணும். எங்கே இருக்குது!"

பவளம் தந்த பரிசு!

அமைப்பு : ரே

ஓவியம் : கரோ





குற்றவாளி மகாராணியார்தான் அரசே. அதனால் தான் அழைத்து வரவில்லை!
மகாராணியாரா!
புதிய கட்டில் செய்ய அனுமதி பெறாமல் மரங்களை வெட்ட உத்தர விட்டிருக்கிறார்!
யாராக இருந்தா லும் விசாரணைக்கு வர வேண்டும். மகாராணியை அழைத்து வாருங்கள்.
மகாராணி வந்ததும்
அனுமதி பெறாது மரங்களை வெட்டு வது குற்றம் என்பது தெரியுமல்லவா?
தெரியும்


சட்டம், மகாராணிக்கும் மண் குடிசைவாசிக்கும் சமம்தான் என்பதும் தெரியுமல்லவா?
தெரியும்
சட்டத்திற்கு மதிப்பளிக்க வேண்டிய அரசியாரே சட்டத்தை மீறியுள்ளது கடுமையான குற்றம்! ஒரு வாரம் சிறை தண்டனை விதிக்கிறேன்
அரசே! இது நியாயம் இல்லை, அரசியாருக்குக் கருணை காட்டுங்கள்....
சட்டம், எல்லோருக்கும் சமம்.
சலுகை வேண்டாம் அரசே. உங்களைப் பற்றி நான் மிகவும் பெருமைப் படுகிறேன்.
அரசியார் போனபின் -
கிராமத் தலைவர்கள் அவசரமாகக் காண வந்திருக் கிறார்கள்.
உடனே வரச் சொல்லுங்கள்.


உள்ளே வந்து வணங்கி -
குழந்தைகளிடையே மர்ம கண் நோய் பரவிவருகிறது. கண் எரிச்சலுடன் ஒரு வாரம் ஜுரம்...
பிறகு பார்வை போய்விடுகிறது!
கேட்கவே நடுங்குகிறதே...!
தொற்றுநோய் போல் வேகமாகப் பரவுகிறது!
ஏராளமான குழந்தைகள் தினமும் பாதிக்கப் படுகிறார்கள்!
எந்த மருந் துக்கும் கட்டுப் படவில்லை!
தலைமை வைத்தியர் தேவதத்தர் எங்கே?
இதோ வந்து கொண்டே இருக் கிறேன் மன்னா.
கண் நோயைப் பற்றிக் கேள்விப் பட்டீர்களா?
இரண்டு நாட்களுக்கு முன் தெரிந்தது. மருந்து தயார்.


மருந்து ஏராளமாகத் தேவைப்படுமே? மருந்தைக் கூறிவிட்டால், கிராம வைத்தியர்கள் தாங்களே தயாரித்துக் கொள்வார்களே?
வேண்டாம் மன்னா. இலாப நோக்கில் அதிக விலை வைப்பார்கள். நானே தயாரித்து இலவசமாக அனுப்பி வைக்கிறேன்.
தன்னலம் கருதாத உங்கள் மனதைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை தேவதத்தரே!
சில நாட்கள் கழித்து - -
ஆராய்ச்சி மணி ஒலிக்கிறதே! மரம் வெட்டிய குற்றவாளி யார்? வரட்டும்.
அரச சபையில் -
என்னது தேவதத்தரா?
ஆமாம்! அவரேதான்!
மன்னவா, அனுமதி இன்றி மரத்தை வெட்டித் தன் வீட்டுக்கு உத்தரம் போட்டிருக்கிறார்!



தேவதத்தரே! மரங்களின் அருமை தாங்கள் அரியாததா? மனித் குலத்தை வாழ வைக்கும் உயிர் நாடி அல்லவா மரங்கள்? சட்டம் தெரியாதவரா தாங்கள்?
பலத்த மழை, சூறாவளிக் காற்றில் உத்தரம் முறிந்து கூரை சரிந்து விட்டது. அனுமதி பெற நேரம் இல்லை.
எனவே, குற்றத்தை ஒப்புக் கொள்கிறீர்கள் இல்லையா?
ஆம் அரசே... இருப்பினும் சூழ்நிலை, அவசியத்தைக் கவனியுங்கள். மக்களுக்காக நான் பல தியாகங்கள் செய்தவன்...
உங்கள் தியாகத்தையும் தொண்டையும் நாடே அரியும். அதற்குத் தலைவணங்குகிறோம். ஆனால், சட்டமீற லுக்கு, அது சலுகை வழங்காது!
சட்டம், எல்லோருக்கும் சமம். எனவே, சட்டப்படி உங்களுக்கு ஏழு நாள் சிறை தண்டனை விதிக்கிறேன்.
ஒரு வாரம் கழித்து -
இன்று உங்களுக்கு விடுதலை. அரசரே அழைத்துப் போக வருவதாகக் கூறியுள்ளார்.



தேவை இல்லை. நானே போய்க் கொள்வேன். இனி இந்த நாடும், மன்னரும் என் பகைவர்கள்.
அரசே, தேவதத்தர் வீடு பூட்டிக் கிடக்கிறது. யாரிடமும் கூறாமல், பேத்தியுடன் எங்கேயோ போய்விட்டார்.
ஆண்டுகள் ஓடின. ஒருநாள் -
அரசே, முன்பு பிடித்த மர்ம கண் நோய், மீண்டும் குழந்தைகளிடையே பரவ ஆரம்பித்திருக்கிறது.
வேகமாகப் பரவுகிறது. பல குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
உரிய மருந்தை தேவதத்தர் மட்டுமே அறிவார். அவரால் மட்டுமே இந்த நாட்டுக் குழந்தைகளைக் காக்க முடியும். அவர் எங்கு இருக்கிறார் என்பது தெரியுமா?
இரண்டு மாதங்களுக்கு முன் கொல்லி மலையில் பார்த்ததாகத் தகவல்.
உடனே கிளம்புவோம். புறப்படுங்கள் அமைச்சரே!


நம்மைக் காண அவர் மறுக்கலாம். அதனால் மாறு வேடத்தில் போகலாம்.
முடக்கு வாத நோயாளிகளாகவும் நடிப்போம்.
கொல்லிமலைக் காட்டில் -
தேவதத்தரைக் கண்டுபிடிக்க முடியவில்லையே!
அதோ ஒரு சிறுமி வருகிறாள், கேட்போம்.
இங்கே சித்த வைத்தியர் தேவதத்தர் இருக்கும் இடம் தெரியுமா?
எங்க தாத்தா தான் தேவதத்தர். வாங்க என்னோட...
உன் பெயர் என்ன?



முழுப் பெயர் பவளவல்லி. செல்லப் பெயர் பவளம்.
பவளம். யார் இவங்க ரெண்டு பேரும்?
உங்களைத் தேடி வந்தாங்க தாத்தா. கூட்டி வந்தேன்.
மாறுவேடத்தைக் கலைத்ததும் -
வணக்கம் தேவதத்தரே...!
வணக்கம் ஐயா!
மன்னரும் அமைச்சருமா!
ஆம். பழைய பயங்கர கண் நோயால் குழந்தைகள் பாதிக்கப் பட்டு வருகிறார்கள்.
குந்தள நாட்டுக் குழந்தைகளை உங்களால் மட்டுமே காக்க முடியும். உடனே கிளம்புங்கள்.
எனக்குச் சிறை தண்டனை வழங்கிய நாடும், மக்களும் எப்படிப் போனால் எனக்கென்ன?



தண்டித்தவன் நான் தானே? குழந்தைகள் என்ன பாவம் பண்ணி னார்கள்? மனமிரங் குங்கள்.
என் முடிவை யாராலும் மாற்ற முடியாது. குந்தள நாடும் மக்களும் எக்கேடு கெட்டுப் போகட்டும்.
மக்களைக் காப் பது மன்னனின் கடமை. நீங்கள் இல்லாமல் நானும் நாடு திரும்ப மாட்டேன். உங்கள் வீட்டு வாசலில் உண்ணாவிரதம் இருப்பேன்.
அன்று இரவு -
தாத்தா, எனக்குக் கண்ணிரண்டும் எரிகிறது!
இரண்டு நாட் களாகவே எரிச்சல் இருக்கு. இன்று அதிகம்.
பவளம், என்னம்மா பதற வைக்கிறே?
அந்த மர்மக் கண்நோயாக இருக்குமோ? தொற்று நோய் ஆயிற்றே?
தாத்தா, அதே மர்மக் கண்நோயாக இருக்குமோ? ஆமாம். நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்குப் பார்வை போகும்போது எனக்கு மட்டும் என்ன?
பவளம், உன்னைப் பார்வை இழக்கும்படி விடமாட்டேன். இதற்கு மருந்து எனக்குத் தெரியும். இப்பவே சிகிச்சையை ஆரம்பிக்கிறேன்



இப்படித்தானே நூற்றுக்கணக்கான பெற்றோர் தவிப்பாங்க தாத்தா?
பவளம், என்னம்மா சொல்றே?
என் தாத்தா, வீரசேன மன்னரின் அன்பைப் பெற்றவர் என்பது எனக்குப் பெருமை. சட்டத்தின்முன் சகலரும் சமம் என்று மகாராணியையே சிறைக்கு அனுப்பிய நீதி தேவதை ஆயிற்றே அவர்!
தாத்தாவுக்குச் சிறை தண்டனை விதித்தவரையா புகழறேம்மா?
அந்த எண்ணத்தை விடுங்க தாத்தா. சட்டம் வேறு. திறமையும் சலுகையும் வேறு. எதுவுமே சட்டத்தை அசைக்கக் கூடாது தாத்தா.
பவளம், நீயாம்மா பேசறே!
ஆம் தாத்தா. நாட்டைக் கட்டிக் காத்து நல்லாட்சி தருபவை சட்டங்களே. அதில் சலுகை எதிர்பார்ப்பது நாட்டை பலவீனப்படுத்தும். சட்டம் யாருக்காகவும் வளையக் கூடாது. தனிப்பட பாதித்தாலும் மதித்து நடப்போம். அதுவே நமக்குப் பெருமை.
எங்கேம்மா இதையெல்லாம் கற்றாய்!
மனுநீதிச் சோழன் பாடத்தில். செய்த தவறுக்கு தண்டிக்கப்பட்டதை எண்ணாமல், பகை பாராட்டி, ஒரு பாவமும் அறியாத குழந்தைகளைக் காக்க மறுக்கும் உங்களுக்குப் பேத்தியாக இருப்பதை எண்ணி வெட்கப்படு கிறேன் தாத்தா!



இல்லை பவளம். நீ என்னைப் பற்றியும் பெருமைப் படலாம். என் தவறு எனக்குப் புரிந்து விட்டது. இப்பவே கிளம்பலாம்...
ஆமாம்... உன் கண் எரிச்சல்?
உங்களை மாற்ற நான் சொன்ன பொய். தாத்தா...
மன்னரையும் அமைச்சரையும் கூப்பிடலாமா?
தேவை இல்லை... நாங்களே வந்துவிட்டோம்.
சட்டத்தை மதிக்கும் மக்கள், நாட்டின் தூண்கள்.
...உன்னைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன், பவளம். பாதித்த குழந்தைகளுக்கு இது பவளம் தரும் பரிசாக இருக்கட்டும், கிளம்பலாமா?
கருத்து : கதாசாகரம்



சட்டமன்றம் - ஓர் அறிமுகம், க. பழனித்துரை, பக். 99 ரூ. 30/- நியூ எட் பதிப்பகம், த.பெ. எண் 8, 124, என்.ஜி.ஓ. காலனி, திண்டுக்கல் - 624 009.

இந்தியா, உலகத்தின் மிகப் பெரிய ஜனநாயக நாடு. இதை ஆளுபவர்கள், இந்த நாட்டு மக்களால் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்ற அல்லது நாடாளுமன்றப் பிரதிநிதிகள். இவர்களுடைய கடமை என்ன, இவர்களுடைய சக்தி என்ன என்பதையெல்லாம் இந்த நூலில் தெளிவாகத் தந்திருக்கிறார் ஆசிரியர். பாராளுமன்ற உறுப்பினர்கள் திறமையாகச் செயல்பட அவர்களுக்கு உதவ பியூரோ ஆஃப் பார்லிமெண்டரி ஸ்டடீஸ் அண்டு டிரெயினிங் (BUREAU OF PARLIMENTARY STUDIES AND TRAINING) என்ற ஓர் அமைப்பு செயல்படும் புதிய செய்தியை இந்த நூலைப் பார்த்த பிறகுதான் அறிய முடிகிறது. இதைப் போல் இன்னும் எத்தனையோ புதுமையான செய்திகள் இந்த நூலில் உள்ளன. எல்லோருக்கும் பயன்படும் அருமையான தகவல் நூல்.

அம்புலி, பெ. மலர்விழி, பக். 84 ரூ. 15/- தேன் தமிழ்ப் பதிப்பகம், 5-123, அங்கம்மாள் நகர், சேலம் - 636 009.

சிறுவர்களுக்காகப் பாடல்களை எழுதுவது என்பது எத்தனை கடினமான பணி என்பதை, இத் துறையில் முயன்று பார்த்தவர்களால் மட்டுமே உணர முடியும். யாப்பை மட்டுமே கவனித்துக் கொண்டு, உயிர்நாடியான சந்தத்தைக் கோட்டை விட்டவர்கள் அநேகம் பேர் இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் குழந்தைக் கவிஞரின் பாடல்களை அறியாதவர்கள். இந்தத் தொகுப்பில் 73 தலைப்புகளில் அருமையான பாடல்களைத் தந்துள்ளார் ஆசிரியர். குழந்தைக் கவிஞரின் தாக்கம் நூலெங்கும் தெரிகிறது. இது நூலுக்கும், ஆசிரியருக்கும் பெருமைதான்.

நகரங்களில் அரிதாகி வரும் கட்டை வண்டியைப் பற்றி ஒரு பாடல் :

கடக்கி முடக்கி வண்டி
காளை மாட்டு வண்டி
இடக்கு முடக்கு இல்லை
எங்கள் மாட்டு வண்டி (பக்கம் 53)

இதோ கம்ப்யூட்டர் என்ற கணினியைப் பற்றி ஒரு பாடல்:

புரியா நுட்பக் கூறுகளைப்
புதிர்கள் நிறைந்த கணக்குகளை
விரைவில் செய்து முடிக்குதடா
விந்தைகள் பலப்பல நடக்குதடா! (பக். 83)

சந்தம் கொஞ்சும் பாடல்கள். நல்ல படைப்பு.

பழங்குடிகளும் பழக்க வழக்கங்களும் கே.எஸ். சுப்ரமணி, பக். 112, ரூ. 21/- மணிமேகலைப் பிரசுரம், தணிகாசலம் சாலை, சென்னை - 600 017.

புகழ்பெற்ற 18 உலகப் பழங்குடி மக்களைப் பற்றிய விவரங்களையும், அவர்களிடையே காணப்படும் விசித்திரப் பழக்கங்களையும் இந்த நூலில் தொகுத்துத் தந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த தோதவ இனத்தவர்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆப்பிரிக்காவின் பிக்மி இனத்தவர்கள் இலை தழைகளைத் திரண்டு தேன் கூடு வடிவில் வீடு கட்டிக் கொள்ளுகிறார்களாம்! இவர்கள் நாடோடிகளாகத் திரிபவர்கள் ஆதலால், தங்கள் வீட்டை அப்படியே போகுமிடங்களுக்குத் தூக்கிக் கொண்டே போய் விடுகிறார்களாம். இப்படி ஒவ்வொரு இனத்தவரைப் பற்றியும் சில அதிசயத் தகவல்கள் இந்த நூலில் தரப்பட்டுள்ளன. இவைகளோடு 'பழங்குடி இனத்தார்' என்பவர் யார் என்பதும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட அரிய தகவல் நூலை, சோர்வின்றிப் படிக்கும்படி படைத்துள்ள பணியை எத்தனை பாராட்டினாலும் தகும். ஒவ்வொரு இனத்தவரைப் பற்றியும் ஒரு படமாவது சேர்த்திருந்தால் நூலின் சிறப்பு இன்னும் கூடியிருக்கும்.

வண்ணத் தமிழ், மலர் - 2, தொகுப்பாளர் : மோ. சூரியகுமாரி, பக். 36 ரூ. 18/- அர்ச்சனா பப்ளிகேஷன்ஸ், 78, போர்ச்சுகீசிய சர்ச் தெரு, சென்னை - 600 001.

இக்காலக் குழந்தைகள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். பாடப் புத்தகம் என்றால் ஒரு காலத்தில் பஞ்சாங்கம் மாதிரி ஒரே எழுத்துக் கோர்வையாக இருக்கும். இப்பொழுது அழகான வண்ணப்படங்களுடன், அழகழகான வண்ண அச்சில் அரிச்சுவடிப் புத்தகங்கள் கூட வெளிவர ஆரம்பித்து விட்டன. புத்தகத்தைப் பார்த்ததுமே தானாகவே விரும்பிக் கையிலெடுத்துப் படிக்கத் தூண்டும் வகையில் புத்தகங்கள் வருகின்றன. இந்த வரிசையில் குறிப்பிடத்தக்க புத்தகம் இது. ஓவியங்கள் கண்ணைப் பறிக்கின்றன. அதோடு இதில் இன்னொரு சிறப்பு. கோகுலம் பிருந்தாவனக் கவி அரங்கத்தில் வெளியான அருமையான சில பாடல்களும் இதில் இடம் பெற்றுள்ளன. பார்க்கும்போது, "நாம் குழந்தையாக இல்லையே!" என்ற ஏக்கம் எழுகிறது. தரமான, பாராட்டப்படத்தக்க படைப்பு.



அன்று ஞாயிற்றுக் கிழமை. காலை நேரம். பள்ளி விடுமுறையாதலால் ராமு தெருவில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது அந்த வழியாக மோகன் சென்றான்.

"டேய் மோகன், வாடா விளையாடலாம்."

ராமு மோகனை விளையாடக் கூப்பிட்டான்.

"முதலுதவி சிகிச்சை, தீ தடுப்பு முறை வகுப்புகள் நடத்தறாங்களே... உனக்கு மறந்து போச்சா? வா ரெண்டு பேருமே போவோம்" என்று மோகன் ராமுவை அழைத்தான்.

"உனக்கு வேறே வேலையே கிடையாதுடா."

"விடுமுறை நாளை நீ முழுக்க முழுக்க விளையாட்டிலேயே கழிக்கிறே ராமு. நம் வாழ்க்கைக்கு அவசியம் தேவையான சில பயிற்சிகளை நம்ம நன்மைக்காக பள்ளியில் இலவசமா கத்துத் தராங்க. அவைகளைக் கத்துக்கறது நமக்குத் தான் நன்மை ராமு."

"நான்தான் நம்ம வகுப்புலேயே முதல் மாணவன். பாடப் புத்தகத்தை ஒழுங்கா படிச்சா போதும்டா."

"பாடப் புத்தகத்தையும் படிக்கணும். அதே சமயத்திலே ஆபத்துல உதவக்கூடிய சில பயிற்சிகளையும் நாம் அவசியம் கத்துக்கணும் ராமு."

"ஆமாம் போ, நம்ம வீட்டுல போது விடிஞ்சு, போது போனா, தீ பத்திக்கப் போகுது. முதலுதவி, சிகிச்சை தரப் போறோம். எல்லாம் வேலையத்த வேலை. ரொம்ப அறுக்கிறே. நீ போ. நான் தனியாவே விளையாடிக்கறேன்."

மோகன் ராமுவிடம் விடைபெற்றான்.

இருவரும் ஒரே பள்ளியில் பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்கள். ராமு பாடப் புத்தகத்தை அப்படியே மனப்பாடம் செய்து தேர்வு எழுதி எப்போதும் முதல் மதிப்பெண் வாங்கி விடுவான். மோகனும் நன்றாகப்

வேலையத்த வேலை!

படிப்பவன்தான். ஆனால் அவன் ராமுவைப் போல குருட்டாம்போக்கில் மனப்பாடம் செய்து தேர்வு எழுதாமல் பாடங்களைப் புரிந்து கொண்டு படித்துத் தேர்வு எழுதுவான். ஐந்து ரேங்கிற்குள் இருப்பான். ஓய்வு நேரங்களில் நூலகங்களுக்குச் சென்று பல புத்தகங்களைப் படித்துத் தன் பொது அறிவை வளர்த்துக் கொள்வான். நவீன வாழ்க்கைக்குத் தேவையான முதலுதவி சிகிச்சை, தீ தடுப்பு-பாதுகாப்பு முறை போன்று பொதுநலனுக்கு உதவும் இலவசப் பயிற்சிகளையும் அலட்சியம் செய்யாது கற்றுக் கொள்வான்.

ஒரு வாரம் ஓடி மறைந்தது. அன்று மாலை மோகனும் ராமுவும் பள்ளியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். ராமுவின் வீட்டைக் கடந்துதான் மோகன் தன் வீட்டிற்குச் செல்ல வேண்டும்.

ராமு மோகனைத் தன் வீட்டிற்குக் கூப்பிட்டான்.

"நேத்து எங்கப்பா எனக்கு ஒரு புது கிரிக்கெட் பேட் வாங்கி கொடுத்தாரு. வாடா. அதைப் பார்த்துட்டுப் போயேன்."

ராமு ஆர்வமாக அழைத்ததால் மோகன் மறுக்காமல் சென்றான். வீட்டில் ராமுவின் அம்மா மட்டுமே இருந்தாள்.

உள்ளே நுழைந்த சில நிமிடங்களில் ராமுவின் அம்மா அலறுவது கேட்டது. சமையல் செய்யும் போது அம்மாவின் புடவையில் நெருப்புப் பிடித்து எரிய ஆரம்பித்திருந்தது. திகைத்துப் போய் செய்வதறியாமல் நின்றான் ராமு. அவன் உடலெல்லாம் நடுங்கியது. ஆனால் மோகன் பதட்டமில்லாமல் அதே சமயம் மின்னல் வேகத்தில் செயல்பட்டான். வாசற்படியருகே இருந்த கோணியை எடுத்து எரிந்து கொண்டிருந்த அம்மாவின் புடைவை மீது சுற்றி அம்மாவைத் தரையில் உருளும் படி செய்தான். ராமு, அம்மாவின் மேல் ஊற்ற வாளியில் தண்ணீர் கொண்டு வந்தான்.

மோகன் ராமுவைத் தடுத்தான்.

"தீக்காயத்திலே தண்ணி ஊற்றக் கூடாது ராமு. சீழ் பிடிச்சிடும். நீ போய் ஒரு ஆட்டோவைக் கூட்டிக்கிட்டு வா. மருத்துவ மனைக்குப் போயிடலாம்."

ராமு ஓர் ஆட்டோவை அழைத்துக் கொண்டு வந்தான்.

அம்மா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். அங்கிருந்த டாக்டர், மோகனின் செயலை அறிந்து மனதாரப் பாராட்டினார். அம்மா அதிக தீக்காயம் படாமல் தப்பித்தாள்.

ராமு மோகனுக்கு நன்றி சொன்னான்.

"இன்னைக்கு நீ மட்டும் இல்லேன்னா என் அம்மாவோட உயிருக்கு ஆபத்து வந்திருக்கும் மோகன். நீ பெற்ற பயிற்சி என் அம்மாவோட உயிரைக் காப்பாத்திடுச்சி. முதல் உதவி சிகிச்சையும், தீ பாதுகாப்பு தடுப்பு முறைப் பயிற்சிகளும் வாழ்க்கைக்கு எவ்வளவு அவசியம்னு உணர்ந்துட்டேன் மோகன். இனிமேல் நானும் அடுத்த பயிற்சி வகுப்பில் சேரப் போறேன்."

ராமுவின் மனமாற்றத்தைக் கண்டு மோகன் மகிழ்ந்தான்.

ஆர். வி. பதி





கட்டுக் கட்டா பணம்!

பி.ஆர். பார்த்தசாரதி

போனில் கேட்ட செய்தியைக் கேட்டுப் பரபரப்பானார் இன்ஸ்பெக்டர் ஸ்ரீநாத்.

"ஹலோ... நீங்க யார் பேசறது?"

இன்ஸ்பெக்டர் கேட்ட கேள்விக்கு எதிர்முனையில் எந்தப் பதிலும் இல்லை வைத்துவிட்டார்கள். இன்ஸ்பெக்டர் காலத்தை வீணாக்காமல், இரண்டு கான்ஸ்டபிள்களுடன் கிளம்பினார்.

இன்ஸ்பெக்டர் ஸ்ரீநாத், தானே ஜீப்பை ஓட்ட, ஜீப் ஜெட் வேகத்தில் புதுப்பங் களா முன் நின்றது.

வாசலில் ஜீப் நிற்கும் சப்தம் கேட்டதும் வீட்டுச் சொந்தக்காரர் காசிலிங்கம் பதறி அடித்துக்கொண்டு வெளியே ஓடிவந்தார்.

போலீஸ்காரர்களையும் இன்ஸ்பெக்டர் ஸ்ரீநாத்தையும் கண்டவுடன் அவர் பதற்றம் அதிகமாகியது.

வியர்க்க விறுவிறுக்க அவர் இன்ஸ்பெக்டரிடம் வந்து, "வாங்க இன்ஸ்பெக்டர்... என் வீட்டுக்கு வந்ததற்கு மிக்க மகிழ்ச்சி" என்று வாய் நிறையக் கூறி வரவேற்றார். ஆயினும் அவர் மனம் படபட வென அடித்துக் கொண்டதை முகம் காட்டிக் கொடுத்தது!

மிடுக்குடன் இறங்கிய ஸ்ரீநாத், "மன்னிக்கணும் சார். உங்க வீட்டைச் சோதனை போட வேண்டும். மாஜிஸ்திரேட்டிடம் போனில் அனுமதி வாங்கிவிட்டேன்" என்றார்.

"சோதனையா! என் வீட்டையா! எதுக்குங்க?" என்று பதற்றம் அதிகமாகிக் கேட்டார் காசிலிங்கம்.

"உங்க விட்டிலே கள்ள நோட்டுகள் இருப்பதாகப் போன் தகவல் வந்தது. உடனே உங்கள் வீட்டைச் சோதனையிட மாஜிஸ்திரேட்டிடம் அனுமதி வாங்கினேன்" என்றார் ஸ்ரீநாத்.

நீதித்துறை அனுமதி இன்றி சோதனை போட்டால் செல்லாது என்பதால் ஸ்ரீநாத் முறைப்படி செய் திருந்தார்.

"வந்து... வந்து... நான் ஊரிலே கௌரவமாக வாழ்பவன்..." என்று இழுத்தார் காசிலிங்கம்.

"ஐயா, நீங்கள் எங்களை கௌரவமாக அனுமதித்தால் நாங்கள் முறையாகச் சோதனையைத் தொடங்குவோம். முரண்டு பிடித்தால் உங்களைக் கைது



செய்து வைத்து, சோதனை போட வேண்டியிருக்கும். என்னை அந்த நிலைக்குக் கொண்டு போக மாட்டீர்கள் என்று எண்ணுகிறேன்", என்றார் ஸ்ரீநாத் கடுமையாக.

"இல்லை சார்... யாரோ நான் புது வீடு கட்டியிருப்பதைப் பார்த்துப் பொறாமையால் போன் சொல்லித் தவறான தகவல் தந்திருக்கிறார்கள். உழைத்து வரும் பணத்தை நம்பி வாழ்பவன் நான்" என்றார் காசிலிங்கம் கண்கலங்க.

"இதை எல்லாம் அப்புறம் பேசலாம்" என்று கூறிய இன்ஸ்பெக்டர் ஸ்ரீநாத் சைகை காட்டினார். உடனே போலீஸ்காரர்கள் காசிலிங்கத்தையும் அழைத்துக் கொண்டு



வீடு முழுவதும் சோதனை போடத் தொடங்கினர். ஸ்ரீநாத்தும் சோதனையில் ஈடுபட்டார்.

ஊருக்குப் பெரிய மனிதராகிய காசிலிங்கத்தின் புது வீட்டின் முன் போலீஸ் ஜீப் நிற்பதையும் இன்ஸ்பெக்டருடன் போலீஸ்காரர்கள் உள்ளே சென்றதையும் பார்த்த பொதுமக்கள் நூற்றுக்கணக்கில் கூடி ஆவல் தாங்காமல் வேடிக்கை பார்த்தனர்.

நேரம் ஓடியது. வீடு முழுவதும் சோதனை போடப்பட்டது. எந்த இடத்திலும் கள்ள நோட்டு ஒன்று கூடக் கிடைக்கவில்லை!

இன்ஸ்பெக்டர் ஸ்ரீநாத்துக்கு அவமானமாகப் போயிற்று.

"சாரி மிஸ்டர் காசிலிங்கம்... தவறான தகவலைக் கேட்டுச் சோதனை போட வந்துவிட்டோம். மன்னியுங்கள். ஆனால், எங்களுக்கு அரசினரின் கட்டளை இதுதான். வெடிகுண்டு வைத்துள்ளதாகவோ, கொலை செய்யப்பட்டதாகவோ, இம்மாதிரி கள்ள நோட்டு சமாசாரம் என்றோ, எப்படித் தகவல் வந்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுத்துச் சோதனையிட வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு. அதனால், கடமையை நிறைவேற்றவே வந்தோம். உங்களுக்கு வீணான தொந்தரவு கொடுத்துவிட்டதற்கு வருத்தமடைகிறேன்" என்று வாசலுக்கு வந்தார்.

பெரிய நிம்மதிப் பெருமூச்சுவிட்ட காசிலிங்கம், "பரவாயில்லைங்க இன்ஸ்பெக்டர். உங்க கடமையை நீங்கள் செய்தீர்கள். எனக்கு இதில் வருத்தம் இல்லை. யாரையுமே இந்தக் காலத்தில் நம்ப முடிவதில்லை இல்லையா?'' என்று கையெடுத்துக் கும்பிட்டார்.

அப்போது -

அழுக்குச் சட்டை - டிராயருடன் எண்ணெய் காணாத பரட்டைத் தலையுடன் ஒரு சிறுவன், கையில் ஒரு நீண்ட கம்பியை வைத்துக் கொண்டு தெருவில் கிடக்கும் பேப்பர் குப்பைகளைக் குத்தித் தன் தோளில் தொங்கிய பெரிய சாக்குப் பையில் போட்டுக் கொண்டு வந்தான்.

"டேய்... யார்டா அது...! போடா, போடா...'' என்று விரட்டினார் காசிலிங்கம்.

அவன் திருதிருவென விழித்தான்.

"பாவம்... ஏழைப் பையன்..." என்றார் இன்ஸ்பெக்டர் ஸ்ரீநாத்.

"இவன் மாதிரி ஆளுங்க பேப்பர் பொறுக்குகிற மாதிரி வந்து திருடிக் கொண்டு போய் விடுவார்கள்'' என்றபடியே அவனை விரட்டப் போனார் காசிலிங்கம்.

அதற்குள் அந்தச் சிறுவன், காசிலிங்கம் வீட்டு வாசலில் இருந்த குப்பைத் தொட்டியில் குவிந்திருந்த குப்பைகளைக் கிளறிக் காகிதங்களைப் பொறுக்கப் போனான்.

வேகவேகமாக ஓடிய காசிலிங்கம் சிறுவனைக் குப்பைத் தொட்டியிலிருந்து தூக்கப் போனார்.

இதற்குள் குப்பைகளைக் கிளறிய அந்தச் சிறுவன் திடீர் என்று, "ஹைய்யா... பணம்...! பணம்...! கட்டுக் கட்டாப் பணம்...!'' என்றான் பெரும் வியப்பு, மகிழ்ச்சியுடன்.

"என்ன! பணமா? - ஆச்சரியக் குரலில் கேட்ட இன்ஸ்பெக்டர் ஸ்ரீநாத், மின்னல் வேகத்தில் போலீஸ்காரர்களுடன் குப்பைத் தொட்டியின் அருகே சென்றார்



''நீ இதுவரை எந்த பரீட்சையிலும் சைபர் தான் எடுத்திருக்கே. பின்னே எப்படி முழு ஆண்டுத் தேர்விலே 100 எடுத்துடுவேன் என்கிறாய்?''

''காலண்டுலே 0 எடுத்தேன். அரை ஆண்டுல இன்னொரு சைபர் எடுத்திட்டேன். நூற்றுக்கு இன்னும் ஒண்ணு மட்டும்தான் பாக்கி. அதை இதுல எடுத்துடுவேன்.''

– க.வ.க.க.வே. சித்திரவேலு

குப்பைத் தொட்டிக்குள் குனிந்து பார்த்த இன்ஸ்பெக்டரின் கண்கள் வியப்பால் விரிந்தன.

"வாவ்! கத்தை கத்தையாகப் பணக் கட்டு! எல்லாம் காசிலிங்கத்தின் கள்ள நோட்டாத்தான் இருக்கும். காசிலிங்கத்தை உடனே கைது பண்ணுங்கள்!" என்று இன்ஸ்பெக்டர் கத்தினார்.

ஓடப் பார்த்த காசிலிங்கத்தை சுற்றி நின்ற மக்கள் தடுக்க, காசிலிங்கம் கைது செய்யப்பட்டு போலீஸ் ஜீப்பில் ஏற்றப் பட்டார்.

போலீஸ் ஸ்டேஷன் -

அந்த அழுக்குச் சட்டைச் சிறுவன் இன்ஸ்பெக்டர் ஸ்ரீநாத்துக்கு முன் கம்பீரமாக உட்கார்ந்திருந்தான்.

"தம்பி, உன் பெயர் என்ன? நீ இதை எப்படிக் கண்டுபிடிச்சே?"

"ஐயா, என் பெயர் சந்திரன். அப்பா சின்ன வயசிலே செத்துப் போயிட்டாரு. அம்மா நாலு வீட்டிலே சின்னச் சின்ன வேலைகள் செய்து வர்றாங்க. நான் இம்மாதிரி பேப்பர் பொறுக்கி சம்பாதிக்கிறேன்."

"படிக்கலையா?"

"5 ஆம் வகுப்புவரை படித்தேன். இந்த வருடம் சேரவில்லை."

"சரி... சொல்லு..."

"இன்று காலை இந்த வீட்டின் முன் குப்பை பொறுக்கும்போது கார் ஒன்றிலிருந்து ஏராளமாக சூட்கேஸ்கள் வந்தன. அவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து அவை பத்து லட்ச ரூபாய் மதிப்புடைய கள்ள நோட்டு அடங்கியவை என்பது தெரியவந்தது. அவைகளை வீட்டுக்குள் கொண்டு சென்றனர். உடனே என் கையில் இருந்த சில்லரையைத் திரட்டி உங்களுக்கு போன் செய்தேன்."

"அப்படியா...! சரி... அந்தப் பணம் குப்பைத் தொட்டிக்கு வந்தது உனக்கு எப்படித் தெரியும், சொல்லு?" - என்று அன்பொழுகக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"போலீஸ் ஜீப் வந்தவுடன் நான் ஓர் ஓரமாக உட்கார்ந்து என்ன நடக்கிறது என்று பார்த்தேன். உள்ளிருந்து ஓர் ஆள் வெளியே வந்து குப்பைத் தொட்டியில் குப்பைகளைக் கொட்டுவது போல் பணக்கட்டுகளை குப்பையால் மூடிக் கொட்டி மேலே குப்பை கூளங்களைக் கொட்டி மூடுவதைப் பார்த்தேன். அப்பவே சந்தேகம்தான். மற்றவர்களுக்கு இவ்விஷயம் தெரியாது ஆகையால் அவர்கள் இதைக் கவனிக்கவில்லை. நீங்கள் உள்ளே சோதனை போட்டு, ஒன்றுமில்லை என்று வெளியே வந்தீர்கள். எங்கே பேசாமல் போய் விடுவீர்களோ என்று பயந்தேன். குறிப்புக் காட்டவே குப்பை பொறுக்கும் சாக்கை வைத்துக் கொண்டு தொட்டியில் இறங்கினேன். பதற்றமடைந்த காசிலிங்கம் என்னைத் தாக்க வந்தார். கடைசியில் மாட்டிக் கொண்டார். ஐயா, எனக்கு எந்த ஆபத்தும் வராதே?" என்று பரிதாபமாகக் கேட்டான் சந்திரன் என்ற அந்தச் சிறுவன்.


"சபாஷ் சந்திரன்! உனக்கு எந்த ஆபத்தும் வராது. உன் கல்வியைத் தொடரவும் - உன் அம்மாவுக்கு வேலை தரவும் முதலமைச்சரைப் பார்த்துக் கூறி ஆவன செய்கிறேன். உன்னைப் போன்ற துணிச்சல் மிக்க சிறுவர்கள்தான் நாட்டுக்குத் தேவை," என்று அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார் இன்ஸ்பெக்டர்.

சந்திரனுக்குப் பெருமையாக இருந்தது!

"நான் பாடத்தை சீக்கிரம் முடிக்காம தொடர்ந்து நடத்தணும்னு நீ ஆசைப்படறியாமே! படிப்பில் அவ்வளவு ஆர்வமா?"

"பாடத்தை முடிச்சிட்டா உடனே கேள்வி கேப்பீங்களே!"

– சோமசேகர்




A COOL WAY
TO SPEND
SUMMER.....
WITH
GOKULAM
children
Don't miss the
June Issue!
96 pages for just Rs. 5!
GOKULAM, 47 Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.

பூச்சிகளின் விந்தைகள்

ஆழி



உலகில் உள்ள உயிரினங்களில் 85 சதவீதம் பூச்சிகள்தாம். ஒவ்வோர் ஆண்டும் 2000 புதிய பூச்சியினங்களைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள் விஞ்ஞானிகள்!

பூச்சிகள் ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்டு, ஆண்டெனா என்னும் 'உணர் கொம்புகளை இழந்து விட்டால், அந்தப் பூச்சி பட்டினியால் இறந்துவிடும்! ஏனென்றால், உணர்கொம்புகள் இல்லாமல், பூச்சிகளால் இரை தேட முடியாது!






ஒரு சிலந்தி 1 மணி நேரத்தில் 112 மீட்டர் நீளமுள்ள நூலை உருவாக்கிவிடும்! உலகத்தின் மேலாக ஒரு சுற்று சுற்றி விடக்கூடிய நீளமுள்ள சிலந்தி நூலின் எடை 300 கிராம்தான் இருக்கும்! அவ்வளவு மெல்லியது!





'போட்மேன்' என்னும் நீர்ப்பூச்சி, நீரில் பின்பக்கமாகவே நீந்தும்!



உலகில் உள்ள பூச்சி இனங்களில் மிகவும் நீளமானது 'குச்சிப்பூச்சி'. இதன் நீளம் சுமார் 33 செ.மீ. இது இந்தோனேஷியாவில் அதிகம்!

ராணிக் கறையானின் ஆயுட்காலம் எவ்வளவு தெரியுமா? சுமார் 50 ஆண்டுகள்!





மனிதனைத் தாக்குகின்ற தெள்ளுப் பூச்சி சுமார் 4 மாதங்கள் கூட இரையில்லாமல் உயிர் வாழக்கூடியது!




விட்டில் பூச்சிகளில், சுமார் 1 லட்சம் வகைகள் இருக்கின்றன. இவற்றில் மிகவும் பெரியது 'அட்லஸ் விட்டில் பூச்சி.' இது இறக்கையை விரித்தால் சுமார் 32 செ.மீ. இருக்கும்.

மிகவும் சிறிய விட்டில் பூச்சி 'மிட்ஜெட் ஸ்பாட்கின்.' இது இறக்கையை விரித்தால் சுமார் 2 மி.மீ. தான் இருக்கும்!

பிரிட்டனில் உள்ள 'ஸ்டாக்டன்' வண்ணத்துப் பூச்சி மிகவும் பெரியது. இறக்கைகள் சுமார் 28 செ.மீ. நீளம் இருக்கும். இரை உட்கொள்ளுவதற்கு இதற்கு வாய் எதுவுமே கிடையாது. இது வாழ்வது சுமார் 10 நாட்களே. தன் உடலில் உள்ள கொழுப்புச் சத்தைக் கொண்டே தன் குறுகிய வாழ்நாட்களை ஓட்டிவிடும்!




கரப்பான் பூச்சி எப்போது முட்டையிட்டாலும், அந்த முட்டைகளின் எண்ணிக்கை 16 தான் இருக்கும்!







தேனீக்களின் உடலில் 1.5 வோல்ட் நேர் மின் அழுத்தம் இருக்கிறது. அதனால் பூவில் உள்ள மகரந்தங்கள், எளிதில் அதன் மேல் ஒட்டிக் கொள்ளுகின்றன!



'நீர்த்தேள்' என்னும் பூச்சி, நீரில் நன்றாக நீந்தும்; மேலேயும் பறக்கும். ஆனால், இந்தப் பூச்சி பகலில் நீந்தும்; பறக்காது. இரவில் பறக்கும்; நீந்தாது!


இலைப்பூச்சிகளின் வடிவம் மட்டுமல்ல, நிறமும் இலைகள் போலவே இருக்கும்! சில காய்ந்து போன சருகு போலவும், சில புள்ளிநோய் வந்த இலை போலவும் இருக்கும்! இன்னும் ஓர் ஆச்சரியம் என்ன தெரியுமா? இவற்றின் முட்டைகள் கூட செடிகளின் விதைகள் போலவே இருக்கும்!






‘டிராகன் ஃப்ளை’ என்னும் தட்டாம்பூச்சி, பூச்சி இனங்களில் மிகவும் சுறுசுறுப்பாகப் பறக்கக் கூடியது. இது முன்னாலும் பறக்கும்; ஒரு நொடியில் பின்னாலும் திரும்பியும் பறக்கும்; தலைகீழாகப் புரண்டும் பறக்கும். ஆகாயத்தில் இறக்கை விரித்து அசைவற்று அப்படியே நிற்கும்!

‘அரக்கு’ என்பது ‘லாக்கிபெர் லாக்கா’ என்னும் ஒரு வகை சிறு பூச்சியின் உடலிலிருந்து கசியும் திரவம் உறைந்து கட்டியாவது தான். இந்த அரக்குப் பூச்சிகள் பீகாரில் அதிகம். தேன் பூச்சிகளை வளர்ப்பது போல், அங்கே அரக்குப் பூச்சிகளை வளர்க்கிறார்கள்!





4 செ.மீ. நீளமுள்ள ‘தத்து வால் பூச்சி’ 60 செ.மீ. உயரம் துள்ளித் தாண்டும். பூச்சியின் அளவையும், தாண்டும் உயரத்தையும் ஒப்பிட்டால், மனிதன் 50 மீ. உயரம் தாண்ட வேண்டும்!




பெண் கொசுக்கள் மனிதர்களின் இரத்தத்தையும் விலங்குகளின் இரத்தத்தையும் இரையாகக் கொள்ளுகின்றன. ஆண் கொசுக்கள் தாவரங்களின் இலைகளை மட்டுமே இரையாகக் கொள்ளுகின்றன!

தேள்கள், முட்டையிடுவதில்லை. வயிற்றிலிருந்து குஞ்சுகளாகவே வெளிப்படுகின்றன. குஞ்சுகள் தாமாக இரை தேடும் வரை, தாய்த்தேள் அவற்றைத் தன் முதுகிலேயே சுமந்து கொண்டிருக்கும்.



ஆறு கால்கள் உள்ள பூச்சி இனங்களில், எறும்புகள் மட்டுமே தூங்குகின்றன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். எறும்புகள் தூங்கி விழித்தவுடன், கால்களை நீட்டி விரித்துச் சோம்பல் முறித்து, வாயை அகலத் திறந்து கொட்டாவியும் விடுகின்றன என்கிறார்கள் அவர்கள்!






பட்டு இழை என்பது என்ன? பட்டுப் பூச்சியாவதற்கு முன் உள்ள கம்பளிப் புழுவின் கீழ் உதட்டில் சுரக்கும் நீர், காற்றுப் பட்டவுடனே பட்டு இழையாக மாறுகிறது! இந்த இழையைத் தன் உடலில் சுற்றிக் கொண்டு, கம்பளிப் புழு, கூட்டுப் புழுவாகிவிடுகிறது. புழுவைக் கொன்று பட்டு இழை எடுக்கிறார்கள்!




• நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இந்தியாவில் எந்த ஆண்டு இயற்றப் பட்டது? – வெ. சபாபதி, கடலூர் – 1.



நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986ஆம் ஆண்டிலேயே இயற்றப்பட்டு விட்டது. என்றாலும், அதில் உள்ள பல குறைபாடுகள் களையப்பட்டு, 1993 ஜூன் 21-ல் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. இதன் விளைவாக இது புத்துயிர் பெற்றது. இதன் காரணமாக இதன் தீர்ப்புகள் "1993 சட்டப்படி" என்று உத்தரவாகின்றன. ஆயினும், இதற்கு முன்பே சட்டம் இருந்தது.

• நமது குடியரசுத் தலைவர், மாநில ஆளுனர் ஆகியோரின் சம்பளம் என்ன? – வெ. சபிதாபீ, ராணிப்பேட்டை.



குடியரசுத் தலைவரின் சம்பளம் ரூ. 20,000/- ஆளுனரின் சம்பளம் ரூ. 11,000/– சிறப்புப் படிகள் எனப்படும் அலவன்ஸ் எல்லாம் இது தவிர.


• உலகின் மிகப் பெரிய மக்கட் தொகை நகரம் எது? – வா. உமா, சிவ கங்கை.

தெற்கு கொரியா நாட்டில் உள்ள

சேரநம்பி


சியால் (SEOUL) நகரம்தான். அதிக மக்கள் தொகை கொண்ட பெரிய நகரம். மக்கள் தொகை 10,27,790. இரண்டாவது இடத்தைப் பெறுவது நமது பம்பாய். மக்கள் தொகை 9,480,427.

• நம் நாட்டில் கூட உப்பு நீர் ஏரிகள் உண்டா? – தூ. அடைக்கலராஜ், பாளையங்கோட்டை.




இல்லாமல் என்ன! நிறையவே உள்ளன. ஒரிஸா மாநிலத்தில் புவனேஸ்வரில் உள்ள 'சில்கா' என்ற ஏரி, ஆசியாவில் உள்ள உப்பு நீர் ஏரிகளில் மிகப் பெரியது என்ற பெருமையை உடையது. இதன் பரப்பளவு சுமார் 916 ச.கி.மீ. இந்த ஏரிக்குள் சில குட்டித் தீவுகள் உள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்கது நவபானா தீவு. இது உலகப் புகழ்பெற்ற பறவை சரணாலயம்.

• இந்தியாவில் தேசிய மரம் என்று ஏதாவது இருக்கிறதா? – கு. பூர்ணிமா, தேவிப்பட்டணம்.



என்னம்மா இப்படி ஒரு கேள்வி கேட்டு விட்டாய்! தேசியப் பறவையாக மயில் இருப்பது போல், தேசிய விலங்காக புலி இருப்பது போல், தேசிய மலராக தாமரை உள்ளது போல், தேசிய மரமாக ஆலமரம் அறிவிக்கப்பட்டுள்ளதே? ஒரே ஓர் குறைபாடு. இது மயில், புலி, தாமரை போல் பிரபலமாக்கப்படவில்லை. அவ்வளவே.

• 'DIABOLOGY' என்பது எதைப் பற்றிய பயிற்சி? – வா. கண்ணப்பன், சாத்தூர்.




இது பயிற்சி அல்ல. கல்வி. பிசாசுகளைப் (DEVIL) பற்றிய கல்விக்குத்தான் DIABOLOGY என்று பெயர். அழகாக "பிசாசு இயல்" என்று கூறிக் கொள்ளலாம். இக் கல்வி அமெரிக்காவிலும், பிரிட்டனிலுமே உள்ளது. இன்னும் மற்ற நாடுகளுக்கு அறிமுகமாகவில்லை. ஆமாம், இந்தப் பெயரை எங்கே கண்டுபிடித்தாய் கண்ணப்பன்?

• இந்தியாவின் முதல் பெண் துணைவேந்தர் (VICE CHANCELLOR) யார்? – இ. நரேந்திரன், குடந்தை.

இந்தப் பெருமையை குஜராத் மாநிலம் தட்டிக் கொண்டு போய் விட்டது. ஹன்ஸா மெஹ்தா என்பவரே இந்தியாவின் முதல் பெண் துணைவேந்தர். இவர் துணைவேந்தராக இருந்தது பரோடா



பல்கலைக் கழகத்தில்.



*** கொசு ஏன் பாடுகிறது? – வி. சு. தாரணி, அழகாபுரி.**


கொசு பாடுவது இல்லை. சிறகுகளை அசைக்கும் அதிர்வு அலையின் ஓசையே அது. அவை பாடுவது போல் நமக்குக் கேட்கிறது. அவ்வளவே. இந்தப் பாட்டு எதற்காகத் தெரியுமா? குடும்பம் நடத்த விடுக்கப்படும் அழைப்புத்தான் இது!

*** பூனை கூட தெய்வமாக வணங்கப் பட்டது என்பது உண்மைதானா? – கி. சின்ன மங்கை, கொத்தமங்கலம்.**




இதிலென்ன சந்தேகம்? புராதன எகிப்து மக்கள் பூனையைத் தெய்வமாகவே வணங்கினார்கள். அஸ்வான் புதைநகர் கோவில்கள், பிரமிட்டுகளில் உள்ள கல்லறைகளில் இவை காணக் கிடைக்கின்றன. பூனைகள் சூரியனின் உதவியாளர்கள் என்றும் அதனாலேயே அவை இருட்டிலும், ஒளிவீசும் கண்களைப் பெற்றிருந்தன என்றும் எகிப்தியர் நம்பினார்கள். பூனைகளுக்குத் தனிக் கோவில்களும் இருந்தன. பூனை இறந்தால் அரசர்களுக்கு உரிய மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டன. பூனைகளுக்கு அசந்து மறந்து ஏதாவது துன்பம் செய்தவர்களுக்கு மரண தண்டனையே விதிக்கப்பட்டது!

*** உலகக் கிரிக்கெட் கோப்பை யாரால் முதன் முதலாக ஆரம்பிக்கப் பட்டது? – கூ. சாரங்கன், நாமக்கல்.**



உலகக் கிரிக்கெட் கோப்பையை ஆரம்பித்து வைத்த பெருமைக்கு உரியவர் ஜூலிஸ் ரிம்மட் (JULES RIMET). முதலில், இக் கோப்பையை சில ஆண்டு கள் வரை இவர் பெயராலேயே அழைத்து வந்தார்கள்.

*** உலகச் செய்தி ஸ்தாபனமாகிய 'ராய்டர்' நியூஸ் ஏஜென்சியை யார் தொடங்கினார்கள்? – தா. மல்ல பிள்ளை, சுசீந்தரம்.**



முதலில் இந்த ஸ்தாபனத்திற்கு இடப் பட்டிருந்த பெயர் இஸ்ரேல் பீர் ஜோசஃ பெட் (ISRAEL BEER JOSAPHAT) என்பதா கும். இதையே ராய்டர் என்பவர் வாங்கிச் சீரமைத்தார். இவரது முழுப் பெயர் 'BARON PAUL JULIUS VON REUTER' என் பது. இத்தனை நீண்ட பெயரை எப்படி அழைக்க முடியும்? அதனால் சுருக்கி, ராய்டர் என்று அழைத்தனர். இதுவே உல கப் புகழ்பெற்றது.

• யானை சிங்கத்தைக் கண்டு பயப் படும் என்பது உண்மைதானா? – வா. கார்மேகக்கோன், திருநெல்வேலி - 4.



உண்மைதான். ஆனால், சிங்கம் நேருக்கு நேர் யானையைச் சந்திக்க முயன் றால், பரிதாப முடிவு சிங்கத்திற்கே. அத னால், பின்னால் இருந்து யானையின் மேல் பாய்ந்து தலை கழுத்துப் பகுதி களைத் தாக்கும். துதிக்கைக்கு சிக்காத வரை, சிங்கத்துக்கு வெற்றியே. கிடைத்து விட்டால் சிங்கம் பாடு அதோகதிதான்! ஆப்பிரிக்க யானைகள் அஞ்சுவது "SIAFU" எனப்படும் சிப்பாய் தீ எறும்பு களைக் கண்டு. மழை பெய்து விட்டால் இவை இலட்சக்கணக்கில் பெருகித் திரண்டு, உணவுக்காகப் படை எடுத்து நகரும். எதிரே வரும் எந்த உயிரினங்களை யும் (மலைப் பாம்பு, ஒட்டகச்சிவிங்கி, புலி, சிங்கம், யானை உட்பட) இவை மொய்த் துக் கொண்டு சில மணி நேரத்தில் உண வாக்கிக் கொண்டு விடும். இவை வரும் போது ஒரு தனி நெடி வீசும். உடனே அந்தப் பகுதியில் உள்ள விலங்கு, பறவை கள் எல்லாம் பீதி பிடித்து இடத்தைக் காலி பண்ணிக் கொண்டு ஓடிவிடும்!

• நீச்சல் கற்றுக் கொள்ளப் பயன் படும் பாதுகாப்பு மிதவையை யார் கண்டுபிடித்தார்கள்? – கு. தட்சி ணாமூர்த்தி, திருவாடுதுறை.


அசார் நசிர் II (ASSUR-NASIR APLI II) என்ற பாரசீக மன்னர், தன் படைகளு



டன் செல்லும்போது, வழியில் குறுக்கிட்ட ஆறுகளைக் கடக்க நீரில் மூழ்காமல் மிதக் கும் ஒரு மிதவையைப் பயன்படுத்தினார். இதுவே உலகில் தயாரிக்கப்பட்ட நீரில் மூழ்கா முதல் மிதவை. இவர் வாழ்ந்த காலம் கி.மு. 880. இதை அடிப்படையாக வைத்து அவ்வப்பொழுது தேவைப்படும் மாற்றங்களைச் செய்து தயாரிக்கப்பட் டதே இப்பொழுது காணப்படும் உயிர் காக்கும் வளையங்கள். (LIFE SECURITY RINGS).

• சென்னை புனித ஜார்ஜ் கோட்டை யில் உள்ள பழமையான கொடிமரம் மாற்றப்பட்டு விட்டதாமே! ஏன்? – அ. அகமத்பாட்சா, நாகை – 2.

இந்தப் பழமையான கொடிமரம் புனித ஜார்ஜ் கோட்டைக்கே கம்பீரத்தையும் பெருமையும் தருவதாக அமைந்திருந்தது. இதை அமைத்தவர் கவர்னர் யேல் என்பவர். ஆண்டு 1687. நமக்குச் சுதந்திரம் கிடைக்கும் வரை பிரிட்டிஷ் கொடியே இதில் பறந்தது. இதன் உயரம் 156 அடி. மரத்தால் ஆன இதில், 300 ஆண்டு களுக்குப் பிறகு விரி சல் ஏற்படவே 1994 ஆம் ஆண்டு மாற்றி னார்கள். புதிய கொடி மரம் முழுக்க இரும்பால் ஆனது. பழைய மரத்தின் தோற்றப் பொலிவு டனேயே இது அமைந்திருக்கிறது.



இனிமேல்

தா. ஜானகி

பள்ளிக்கு வந்து கொண்டிருந்த சிரஞ்சீவி, இறை வணக்கம் முடிந்து மாண வர்கள் வகுப்பறைகளை நோக்கிச் செல் வதைத் தொலைவிலேயே பார்த்து விட் டான்.

வழக்கம் போல் இன்றைக்கும் அவன் தாமதம்! காலதாமதமாக வந்து கொண் டிருப்பதற்காக அவன் உடலில் பதட் டமோ... பரபரப்போ காணவில்லை. மாறாக, தாமதமாகப் பள்ளிக்கு வந்ததற்கு என்ன காரணத்தைச் சொல்லிச் சமாளிக் கலாம் என்று யோசனையில் ஆழ்ந்த படியே வந்து கொண்டிருந்தான்!

இன்றைக்கு முதல் பீரியட் என்ன பாடம்?

ஆ... கணக்கு! கணக்கு ஆசிரியர் கண்டிப்பானவர், கெட்டிக்காரர். அவரி டம் எப்படி என்ன பொய் சொன்னால் மாட்டிக் கொள்ளாமல் இருக்கலாம்? இன்றைக்கு என்ன காரணம் சொல் வது? – யோசித்தபடியே சிரஞ்சீவி, வகுப்பறையை அடை வதற்கும், வருகைப் பதிவேட்டில் ஆசிரியர் இவனுடைய பெயரைக் கூப்பிடுவதற்கும் சரியாக இருந்தது.

"ஸார்! நிஜமாகவே இன்னிக்கு எங்க அம்மாவுக்கு உடம்பு சரியல்லை. நான் தான் சமையல் செய்ய அவங்களுக்கு உதவி செய்தேன்.... அதனால்தான்"

முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு சொன்னான். அவனை உற்றுப் பார்த்த ஆசிரியர் "சரி...சரி... இன்றைக்குப் போ! இனிமே நீ லேட்டா ஸ்கூலுக்கு வருவதைப் பார்த்தேன், முதுகுத் தோலை உரித்து விடுவேன்" என்று மிரட்டி விட்டு மேற்கொண்டு தன்பணியைத் தொடர்ந் தார்.

"நல்ல காலம்! இன்றைக்குத் தப்பித்துக் கொண்டேன்''... என்று மனதிற்குள் மகிழ்ந்தபடியே மாவீரனைப்போல இருக்கையை நோக்கிச் சென்றான்.

அடுத்த வாரத்தில் புதன்கிழமை. பள்ளி விட்டு வீடு திரும்பிய சிரஞ்சீவி யிடம் அம்மா ஒரு கடிதத்தை நீட்டினாள். பம்பாயிலிருந்து அவன் மாமா எழுதி யிருந்தார்.

ஆவலோடு கடிதத்தைப் படிக்க லானான்.

"அன்புள்ள சிரஞ்சீவிக்கு, இந்த மாதம் முப்பதாம் தேதி உனக்குப் பிறந்த நாள் வருகிற தில்லையா? அதற்காக நீ ஆசைப் பட்டுக் கேட்டிருந்த சந்தனச் சட்டைத் துணியும், அதே கலர் டிராயர் துணியும் என் நண்பன் கிருஷ்ணாவிடம் கொடுத் தனுப்புகிறேன். உனக்குப் பிடித்த பாம்பே அல்வா, பெரிய பந்து, விளையாட்டுப் புதிர்கள் நிரம்பிய புத்தகம், கலர் பாக்ஸ் இவைகளையும் கூடக் கொடுத்தனுப்பு கிறேன். கிருஷ்ணா தன் தங்கையின் கல் யாணத்திற்காக ஒருமாத விடுமுறையில் நம்மூர் வழியாகச் செல்லும் கன்யாகுமரி எக்ஸ்பிரஸ்சில் அவன் ஊரான திருவனந்த புரம் செல்கிறான். கன்னியாகுமரி எக்ஸ் பிரஸ் நம்ப ஊருக்குக் காலையில் சரியாக 7.30க்கு வருகிறது என்று உனக்குத் தெரி யும். நீ என்ன செய்ய வேண்டும் தெரி யுமா? 29ஆம் தேதி காலை 7.30க்குள் உன் பள்ளி யூனிபாரம் உடையோடு ஸ்டேஷ னுக்கு வந்து விடு. அப்பத்தான் கிருஷ்ணா வால் உன்னைச் சீக்கிரமாக அடையாளம் கண்டு கொள்ள முடியும். உனக்கு அடை யாளம் தெரிய கிருஷ்ணா பச்சை கலர் பேண்ட், வெள்ளை சட்டை கூலிங் கிளாசோடு காட்சியளிப்பான். அப்படி ஒருகால் சந்தர்ப்ப சூழ்நிலையின் காரண மாக நீ வந்து வாங்கிக் கொள்ளவில்லை என்றால், கிருஷ்ணாவோட அண்ணனுக் கும் உன் வயதில் ஒரு பையன்

இருக்கிறான். அவனுக்குக் கொடுத்து விடும் படி சொல்லி விட்டேன். எனவே, மறக் காமல் போய் விடு. நம்ம ஊரில் அந்த வண்டி அதிக நேரம் நிற்காது. குறித்த நேரத்தில் பரிசைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியோடு பிறந்த நாளைக் கொண் டாடு. இப்படிக்கு உன் அன்புள்ள மாமா சரவணன்.

கடிதத்தைப் படித்த சிரஞ்சீவி மகிழ்ச்சி பொங்கத் துள்ளிக் குதித்தான்.

"ஆஹா! எனக்குப் பிடித்தமானவற்றை எல்லாம் மாமா வாங்கி அனுப்பப் போகிறார். நண்பர்கள் எல்லாம் அசந்து போயிடுவாங்க... மாமான்னா... மாமா தான்."

கடிதத்தை மறுபடியும் படித்தான். "அடேயப்பா! இன்னும் எட்டு நாட்கள்! இந்த எட்டு நாட்களுக்கு பூமி இன்னும் வேகவேகமாக சுத்தநாதா! அவன் உள்ளம் ஏங்கியது... பரபரத்தது...!

எதிர்பார்த்தபடி இருபத்தி ஒன்பதாம் தேதி விடிந்தது. "சிரஞ்சீவி! மணி ஆறு அடிக்கப் போறது... எழுந்திருந்து சீக்கிரம் கிளம்பத் தயாராகு. நம்ப வீட்டிலேர்ந்து ஸ்டேஷனுக்குப் போறதுக்கே... அரைமணி நேரமாயிடும்... வண்டி கரெக்ட் டயத்துக்கு வந்துடும்.... உம்... எழுந்திரு."

நாளை...



அம்மா அவசரப்படுத்தினாள்.

அடுத்த அரைமணி நேரத்தில் சிரஞ்சீவி கிளம்பி மெயின் ரோட்டுக்கு வந்து விட்டான்.

வழியில் அவன் நண்பன்... மனோவைப் பார்த்தான். அவ்வளவுதான்.

"டேய் மனோ! "என்கிட்டே மட்டும் தான் சந்தனக் கலர் சட்டை இருக்குன்னு அன்னிக்கு பிரமாதமா சொன்னியே? நாளைக்குப் பாரு... நானும் சந்தனக் கலர் சட்டை மட்டுமில்லை. சந்தனக் கலர் டிராயரோட பள்ளிக்கு வரப்போறேன். எங்க மாமா பம்பாயிலிருந்து பிறந்த நாள் பரிசா வாங்கி அனுப்பியிருக்கார்டா. அதை வாங்கத்தான் இப்ப நான் ஸ்டேஷனுக்குப் போய்க் கொண்டிருக்கேன்... தெரியுமா?" என்று வலுவில் சென்று பேசினான்.

வியப்பால் விரிந்த மனோவின் முகத்தை ரசித்தபடியே அடுத்த தெருவைக் கடக்கும்போது, எட்வின் எதிர்பட்டான்.

மறுவினாடி அவன் முன் ஆஜரானான். "டேய் எட்வின்! உன்னோட சின்னப் பந்தை விளையாட எனக்குக் கொஞ்சம் கொடேன்னு கேட்டேன்: என்னவோ உன் பந்து தங்கத்தால் செய்தது போலவும்... நான் தொட்டாலே தேஞ்சு போயிடும்னு நினைச்சயே- இன்னும் கொஞ்சநேரத்திலே பாரு... பெரிய அழகான பந்தோட உன் முன்னாடி... நிற்கப் போறேன். அந்தப் பந்தோட அழகைப் பார்த்து அப்படியே மயங்கி விழப் போறே. ஆனா... உன்ன மாதிரி நான் இருக்க மாட்டேன். என்னோட பந்தை நீயும் விளையாடலாம்."

சிரஞ்சீவி எட்வின்னின் முக மாற்றத்தைக் கண்டு மகிழ்ந்தபடி ஸ்டேஷனுக்கு விரைந்தான்.

ஸ்டேஷன் வாசலில், ஓரமாக இருந்த மரத்தடியில் ஒரு குரங்காட்டி வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தான். கேட்கணுமா? அங்கேயே நின்றான். மெய் மறந்து ரசித்துக் கொண்டிருந்தவனின் காதில் 'கூ' என்ற ஒலியை எழுப்பியபடி புகைவண்டி வரும் ஒலி கேட்டது.

அவன் பிளாட்பாரத்தை அடைந்த பொழுது... கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் பிளாட் பாரத்தை விட்டுக் கிளம்பி டாடா... காண்பித்தபடி செல்ல ஆரம்பித்தது.

துக்கம் நெஞ்சை அடைக்க, ஏமாற்றம் இதயத்தைத் தாக்க கண்களில் பொங்கிய நீரைக் கஷ்டப்பட்டு அடக்கியபடி சோர்வான நடையுடன் வீட்டை அடைந்தான்.

அம்மாவைப் பார்த்ததும் மடைதிறந்த வெள்ளம்போல அதுவரை அடக்கிவைத்திருந்த துக்கம் விம்மலாக- அழுகையாக- வெளிப்பட்டது.

நடந்ததை ஓரளவு ஊகித்து விட்டாள் அம்மா. மகனின் பிஞ்சு உள்ளம் ஏமாற்றத்தினால் துடிப்பதை அவளால் உணர முடிந்தது. மகனைத் திட்டவில்லை.



அடிக்கவில்லை. அவன் அருகில் அமர்ந்து கொண்டாள். மெதுவாக அவன் முகத்தை நிமிர்த்தி கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

"நானும் அப்பாவும் உனக்கு எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறோம். எந்த வேலையையும் குறித்த சமயத்தில் செய்ய வேண்டும். காலதாமதம் கூடாது என்று. நேருஜி என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?"

அழுகையை அடக்கிவிட்டு தாயின் முகத்தைப் பார்க்கலானான். "காலதாமதம் கூடாது. அப்படி காலதாமதமானால் அதற்கான நொண்டிச் சாக்குகளைத் தேடி அலையாமல் மேற்கொண்டு காலதாமதம் செய்யாது... நடந்து கொள்ள வேண்டும். காலந் தவறாமை என்ற நல்ல பண்பை மாணவர்கள் கடை பிடித்து ஒழுக வேண்டும்" என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்.

சிரஞ்சீவி பதில் ஒன்றும் சொல்லவில்லை.

"ஐந்து நிமிஷம் பத்து நிமிஷம் தானேன்னு சில சமயம் நாம அஜாக்கிரதையா இருக்கோம். இந்த அஜாக்கிரதையினாலே, நாம எத்தனையோ முறை பஸ்சை விட்டு விடுகிறோம். படிச்சு நாளைக்கே நீ ஒரு நேர்முகத் தேர்வுக்குப் போவதாக வைத்துக் கொள். நேரத்திற்குப் போகவில்லை என்றால்... அதுவே உனக்கு ஒரு மைனஸ் பாயிண்டாயிடும் தெரியுமா?"

அம்மா மேலும் தொடர்ந்தாள்.

"ஒருவருக்கு உடம்பு ரொம்ப மோசமா இருக்கு. உன்ன மருந்து வாங்கிக் கொண்டு வரச் சொல்றாங்கன்னு வைத்துக் கொள்வோம். இப்ப நீ செய்தது மாதிரி நேரத்தைப் பற்றிக் கவலைப்படாது காலதாமதமாக மருந்தை வாங்கிக் கொண்டு வந்தால், அந்த நோயாளியின் உயிருக்கே ஆபத்து அல்லவா? அதுக்காக நீ எத்தனை பணம் காசு கொடுத்தாலும்... இழந்த உயிரை மீட்க முடியுமா? முயற்சி செய்து முயன்றால் பொன்னைக் கூட விலைக்கு வாங்கலாம்... ஆனால், இழந்த காலத்தை, நேரத்தை, வினாடிகளை நம்மால்... திரும்பப் பெற முடியுமா? சொல் சிரஞ்சீவி?"

அவனால் பதில் சொல்ல முடியவில்லை... நேரத்திற்கு இத்தனை மதிப்பா...! காலத்திற்கு இத்தனை சிறப்பா? மெதுவாக உணரலானான்.



"போனதெல்லாம் போகட்டும். இந்த நிகழ்ச்சியையே ஒரு பாடமாக வைத்துக் கொண்டு... இனி மேலாவது காலத்தின் அருமையை உணர்ந்து நடந்து கொள்."

சிரஞ்சீவி வாயைத் திறந்தான்.


"என்னை மன்னிச்சுடும்மா... இனிமே இந்த மாதிரி எல்லாம் நடந்து கொள்ள மாட்டேன். இது உறுதி."

இப்பொழுதெல்லாம் சிரஞ்சீவி சரியான நேரத்துக்குப் பள்ளிக் கூடம் வந்து விடுகிறான். அனைவருக்கும், குறிப்பாக கணக்கு ஆசிரியருக்கு திருந்திய அவனைக் கண்டு திகைப்பான மகிழ்ச்சி!

எங்கள் ஊரில் நடந்தது

சாப்பாடு திறந்து கிடந்தால்?

பள்ளியில் உணவு இடைவேளை. அனைவரும் சாப்பிட ஆரம்பித்தோம். பேசியபடி சாப்பிட்டுக் கொண்டு இருக்



கும் பொழுது நண்பன் ஒருவன் மட்டும் சாப்பாட்டை மூடிக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். வீட்டிலிருந்து ஏதோ விசேஷமான பலகாரம் கொண்டு வந்து, ஒருவருக்கும் தராது சாப்பிடுகிறான் என்று நாங்கள் எண்ணினோம். "ஏண்டா மூடிக் கொண்டு சாப்பிடறே?" என்று ஒருவன் கேட்கவே கேட்டு விட்டான். "திறந்து கிடக்கும் உணவுப் பண்டங்களைச் சாப்பிடக் கூடாதுன்னு இப்பத் தானே ஆசிரியர் சொன்னார். அதான் மூடிக் கொண்டு சாப்பிடறேன்" என்றான் அவன். எல்லோரும் சிரித்தோம்.

மதுக்கூர், ஏ.ஹாஜாநஜ்முதீன்.

அதிர்ஷ்டம்

நானும், ரமேசும் நண்பர்கள். ரமேசு சிரித்தால் அவன் தாடையில் அழகாகக் குழிவிழும். ஒருநாள் அவனிடம், "சிரிக்கும் போது தாடையில் குழி விழுந்தால் ரொம்ப அதிர்ஷ்டம்டா. நீ ரொம்ப



அதிர்ஷ்டக்காரன்டா" என்றேன். அதற்கு அவன், "அப்படின்னா என் பாட்டி கூடத் தான்டா ரொம்ப அதிர்ஷ்ட சாலி" என்று கூறினான். "ஏண்டா?" என்று கேட்டேன். "என் பாட்டிக்கு சிரிக்காமலேயே கன்னத்தில் குழிவிழும்" என்றானே பார்க்கலாம் ஒரே சிரிப்புதான்.

அனந்தபுரம், கே. ஜெயப்புதல்வன்.

செம்மண்

பக்கத்து வீட்டு முஸ்லீம் சிறுமி வந்தாள். அம்மாவிடம் சிறிய டம்ளரைக் கொடுத்து, 'எங்க அம்மா கொஞ்சம் செம்மண் வாங்கிட்டு வர சொன்னாங்க அத்தை' என்று கேட்டாள். அம்மா வாசல் படிக்குப் பூசும் செம்மண்ணை அந்த டம்ளர் நிறையக் கொடுத்தனுப்பினார்.

சிறிது நேரத்தில் திரும்பி வந்த சிறுமி, "அம்மா கேட்டது இந்த செம்மண் இல்ல அத்தை. பால் தயிர் ஆவதற்கு போடுவாங்களே, அந்த செம்மண்ணை வாங்கி வர சொன்னார்கள்' என்றாள்.

செம்மண் என்றால் உருதில் மோர் என்று புரிந்து கொண்டு அம்மா அந்த டம்ளரில் மோரை விட்டுக் கொடுத்தார்.

இதை அம்மா எங்களுக்குச் சொல்ல அனை வரும் சிரித்தோம்.
ஆண்டியப்பனூர், வி.மு.தெய்வா.

வழி எங்கே?

எங்கள் தலைமை ஆசிரியர் விடு முறையில் கணக்குகளைக் கொடுத்துப் போட்டுக் கொண்டு வரும்படி கூறினார். எல்லோரும் போட்டுக் கொண்டு வந் தோம். அதைப் பார்த்துக் கொண்டே வந்



தார். ஒரு மாணவனுக்கு நல்ல தூக்கம். அவனுடைய நோட்டைப் பார்த்த ஆசிரி யர் "விடை எழுதியிருக்கே சரி, வழி எங் கேடா?'' என்று கேட்டார். அவன் பள்ளியை ஒட்டிச் சென்ற பாதையைக் காட்ட எல்லோரும் சிரித்தோம்.
லாலாபேட்டை, எஸ். கிரீன் குமார்.

கையில் என்ன?


எங்கள் ஓவிய ஆசிரியர் எங்களுக்குப் பிடித்த சாமி படங்களை வரைந்து வரச் சொல்லியிருந்தார். நாங்களும் ஆளுக் கொன்று வரைந்து வந்தோம். ஒரு மாண வன் செல்வம் தரும் லட்சுமியின் படம் வரைந்து கொண்டு வந்தான். அவன் போட்ட லட்சுமியின் கையில் எதுவுமே போடாமல் வரைந்து வந்திருந்தான். இதைப் பார்த்த ஆசிரியர் "ஏண்டா உன் லட்சுமிக்கு என்ன வறுமை வந்துருச்சி?



கையில் ஒன்றையுமே காணோமே?'' என்றாரே பார்க்கலாம்! ஒரே சிரிப்புத் தான்!
அனந்தபுரம், கே. கார்த்திகேயன்.


முட்டை வேண்டாம்

அன்று எங்களுக்குத் தேர்வு நடந்து கொண்டிருந்தது. எங்கள் ஆசிரியர் "யாராவது முட்டை வாங்கினால் அவர்களை கண்டிப்பாக இனி வகுப்பில் நுழைய விட மாட்டேன்" என்று கூறினார். ஆசிரியர் கூறியது தேர்வில். அவர் சொன்ன சிறிது நேரத்தில் சத்துணவுப் பொறுப்பாளர் முட்டை போடுவதற்காக வந்தார். "முட்டை வேண்டாம்" என்று நாங்கள்



எல்லோரும் கூறினோம். அவருக்குக் காரணம் புரியவில்லை. ஆனால் இதைப் புரிந்த பலர் குபீரென்று சிரித்தனர்.
அனந்தபுரம் இர. சிவராஜ்.

நிற்கும் காரணம்!



எங்கள் ஊரில் திருவிழா. மேடை நாடகம் போட்டார்கள். பபூனாக வேட்ட மிட்ட ஒருவர், நாரதராக வந்தவரிடம், "ஒரு பஸ் வந்து கொண்டே இருக்கிறது. கையை நீட்டியதும் அது நிற்கிறது இல்லையா? அது ஏன் நிற்கிறது?" என்று

கேட்டார். "பயணிகள் ஏறுவதற்காக நிற்கிறது" என்றார் பபூன். "இல்லை, அந்த பஸ்ஸுக்கு உட்காரத் தெரியாது. அதனால நிற்கிறது" என்றார் நாரதர். எல்லோரும் சிரித்தோம்.

பெரிக்கல். டி.கணேஷ்.

சட்டத்தின்முன் சமம்!

எங்கள் வகுப்பில் ஒரு வழக்கம். யாராவது தாமதமாக வந்தால் அவர்களிடம் ஒரு ரூபாய் அபராதம் வசூலித்து வருவோம். ஆசிரியர் இதற்கு அனுமதித்திருந்தார். ஒரு நாள் எங்கள் தமிழாசிரியர் வகுப்புக்குத் தாமதமாக வந்தார். பாடம் நடத்தும்போது "எல்லோரும் சட்டத்தின்



முன் சமம்' என்றார். உடனே ஒரு மாணவன், "அப்போ நீங்களும் ஒரு ரூபாய் அபராதம் கட்டணும் சார். தாமதமா வந்திங்களே? சட்டத்தின் முன் எல்லோரும் சமம்னு சொன்னீங்களே?" என்று கேட்டு விளக்கினான். ஆசிரியர் திகைத்துப்போய் நின்றார்.

வந்தவாசி. பா.ஜெயக்குமார்.

சிம்மாசனம் தெரியும்!

எங்கள் பள்ளியில் உடற்கல்வி வகுப்பு உண்டு. ஆசிரியர் ஒருவர் வந்து யோகாசனங்கள் கற்றுக் கொடுப்பார். அன்று வகுப்புக்குப் புதிதாக ஒரு மாணவன் வந்து சேர்ந்தான். உடற்கல்வி வகுப்புக்கு அவனும் வந்தான். புதிய மாணவன் என்பதால் அவனிடம் "ஆசனம் ஏதாவது தெரியுமா?" என்று கேட்டார் ஆசிரியர். "தெரியும் சார். சிம்மாசனம்" என்றான் அந்தப் புதிய மாணவன் அப்பாவித் தனமாக. எல்லோரும் சிரித்தோம், பதில் கூறிய




மாணவனைத் தவிர!

வரிக்கல், ஆ.குமார்.

பட்டு நூல்

எங்கள் தமிழாசிரியர் தமிழ் அறிவு மிக்கவர். வகுப்பில் பாடம் நடத்தும்போது பாடப்பகுதியை மட்டும் நடத்தாது, பொதுவான செய்திகளையும் கூறுவார். எங்களுக்குப் பிடித்தமான நூலாசிரியரின் பெயரைக் கேட்பார். அந்த ஆசிரியர் எழுதிய மற்ற நூல்களைப் பற்றியும், அவைகளின் சிறப்பையும் கூறிவிட்டு, பாடத்தை ஆரம்பிப்பார். அன்று வகுப்பில் ஒரு மாணவன் நன்றாகத் தூங்கி விட்டான். பாடத்தை கவனிக்கவே இல்லை. ஆசிரியர் அவனை அழைத்து "உனக்குப்



பிடித்த நூல் எது?" என்று கேட்டார். தூக்கம் முற்றிலும் கலையாத அவன் 'பட்டுநூல் சார்' என்றான். கேள்விகேட்ட ஆசிரியர் உட்பட எல்லோரும் சிரித்தோம்.

வெள்ளையாம்பட்டு. ந. துரை,

கல்யாணத்துக்கு வந்தேனே?

எங்கள் கணக்கு ஆசிரியருக்கு இரண்டு வாரத்திற்கு முன்புதான் திருமணம் ஆகியிருந்தது. நாங்களெல்லாம்

கூடத் திருமணத்திற்குப் போயிருந்தோம். வகுப்பில் கணக்குப் பாடம் நடத்த ஆசிரியர் வந்தார். கணக்கைச் சொல்லிக் கொடுத்து, ஒரு மாணவனைப் போடச் சொன்னார். அவன் தவறாகப் போட்




டான். ஆசிரியர் அவனை அடித்தார். "என்ன சார் அடிக்கிறீங்க? நான் உங்க கல்யாணத்துக்குக் கூட வந்தேனே சார்?" என்று அவன் வலிதாங்காமல் கேட்டதும் ஆசிரியர் உட்பட எல்லோரும் சிரித்தோம்.

நாசிபுரம், என்.கே.நாகராஜன்.

ஆமையா!

எங்கள் ஊரில் ஒரு வழக்கம். ஆண்களை எல்லோரும் ஐயா என்றுதான் அழைப்பார்கள். ஒருவரை ஒருவர் அழைத்துக் கொள்ளும் போதும் "ஐயா" போடுவார்கள். இந்த 'ஐயா' முதலிலும் இருக்கும். சில சமயம் கடைசியிலும் இருக்கும். ஒருமுறை ஊர்க்காரர் ஒருவர் குளத்தில் குளிக்கப் போனார். அங்கே ஏற்கனவே குளித்துக் கொண்டிருந்த ஒருவர், "அதோ



அங்கே பாரையா. பாம்பையா" என்று படியில் இருந்த பாம்பைச் சுட்டிக் காட்டினார். குளிக்க வந்தவரும் அந்தப் பாம்பைப் பார்த்து விட்டார். "ஆமாம்" என்று பதிலளிக்க எண்ணிய அவர் ஊர் வழக்கப்படி "ஆமையா" என்றார். 'பாம்பு இல்லை ஆமை' என்று அவர் பதிலளிப்பதாக எண்ணிய மற்றவர், "அது ஆமை இல்லையா. பாம்பையா" என்றார். இவரும் "ஆமையா" என்று மறுபடி பதிலளிக்க வாய்வார்த்தை முற்றி, சண்டையே ஏற்பட்டு விட்டது. மற்றவர்கள் வந்து சமாதானம் செய்து விளக்கிய பிறகுதான் இருவரும் புரிந்து கொண்டு சிரித்தனர்.

முழையூர், வி. செந்தில்.

மொத்தமா

நான் ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறேன். எங்கள் தமிழாசிரியர் மிகவும் நல்லவர். காலாண்டுத் தேர்வு முடிந்ததும், "அடுத்த நாளே உங்கள் ரேங்க் கார்டைத் தருகிறேன்" என்று வகுப்பில் கூறினார். ஒரு குறும்புக்கார மாணவி எழுந்து, "எதுக்கு சார் அப்பப்போ ரேங்க் கார்டு எழுத சிரமப் படறீங்க? மொத்தமா எல்லாத் தேர்வுகளுக்குமா சேர்த்து வருஷக்



கடைசியில ஒரே கார்டா கொடுங்களேன்? காலாண்டுக் கார்டுக்கு ஒரு தடவை அடி, அரையாண்டுக் கார்டுக்கு ஒரு தடவை அடின்னு தனித் தனியா வீட்டுல வாங்கணுமா?" என்று கேட்டதும் ஆசிரியர் உட்பட எல்லோரும் சிரித்தோம்!

கே. வனிதா, துத்திப்பட்டு.



பரிசுப்பணம்

வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரியர், தலைமையாசிரியர். வருவதைக் கண்டு வரவேற்றார்.

"நம்ம தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் கட்டட நிதிக்காக விற்கப்பட்ட நன்கொடை குலுக்கல் சீட்டில், நம்ம பள்ளியில் வாங்கிய 2001, 3014 என்ற எண் கொண்ட சீட்டுக்களுக்கு பத்தாயிரம்ரூபாய் பரிசு விழுந்திருக்கிறதாம். இப்பத்தான் தொலைபேசியில் தகவல் சொன்னாங்க. அந்த ரெண்டு சீட்டும் உங்க வகுப்புல விற்பனையாயிருக்கு" என்று ஒரே மூச்சில் உற்சாகமாகக் கூறி முடித்தார் தலைமை ஆசிரியர்.

வகுப்பிலிருந்த மாணவர்கள் எல்லோரும் தம் சீட்டு எண்ணை ஆவலுடன் பார்த்து ஏமாந்தனர்.

"யாருடையது அந்த சீட்டுகள்?" என்று ஆசிரியர் கேட்டார்.

ரவியும் குமாரும் மகிழ்ச்சிப் பெருக்கில் எழுந்து நின்றனர். அந்த இரண்டு சீட்டுக்களை வாங்கிய அதிர்ஷ்டசாலிகள் அவர்களே.

ஆசிரியரும், தலைமை ஆசிரியரும், மாணவர்களும் கை குலுக்கித் தங்கள் பாராட்டைக் கூறி மகிழ்வுற்றனர். ரவியும், குமாரும், நடந்தது கனவா இல்லை நனவா என்று உடலைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டனர்.

ரவி தன் பெற்றோர்களிடம் அந்தப் பரிசுத் தொகைப் பணத்துக்கு தொலைக் காட்சிப் பெட்டி வாங்க வேண்டும் என்று கேட்டான். பெற்றோர் எத்தனையோ கூறிப் பார்த்தனர். அவன் கேட்கவில்லை. பிடிவாதமாக இருந்தான். எனவே வேறு வழியின்றி பெற்றோர் டி.வி.யை வாங்கினர்.

பெற்றோரிடம் பரிசுப் பணத்தைக் கொடுத்த குமார், "இதை வங்கியில் போடுங்கள் ஆபத்துக்கு உதவும்," என்று கூறினான். பெற்றோரும் அப்படியே செய்தனர்.

ஓர் ஆண்டு ஓடியது. ஆண்டு இறுதித் தேர்வு விடுமுறை கழிந்ததும் ரவியும் குமாரும் சந்தித்தனர். ரவியின் அயர்வான முகம் கண்டு குமார் அதிர்ச்சியுற்றான். "என்ன ரவி! என்ன ஆயிற்று உனக்கு?" என்று கேட்டான்.

"எங்கப்பாவுக்குத் திடீரென முடக்கு வாதம். மருத்துவமனையில் சேர்த்துள்ளோம். சென்னைக்குப் போய் வைத்தியம் பார்க்க வேண்டுமாம். குறைஞ்சது பதினைந்தாயிரம் ரூபாய் ஆகுமாம். எங்கே போவது, யாரிடம் கேட்பது என்று தெரியவில்லை. எங்க டி.வி.யை யாராவது விலைக்கு வாங்கிப்பாங்களா? பாதி விலை தந்தால் கூடப் போதும்!" என்று கலங்கினான்.

"ரவி, எனக்கு வந்த பரிசுத் தொகையை அப்படியே என் பெயருக்கு பாங்கியில் போட்டு வைத்திருக்கிறோம். அதை உனக்கு எடுத்துத் தர என் பெற்றோர்கள் மறுக்க மாட்டார்கள். கவலையை விடு" என்றான் குமார்.

அவர்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த தலைமையாசிரியர் குமாரின் சிக்கனத்தையும் பெருந்தன்மையினையும் கண்டு வியந்து பெருமைப் பட்டார்.

குமாரின் கரங்களைப் பற்றிக் கொண்டு நன்றி கூற வாய் எழாமல் கலங்கினான் ரவி. சேமிக்கும் பழக்கம் வாழ்க்கைக்குப் பாதுகாப்பானது என்ற உண்மையை ரவி உணர்ந்து கொண்டான்.

- என்.கோகுல்



பல்லி சட்டை உரிக்குமா?

ரேவதி

மாடிப்படியில் உட்கார்ந்து கொண்டு கணக்குப் போட்டுக் கொண்டிருந்த நீலாவுக்கு, பாட்டி தன்னைத் தேடுவது புரிந்து விட்டது.

“என்ன பாட்டி? இங்கே இருக்கேன்?” என்று குரல் கொடுத்தாள்.

அருகே வந்த பாட்டி, “நீலாக்கண்ணு. பசு மாடு வாங்கலாம். பசு மாடு வாங்கலாம்னு சொல்லிக்கிட்டே இரு. மாடிச் சாத்தான் குரல் கொடுத்ததும் எங்கிட்டே வந்து சொல்லு. உனக்கு சாக்லேட் வாங்கக் காசு தரேன்” என்றாள்.

மாடிச் சாத்தான் என்று பாட்டி குறிப்பிட்டது, மாடிப்படி உச்சிமூலையில் குடியிருந்த மரப்பல்லியை.

“பத்து நிமிஷம்தான் பாட்டி சொல்லுவேன். அதற்குள் உன் மாடிச்சாத்தன் குரல் கொடுக்கலேன்னா, நான் கணக்குப் போட ஆரம்பிச்சுடுவேன். அதோட, அது குரல் கொடுத்தாலும் கொடுக்காட்டாலும் பேசினபடி காசு தந்திடணும்.”

“சரிடா கண்ணு. இந்தா இப்பவே வாங்கிக்க” என்று காசைக் கொடுத்த பாட்டி, “நல்ல சமாச்சாரமா வந்து சொல்லும்மா. நல்ல வாக்குக் கிடைக்கட்டும்” என்று உள்ளே போனாள்.

கணக்கு நோட்டை மூடி விட்டு, “பசு மாடு வுாங்கணும் பசு மாடு வாங்கணும்” என்று சொல்ல ஆரம்பித்தாள் நீலா.

சிறிது நேரம் சென்றது. மாடிப்படியின் மேல் பக்கத்தில் இருந்து, “பசு மாடு வேண்டாம். வாங்காதே” என்று தொடர்ந்து நீலாவின் அண்ணன் கோபு கூறுவது கேட்டது!

“என்னண்ணா இது! பசு மாடு வாங்கணும்னு நான் பாட்டிக்காக சொல்லிக்கிட்டிருக்கேன். நீ வேண்டாம்னு சொல்லிக்கிட்டு இருக்கே!” என்று கேட்டாள் நீலா.

“தாத்தாதான் வேண்டாம்னு சொல்லச் சொன்னார். சாக்லேட் வாங்கக் காசு கூடத் தந்தார்” என்றான் கோபு.

“என்ன அண்ணா இது! மாடிச் சாத்தான் யாருக்குன்னு குரல் கொடுக்கும்? வேண்டாம்கறதுக்குக் குரல் தரணும்னு தாத்தா எதிர்பார்க்கிறார். வேணும்கறதுக்குக் குரல் தரணும்னு பாட்டி ஆசைப்படறா!”

மாடிப்படியின் உயர்ந்த உத்தரத்து வங்கில் குடியிருந்த ஆண் மரப்பல்லி சிரித்தது. அதற்குப் பெயர்தான் மாடிச்சாத்தான். பாட்டி வைத்த பெயர் அது!

“எதுக்கு இப்போ சிரிக்கறே?” என்று கேட்டது அதன் மனைவி.

“சாதாரணமா இந்த மாதிரி விவகாரத்துக்கு எல்லாம் தாத்தா வரவே மாட்டார். பாட்டிதான் நீலாவையோ, கோபுவையோ கேட்க வைச்சு, நம்மை பதில் சொல்ல வைச்சு, “கவுனி

சொல்லிடுத்து"ன்னு பழியை நம்ம பேர்ல போட்டுக் காரியத்தைச் சாதிச்சுக்கிடும். இப்போ தாத்தாவும் அதே பாட்டி வழியில் கோபுவை வைச்சு முயற்சி பண்றாரே!"

"பாட்டிக்குப் பசு மாடு வாங்கணும்னு ஒரே ஆசை. தாத்தாவுக்கு அது வேண்டாம்னு ரொம்பப் பிடிவாதம்."

"சரி, இப்ப நடுவுல முழிச்சுக்கிட்டுத் தவிக்கிறது நாம தானே? என்ன பண்றது?"

"நீ வந்து தாத்தாவுக்குக் கவுளி சொல்லப் போ. நான் பாட்டிக்குச் சொல்லப் போறேன்."

மர லாகடத்தின் வழியாகக் கீழே இறங்கிய பெண் பல்லி, நீலா இருந்த இடத்திற்கு அருகே வந்து 'கெக்' 'கெக்' என்று குரல் கொடுத்தது. ஆண் பல்லி கோபுவுக்கு அருகே வந்து குரல் கொடுத்தது.


"மாடிச் சாத்தான் கௌளி சொல்லிடுத்து. பசு மாடு வாங்கலாம்" என்று மகிழ்ச்சிக் குரல் கொடுத்தாள் பாட்டி.



"இதைக் கேளு. அதே மாடிச் சாத்தான் பசு மாடு இப்போ வேண்டாம்கறதுக்கு இங்கே குரல் கொடுத்துடுத்து" என்று குதித்தார் தாத்தா.

இருவரும் ஒருவர் நிலையை மற்றவர் புரிந்து கொண்டு திகைத்தனர். இரண்டு இடத்திலும் இரண்டு பல்லிகள் இருந்து குரல் கொடுத்தன!

"ஆமாம், இப்படி நாம்ப 'ஆமாம்' சொல்ற மாதிரி குரல் கொடுத்தா, உண்மையாவே அந்தக் காரியம் நடந்துடுமா?" என்று கேட்டது பெண் பல்லி.



"இதோ கேளு...? இதே கேள்வியை இந்த நீலா அவங்க பாட்டிகிட்டே கேட்டிருக்கா. அதுக்கு, பாட்டியம்மா என்ன பதில் சொல்லப் போறான்னு நீயே கேளு" என்றது ஆண் பல்லி மாடிச் சாத்தான்.


"பல்லிங்க தெய்வப் பிறவிம்மா. அதுங்களுக்கு முக்காலமும் தெரியும். உத்தரத்துல முதுகு தெரியும்படியா எப்படி குறுக்கேயும் நெடுக்கேயும் கீழே விழாம ஓடுது! இந்த வீடு நூறு வருஷத்துக்கு முன்னால் உங்க எள்ளுத் தாத்தா (கொள்ளுத் தாத்தாவின் தாத்தா) கட்டினது அப்பத்துலேருந்து இந்தப் பல்லிங்க இங்கதான் இருக்கு. அதனால் நம்ம குடும்பத்து சமாசாரம் எல்லாம் இதுங்களுக்கு அத்துபடி. நமக்கு எது நல்லது எது கெட்டதுன்னு அதுங்களுக்கு நல்லாத் தெரியும். அதுனாலதான் அதுங்களைக் கேட்டுக்கிட்டு சம்மதம் வாங்கிக்கிட்டு எதையும் பண்ணறோம்" என்றாள் பாட்டி.



"பாட்டி சொல்றதைக் கேட்டீங்களா! நமக்கு நூறு வயதுன்னு அவங்க முடிவு பண்ணிட்டாங்க. வீட்டுப் பல்லிகளான நாம, இரண்டு ஆண்டுகளே வாழ்வோம்கற உண்மை இந்த அசட்டுப் பாட்டிக்குத் தெரியலையே! நாம எல்லாம் பார்க்க ஒரே மாதிரி இருப்பதால் இவங்களால வித்தியாசம் கண்டு பிடிக்க முடியறதில்லேன்னு நான் நினைக்கறேன்" என்றது பெண் பல்லி.

"அதுவேதான் உண்மை. நாம உத்தரத்துலேயும், கரடு முரடான, வழுவழுப்பான தரையிலேயும் விழாம ஊர்ந்து போறதுக்கு நம்ம அடிவயிற்றின் அமைப்பும் கைகால் விரல் நுனியில் உள்ள கொக்கி நகங்களும்தான்கறது இவங்களுக்கு இன்னும் புரியலையே! நம்மிடம் ஏதோ மந்திர சக்தி இருக்குன்னே நினைச்சிக்கிட்டிருக்காங்களே!" என்றது மாடிச் சாத்தான்.

''ஐயோ தேள் தேள்!'' என்று கோபு கத்தும் சத்தம் கேட்டது. தாத்தா செருப்பை எடுத்துக் கொண்டு ஓடி வந்தார். பாட்டி விளக்கு மாற்றைத் திருப்பிப் பிடித்துக் கொண்டு ஓடி வந்தாள். அடுப்புக் கரி டப்பாவுக்குப் பின்னால் ஓடிப் போய் ஒளிந்து கொண்டது தேள்.



''பிள்ளையாரப்பா. இந்தக் கரி டப்பாவை எப்படித் தூக்கி, எப்படித்தான் அடிப் பேனோ? அதுக்குள்ள இது ஓடி மறைஞ்சுக்காம இருக்கணுமே. யாரையும் கொட்டாம இருக்கணுமே'' என்று வேண்டிக் கொண்டாள் பாட்டி.

''தேள் விருந்து கிடைச்சு எத்தனை நாளாச்சு! நான் போய்ப் பிடிக்கறேன்'' என்று கரி டப்பாவின் கீழே புகுந்தது மாடிச் சாத்தான். அது வெளியே வந்த போது அதன் வாயில் தேள்!

''பார்த்தியாம்மா, கிண்டல் பண்ணினாயே...? இந்த மாடிச் சாத்தான் நம்ப குடும்பத்தைக் காத்து வரும் தெய்வம்'' என்று பரவசப்பட்டாள் பாட்டி.

''ஐயோ அசட்டுப் பாட்டி! ஈ, எறும்பு, பூச்சி, கரப்பு மாதிரியே தேளும் நாங்க சாப்பிடக்கூடிய இரையே என்பது ஏன் தான் உனக்குத் தெரியலையோ!'' என்று நொந்து கொண்டது மாடிச் சாத்தானின் மனைவி.

''இந்த மாடிச் சாத்தானும் அதன் மனைவியும் இந்த வீட்டில் நம்முடன் இருப்பது எத்தனை பாதுகாப்பு தெரியுமா? இந்த மாடிச் சாத்தான் பாம்போடு கூட சண்டை போடும் போல இருக்கு! ஒரு தடவை, இதன் வாயில் பாம்பின் சட்டையே இருந்தது!'' என்றாள் பாட்டி.

''இதென்ன! எனக்குக் கூடத் தெரியாமல் புது வீரப் பிரதாபம்?'' என்று கேட்டது சாத்தானின் மனைவி.

''ஒண்ணுமில்லே. நாம்ப அடிக்கடி, ஒவ்வொரு உறுப்பாகச் சட்டையை உரிச்சு சாப்பிட்டு விடுவோம் இல்லையா? அந்த மாதிரி, என் வால் பக்கச் சட்டையை உரிச்சு சாப்பிட்டுக்கிட்டு இருந்தப்போ, இந்த அசட்டுப் பாட்டிம்மா பார்த்துட்டாங்க. நான் பாம்பையே புடிச்சுக் கொன்னு, அதன் சட்டையை இழுத்துச் சாப்பிடறதா நினைச்சுக்கிட்டாங்க! நல்ல வேடிக்கை! பாம்பைக் கண்டா நமக்கும் பயம்கறது இவங்களுக்கு இன்னும் தெரியலையே!'' என்றது ஆண் பல்லி மாடிச் சாத்தான்.

அறிவியல் உண்மைகள் :

* பல்லிகள் ஊர்வன இனத்தில் ஸ்குவாமேட்டா (SQUAMATA) வரிசையில், லேசர்ட்டிலியா (LACERTILIA) துணைவரிசையைச் சேர்ந்தவை. இவை நூறு ஆண்டுகள் வாழும் என்பது தவறான நம்பிக்கை. வீட்டுப் பல்லிகள் இரண்டு ஆண்டுகளே வாழும்.

* இவைகளின் தோலில் சுரப்பிகள் கிடையாது. நிறத்தை வாழும் இடத்திற்கு ஏற்ப மாற்றிக் கொள்ளும் நிறமி (PIGMENT) இவைகளுக்கு உண்டு.

* வால் பகுதி, இடைத்தடுப்பு (SPECTUM) உடையது. கரும்புக் கணு போல், ஆபத்து வந்தால் இதை விட்டு விட்டுத் தப்பித்துக் கொள்ளும். மீண்டும் வால் முளைக்கும்.

* நாக்கு, சிறப்பான தன்மை உடையது. இதுவே தொட்டு உணரவும் பயன் படும். பல்லிகளில் 2500 வகைகள் உண்டு. இவைகளை வகைப்படுத்த இந்த நாக்கே பெரிதும் உதவுகிறது.

* சில பல்லிகளுக்கு பைனிய கண் (PINEA EYE) என்ற வளராத கண் ஒன்று மூளைப் பகுதியில் இருக்கும். இது எதற்கும் பயன்படாது. ஆனால் இது சிவ பெருமானின் நெற்றிக் கண்ணைப் போன்றது. அதனால் பல்லி சிவ கணங்களில் ஒன்று என்ற நம்பிக்கை பரவலாக உள்ளது. இதற்கு ஆதாரம் இல்லை.

* மாதக் கணக்கில் உணவின்றி உயிர் வாழும். கண்கள், ஒளி ஊடுருவும் சவ்வால் மூடப்பட்டது. இதனடியில் கண், தன்னிச்சையாக இயங்கும்.

* தோல், பலவித டிசைன் போட்டதாக இருக்கும்.

* கைகளில் ஐந்து விரல்கள். இவை ஒட்டும் தன்மை (ADHESIVE DISILS) உடையவை. விரல் நுனியில் கொக்கி நகம். இதன் உதவியால், மழுமழுப்பான, சொர சொரப்பான இடங்களில் விழாமல் ஓடும்.

* விரலின் அடிப்புறமும், அடிவயிறும் வழுவழுப்பான சவ்வுகளால் ஆனவை. இவைகளை அழுத்தினால், இடையே உள்ள காற்று வெளியேறி, வெற்றிடம் உண்டாகும். இதனால் அங்கே பலமாக ஒட்டிக் கொள்கிறது. சிறிது அசைத்தால் கூட மீண்டும் காற்றுப் புகுந்து பிடிப்பு விட, எளிதில் நகரும்.

* குரல் உண்டு. ஆனால் அதிகமாக எழுப்புவதில்லை. எச்சரிக்கை செய்ய வும், குடும்பம் நடத்தவும் இது குரல் கொடுப்பதையே 'கௌளி சொல்லுதல்' என்கிறார்கள்.

* பாம்பைப் போலவே பல்லியும் சட்டை உரிக்கும். ஆனால் பகுதி பகுதி யாக. உரித்த சட்டையைத்தானே தின்று விடும்.

* பெரும்பாலும் இரண்டு முட்டைகள் இடும். முட்டைகள் வெண்மையாக இருக்கும். கடினமான ஓடு, குஞ்சுகளுக்கு முட்டைப் பல் உண்டு. இவைகளின் உதவியால் முட்டையை உடைத்துக் கொண்டு வெளியே வரும்.

* பல்லிகள் மனிதனுக்குத் தீங்கு இழைக்காதவை. இதற்கு விதிவிலக்கு அமெரிக்காவின் மெக்ஸிகோ பல்லிகள் மட்டுமே.

* உலகெங்கும், வெப்ப நாடுகள் எல்லாவற்றிலும் பல்லிகள் உண்டு. அந்த மான் தீவுகளில் தங்க நிற; வெள்ளி நிறப் பல்லிகள் கூட உண்டு!

எங்கிருந்தோ ஓடி வந்த ஓணான் ஒன்று, மாடிச்சாத்தானைப் பார்த்துப் பாய்ந்து வந்தது. அதன் வாலை இறுகக் கௌவியது. சாத்தான், வாலை அறுத்துக் கொண்டு ஓடியே போய் விட்டது!

அறுந்த வால் மட்டும் கீழே விழுந்து துடிப்பதைப் பார்த்துத் திகைத்துப்போய் நின்றது ஓணான்.

என்ன ஒற்றுமை? போட்டி




இங்கே ஒன்பது உயிரினங்கள் இருக்கின்றன. இவை எல்லாம் உங்களுக்கு நன்கு அறிமுகமானவை. இவைகளின் பழக்க வழக்கங்களைப் பற்றி நீங்கள், கேட்டவை, படித்தவைகளையெல்லாம் சிறிது நினைவு படுத்திப் பாருங்கள். இவை எல்லாமே அடிக்கடி காண் பவை. இவைகளுள் ஒன்று மட்டும் தன் பழக்கவழக்கங் களால் தனித்து நிற்பது. மற்ற எட்டும் ஒற்றுமை உள்ளவை. தனித்து நிற்பது எது, ஏன்? மற்ற 8-ல் உள்ள வைகளுக்குள் இருக்கும் ஒரே ஒற்றுமை என்ன என்ப தைக் கண்டுபிடித்து ஒரு தபால் கார்டில் எழுதி, உங்கள் பெயர், முழு முகவரியையும் குறிப்பிட்டு, முக வரிக் கூப்பனை ஒட்டி அனுப்பி வையுங்கள். முகவரிக் கூப்பனில்லாமல் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்பட மாட்டா. அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைத் தர வேண்டும். முடிவு தேதி : 30.6.96. தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு, கோகுலம் அலுவலகம் பொறுப்பாகாது. ஒன்றுக்கு மேற்பட்ட வர்கள் சரியான விடையை எழுதினால், குலுக்கல் முறையிலேயே பரிசு முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.



ஆசிரியர், கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

கோடை விடுமுறையைக் கழித்தேன்!



பாட்டி வீடு ரொம்ப ஜோரு!

தீபாவளி சமயம். ஐந்து நாள் விடு முறை என்று எங்கள் டீச்சர் சொன்னார் கள். எனக்கு ஏகப்பட்ட குஷி. விடுமுறை தொடர்ந்து வந்ததால் எங்கள் பாட்டி வீடான இரணியலுக்குப் போனோம். என் தங்கை ஜனனியும் நண்பன் ராஜேஷு-



மாக விளையாடினோம். காலை ஒரு மணி நேரம் படித்து டிக்டேஷன் எழுதினால் தான் விளையாட என் அம்மா அனுமதிப் பாங்க. மூணு பேருமா படபடவென பாடங்களை படிச்சிடுவோம். சைக்கிள் ஓட்டுவது பந்து விளையாடுவது பாட்டி கூட செடிகளுக்குத் தண்ணீர் விடுவது என நான் போவது தெரியாம ஓடிப் போனது. இப்பவே வியாழக்கிழமை வந் திடுமோன்னு நாங்க மூணு பேரும் கவ லைப்பட்டோம். ராஜேஷை விட்டு விட்டு ஊருக்கு வந்தோம். வந்ததுமே, "இனி எப்பம்மா லீவு? எத்தனை நாளிருக்கு லீவு வர?" என மறுபடியும் அம்மாவைக் கேட் டுக்கிட்டே இருக்கோம்.

சிவபெருமான், இரணியல்.

தங்கைக்கு உதவி

எனக்குப் போன வருடம் பத்தாம் வகுப்பு விடுமுறை சற்று அதிகமாகவே இருந்தது. என் தங்கை இரண்டாம் வகுப்புத் தேர்வு எழுதி இருந்தாள். நான் மூன்றாம் வகுப்பிற்கான கணக்குப் புத்த கத்தை அவளுக்காக வாங்கி அதில் உள் ளது போலவே, பல மாதிரிக் கணக்கு களை ஒரு நோட்டில் எழுதி வைத்தேன். சொல்லிக் கொடுத்தேன். அது அவளுக்கு இந்த வருடம் மிகவும் பயனுள்ளதாய் இருந்தது. எனக்கும் விடுமுறையை



நன்றாகப் பயன்படுத்திய நிறைவு கிடைத்தது. என்ன, நீங்களும் நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு, தங்கை தம்பிக்குக் கணக்குத் தயாரிக்க எழுந்துட்டீங்களா?

கே.வி. குணவதி, குசலூர்.

பாட்டி வீட்டில்



நான் விடுமுறையை எங்க பாட்டி வீட்டில் சந்தோஷமாகக் கழித்தேன். கேரம் போர்டு பிலியட்ஸ் விளையாடின நேரம் போக, எங்க தங்க பாட்டிக்கு உதவியா செடிக்குத் தண்ணி விடுவேன். எனக்கு செடி வளர்ப்பதில் ரொம்ப ஆசை. சின்ன வாளியால குழாய்ல தண்ணி எடுத்து நானும் தண்ணி ஊத்துவேன். பாட்டியைக் கதைகள் சொல்லச் சொல்லிக் கேட்பேன். ராமாயணம் - மகாபாரதம் தெனாலிராமன் பஞ்சதந்திர கதைகளைச் சொல்லுவாங்க. சாயங்காலமானா டீ.வி.ல படம் பார்ப்போம். எங்கம்மா நேரம் கிடைக்கிறப்போ பாடம் சொல்லித் தருவாங்க. இப்ப விலாசம் கூட பாட்டிதான் எழுதித் தந்தாங்க. எழுத்துப் பிழை திருத்தி அதை இதில எழுதறேன். ரொம்ப உதவியா இருக்கு. எங்க ஸ்கூல்ல மலையாளம்தான் எழுதச் சொல்வாங்க. அம்மாதான் தமிழை லீவில சொல்லித் தருவாங்க.

– ஆர். சிவபெருமான், திருவனந்தபுரம்.

படிக்கக் கற்றேன்!

நான் காது கேளாதோர் பள்ளியில் எட்டாம் வகுப்புப் படிக்கிறேன். சென்ற



விடுமுறையில் பெரியம்மா வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கு வீட்டிற்கு எதிரேயுள்ள மைதானத்தில் சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டேன். மேலும் கோகுலம் இதழில் சிறிய சிறிய கதைகளைப் படித்துப் புரிந்து கொள்ளவும் கற்றுக் கொண்டேன். இப்போது எனக்குக் கதைகள் படிப்பதும், சைக்கிள் ஓட்டுவதும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

பி. தேன்மொழி, போச்சம்பள்ளி.

பாராட்டு



ஒன்பதாம் வகுப்பை முடித்து விட்டு விடுமுறையில் இருக்கும் நான் விடுமுறையைப் பயனுள்ள; பாராட்டுப் பெறுகின்ற மாதிரி ஏதாவது செய்து கழிக்கத் திட்டமிட்டேன். நான் இருப்பது கிராமத்தில். இங்கு உள்ளவர்கள் யாருக்கும் கையெழுத்துப் போடக் கூடத் தெரியாது. நான் தினமும் மாலையில் எல்லோரையும் அழைத்து, கையெழுத்துப் போடக் கற்பித்

தேன். இப்பொழுது ஒவ்வொருவரும் ஒழுங்காகக் கையெழுத்து மற்றும் படிக்கக் கூடத் தெரிந்து கொண்டு விட்டார்கள். எல்லோரும் என்னைப் பாராட்டினார்கள். சொல்லிக் கொடுத்த மகிழ்ச்சியும் என்னைப் பாராட்டிய மகிழ்ச்சியும் ஒன்று சேர விடுமுறையைக் கழித்து விட்டு மகிழ்ச்சியாகப் பள்ளிக்குச் சென்று வருகிறேன்.

ப. காளிதாசன், புதுக்கோட்டை.

மாத்திரைகளை அறிந்து கொண்டேன்!



நான் என் விடுமுறையை வித்தியாசமான முறையில் கழித்தேன். வெளியூர் செல்லும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அப்பொழுது எங்களுக்குத் தெரிந்த மருந்துக் கடைக்காரர் (மெடிக்கல் ஸ்டோர்) தன் கடையில் ஆள் இல்லாததால் என்னை பள்ளி விடுமுறை முடியும் வரை கடையில் இருக்குமாறு கூறினார். நானும் விடுமுறையை வீணாக்க விரும்பாமல் கடையில் இரண்டு மாதம் இருந்தேன். அதன் பலனாக நான் பல மருந்து மாத்திரைகளைப் பற்றி அறிந்து கொண்டேன். எவை எவை எந்த நோயைத் தீர்க்கும் என்றும் அறிந்து கொண்டேன். கடையை விட்டுச் செல்லும் பொழுது என்னிடம் அறுநூறு ரூபாய் கொடுத்து வைத்துக் கொள்ளச் சொன்னார் கடை முதலாளி. அப்பணத்தில் நான் இரண்டு செட் துணிகள் எடுத்துக் கொண்டேன்.

– வி. கார்த்திக், அத்திப்பட்டு.

சரளமாகப் பேச



நான் ஆறாம் வகுப்பை முடித்து விட்டேன். அடுத்த வருடம் ஏழாம் வகுப்புக்குச் செல்ல வேண்டியவன். மார்ச் மாதம் 27-ஆம் தேதியை அடுத்து கோடை விடுமுறைதான். நான் கோடை விடுமுறையை நல்ல முறையில் கழிக்க வேண்டும் என தந்தை விருப்பப்பட்டார். ஏதாவது பயிற்சியில் சேர்த்து விடுங்கள் என நானும் கூறினேன். என் தந்தை மற்றவர்கள் எவ்வாறு சொல்லித் தருவார்களோ என எண்ணி அவரே எனக்கு ஹிந்தியும், ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவது எப்படி என்பதையும் கற்றுத் தந்தார். இப்பொழுதே ஓரளவு சரளமாகப் பேசுகிறேன். இன்னும் கொஞ்ச நாட்களில் சுலபமாகப் பேசி விடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது. தந்தை கற்றுத் தந்து நான் பேசக் கற்றதில் மிகவும் பெருமைப்படுகிறேன்.

– வே. ராஜா சங்கர், திருநெல்வேலி.

கல்வி கற்றுக் கொடுத்தோம்

நானும் எனது நண்பர்களும் விடுமுறையைப் பயனுள்ள வழியில் செல



வழித்தோம். எங்கள் தெருவில் உள்ள எல்லா நண்பர்களும் கூடி அக்கம் பக்கத்தில் இருந்த கல்வி அறிவு இல்லாத சிறுவர்களுக்கும், முதியோர்களுக்கும் கல்வி கற்றுக் கொடுத்தோம். அவர்கள் இப்பொழுது எழுத்துக் கூட்டிப் படிக்கின்றனர்; எழுதுகின்றனர். எங்களது இந்தச் செயலை எங்கள் பெற்றோரும், மற்றவர்களும் பாராட்டினர். எங்களுக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

– *என். சங்கரசிவன், வலங்கைமான்.*

அம்மாவுக்கு உதவி


எட்டாம் வகுப்புத் தேர்வை எழுதி விட்டு என்னுடைய பெரியம்மா வீட்டுக்குச் செல்லலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால், அம்மாவின் உடல்நிலை குன்றி விட்டது. சென்னை சென்றால் நிச்சயம் குணமாக்க முடியும் என்று டாக்டர் கூறினார். அதனால் அம்மா, அப்பா முதவில் சென்னை சென்றார்கள். பிறகு என்னை அழைத்துச் சென்றனர். அங்கே நான் என்னுடைய அம்மாவுக்குப் பணிவிடை செய்தேன். 6-வது மாடியில் நாங்



கள் தங்கியிருந்ததால் கீழே நான் சென்று காலையில் டீ, பால் வாங்கி வருவேன். பிறகு அப்பாவுடன் டிபன் வாங்கச் செல்வேன். மதியமும் சாப்பாடு வாங்கச் செல்வோம். மாலையில் டீ, பால் வாங்கச் செல்வேன். அருகில் இருந்த அறையில் தங்கியுள்ளவர்கள் என்னை "நல்ல பையன்" என்று பாராட்டினார்கள். ஒரு மாதம் அங்கு இருந்தேன். என் அம்மா, அப்பா இருவரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். எப்படியோ விடுமுறையில் என் பெற் றோர்க்கு உதவி செய்ததை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

– *கு.ச. செல்வராஜ்,*
குருசரமிப்பாளையம்.

தண்ணீர் பந்தல்



விடுமுறைக்கு சொந்த ஊரான கேந்த நாட்டிற்குச் சென்றேன். அங்கு நான் போன போது திருவிழா. அதனால் நான் மற்றும் என் நண்பர்கள் அனைவரும் சேர்ந்து ஆளுக்குக் கொஞ்சம் பணம் போட்டு திருவிழாவின்போது மோர் பந்தல் வைத்தோம். வெயிலின் கொடுமைக்கு நாங்கள் வைத்த மோர் பந்தல் மக்களுக்கு மிகவும் பயனாக இருந்தது.

இதே போன்று நீங்களும் பயன்தரும் செயல்களை விடுமுறையில் மக்களுக்குச் செய்யுங்கள். நன்மை பெறுங்கள். இதற்கு என் தந்தை பணம் கொடுத்து உதவியது பெருமையாய் இருக்கிறது.

– *க. நாகராஜன்,*
உளுந்தூர்பேட்டை.

''என் பேர்ல ஏகப்பட்ட பஸ் ஓடுதுடா.''

''உன் பேர் என்னடா?

''பல்லவன்!''

– சீர்காழி. வி. ரேவதி






எவன்தான்?

சீனு எதிரே வருவதைப் பார்த்ததும் செந்தில் நின்றான்.

''இன்னிக்கு சினிமாவுக்குப் போகலாமா?'' எனக் கேட்டான் செந்தில்.

''வேண்டாண்டா, கையில காசு இல்ல. தென்னந்தோப்புல உண்டி வில்லால குருவி அடிக்கலாம்'' என்றான் சீனு.




''போடா. குருவியெ அடிச்சு அடிச்சு போர் அடிச்சுப் போச்சு. புதுசா வேறு ஏதாவது செய்யலாம்'' என்றான் செந்தில்.

''என்ன செய்யலாம்?'' என்று யோசித்தான் சீனு.

''ஆங்... ஐடியா வந்திருச்சு! இந்த மண் ரோட்டுல முள்ளு மரக்கிளையைப் புதைத்து வைக்கலாம். யாராவது சைக்கிள்ள வேகமா விட்டாங்கண்ணா சைக்கிள் பஞ்சராயிடும். ரெண்டு கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்துக்கு சைக்கிள் கடையே கிடையாது. பஞ்சரான சைக்கிளைத் தள்ளிக்கிட்டுப் போகிறதைப் பார்த்துப் பார்த்து மகிழலாம்'' என்றான் செந்தில்.

செந்தில், சீனு இருவரும் இணைபிரியாத நண்பர்கள். ஒழுங்காகப் பள்ளி செல்லாமல் புத்தகப் பையைப் பக்கத்திலுள்ள தென்னந்தோப்பில் ஒளித்து வைத்துவிட்டு, பக்கத்தூருக்குச் சென்று சினிமா பார்ப்பது, தென்னந்தோப்பில் குருவி அடிப்பது, வேலி ஓணான்களைக் கொல்வது போன்ற தீய செயல்களை மிக ஒற்றுமையாகச் செய்து மகிழ்வார்கள். இன்றும் அதுபோல் பள்ளிக்கு மட்டம் போட்டார்கள். மண் ரோட்டில் பள்ளம் தோண்டி காய்ந்த முள் மரக் கிளையைப் போட்டு அதன்மேல் மண்ணைப் போட்டுப் பரத்தி, வேகமாக சைக்கிளில் வந்து சிக்கிக் கொள்பவர்களின் துயரத்தைக் கண்டு களிக்க ரோட்டின் ஓரத்தில் இருவரும் அமர்ந்து கொண்டனர்.



அப்பொழுது இவர்களின் ஊருக்குத் தபால் கொண்டு வரும் தபால்காரர் மிக வேகமாக சைக்கிளில் வந்தார். இவர்கள் ரோடில் புதைத்திருந்த முள்ளின் மீது சைக்கிளை அழுத்தி மிதிக்க, இரு டயர்களும் பஞ்சராகின! தபால்காரர் இறங்கி

சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நடக்க ஆரம்பித்தார்

செந்திலும், சீனுவும் மகிழ்ந்தனர். என்றாலும் அதை வெளிக்காட்டாமல் 'என்ன சார்? சைக்கிள் பஞ்சரா?' என்று செந்தில் கேட்டான். "ஆமாம் தம்பி. எவனோ பாவி, முள்ளைப் புதைச்சு வைச்சிருக்கான். சைக்கிள் பஞ்சராப் போச்சு" என்று திட்டிய படி சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நடந்தார் தபால்காரர்.

ஊர்க் கதையைப் பேசிக் கொண்டு இருவரும், அடுத்த சைக்கிள் பஞ்சர் காட்சியை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

தூரத்தில் சபாபதி சைக்கிளில் வருவது தெரிந்தது. அவர் செந்திலின் பக்கத்து வீட்டு இளைஞன்.

"நான் ஒளிஞ்சுக்கறேன். என்னை இங்கே பார்த்தால் அனாவசியமா வீட்டில்

சரவண பாரதி

பிரச்னை கிளம்பும்" என்று மரத்தின் பின்னால் மறைந்து கொண்டான் செந்தில்.

"டமார்!" - சபாபதியின் சைக்கிள் பஞ்சரான சத்தம்தான்!

"ஐயையோ! என்னண்ணா ஆச்சு!" என்று நடித்துக் குழைந்தான் சீனு.

"மின் கட்டணத்தைக் கட்ட இன்னிக்குத்தான் கடைசி நாள். ஒரு மணிக்குள்ள கட்டலேன்னா, மின்சாரத்தைத் துண்டித்து விடுவாங்க. எந்தப் படுபாவியோ முள்ளை நடு ரோட்டுல போட்டு வைச்சிருக்கான்" என்று அங்கலாய்த்த படி சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நடந்தார்




சின்னச் சின்ன நுங்கு
செங்க ருப்பு நுங்கு
தின்னத் தின்ன இன்னும்
திகட்டி டாத நுங்கு.

தாகம் தீர்க்கும் நுங்கு
தண்ணீர் போல நுங்கு
தேகச் சூடு நீங்கச்
செய்யும் சின்ன நுங்கு.

நுங்கை வெட்டித் தின்றேன்
நுங்கு வண்டி செய்தேன்;
நுங்கு வண்டி செய்தே
நுட்பம் ஒன்றைக் கற்றேன்.

சக்க ரங்கள் வைத்தால்
சல்லி சாகக் குன்றும்
மிக்க வேகம் செல்லும்
வித்தை கற்றுக்
கொண்டேன்.

— செல்ல கணபதி



நுங்கு வண்டி!

சபாபதி.

பொழுதைக் கழித்துவிட்டு சீனு வீட்டுக்குள் நுழைந்த போது அம்மா அழுது கொண்டிருந்தாள்.

“சீனு, உங்க பாட்டி படுத்த படுக்கை ஆஸ்பத்திரியில இருக்காங்களாம். உங்க மாமா உடனே என்னை வரச் சொல்லி, தந்தி அடிச்சிருக்காரு. தபால்காரர் தந்தியை எடுத்துக்கிட்டு வந்திருக்கார். வழியில, முள்ளுல குத்தி சைக்கிள் பஞ்சராகி, ரொம்ப லேட்டா தந்தியைக் கொண்டு வந்து கொடுத்தார். அதுக்குள்ள ரயில் போயிடுத்து. நேரத்தோட தந்தி கிடைச்சிருந்தா ரயிலைப் புடிச்சுப் போயிருப்பேன். எந்தப் பாவிதான் ரோட்டுல முள்ளைப் போட்டு போறவர சைக்கிளை எல்லாம் பஞ்சராக்கி எல்லோருக்கும் கஷ்டம் கொடுக்கிறானோ?'' என்று அம்மா அழுது புலம்பினாள்.

சீனு கதிகலங்கி நின்றான்!

செந்தில், வீட்டுக்குள் நுழைந்த போது வீடே இருண்டு கிடந்தது. “என்ன ஆச்சும்மா? பவர்கட்டா?” என்று கேட்டான் செந்தில்.

''பவர்கட்டெல்லாம் ஒன்றுமில்லே. மின்கட்டணம் கட்ட இன்னிக்கித்தான் கடைசி நாள். மறந்தே போச்சு. ஒரு மணி வரைதான் கட்டலாம். பக்கத்து வீட்டு சபாபதியைக் கெஞ்சிக் கூத்தாடி சைக்கிள்ள போய்க் கட்ட அனுப்பினேன். வழியில எந்தப் பாவியோ போட்டு வைச்ச முள்ளு மரக்கிளையினால சைக்கிள் பஞ்சராயி, தள்ளிக்கிட்டே தாமதமாப் போகும்படி ஆயிருக்கு. அதுக்குள்ள மின் கட்டண அலுவலகத்தை மூடிட்டாங்க. கரெண்டையும் கட் பண்ணிட்டாங்க. இனிமே அபராதத்தோட நாளைக்குக் கட்டினால், நாளை இரவுக்குள் கரெண்ட் கொடுப்பாங்க. தெருக் குழாய்லேருந்து ஆளுக்கு நாலு குடம் தண்ணி அடிச்சிட்டு வாங்க. மோட்டாரில்லையே!'' என்றாள் அம்மா.

செந்தில் திகைத்து நின்றான்.

இப்பொழுதெல்லாம் முள் மரக்கிளையைப் புதைத்து விளையாடும் ஆட்டத்தை செந்திலும், சீனுவும் நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை!

அப்பாவே போட்டார்!

உமாகுமார்

அவசர அவசரமாக இலையில் விழுந்த இட்லிகளைக் காலிசெய்தான் ரமேஷ்.

"ஏண்டா! என்ன அவசரம்? மெள்ளச் சாப்பிடு" - அதட்டிய அம்மாவை நிமிர்ந்து பார்க்காமலேயே பதில் சொன்னான் ரமேஷ்.

"கொஞ்சம் வீட்டுப் பாடம் பாக்கியிருக்கும்மா!"

"ஆமாம்! வீட்டுப் பாடம் பாக்கியிருக்குன்னு நேத்து ராத்திரி பத்து மணி வரைக்கும் கண் கொட்டாம டீவி பார்த்த போது ஞாபகம் வரலையா ஐயாவுக்கு? ம்! நிதானமாகச் சாப்பிடு! தண்ணி கூடக் குடிக்காம அள்ளி அடைக்கறான்!"

எதிரில் உட்கார்ந்து தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் அப்பாவை நிமிர்ந்து பார்க்கவே பயமாக இருந்தது ரமேஷிற்கு.

பட்டென்று தட்டிலேயே கையைக் கழுவி விட்டு புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு ஓடாத குறையாக மாடிப்படி ஏறினான்.

இதுதான் சரியான இடம். நல்ல சமயம்! அப்பா டிபனைச் சாப்பிட்டு விட்டு, கடை திறக்க இன்னும் பத்தே நிமிடத்தில் கிளம்பி விடுவார். அம்மாவுக்கும் மூச்சு விட நேரமில்லை. நிச்சயமாய் மாடியேறி வர மாட்டாள் இப்போது.



புத்தகப் பையைத் திறந்து பெரிதான டிராயிங்-நோட்டை ஜாக்கிரதையாய் உருவினான். மெள்ள எடுத்துப் பிரித்தான். உள்ளே பதுக்கி வைக்கப்பட்டிருந்த மஞ்சள் வண்ண அட்டை புரோக்கிரஸ் ரிபோர்ட் மெள்ள அவனைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது. பார்க்கும்போதே வயிற்றைக் கலக்கியது. போன தடவை மூன்று இடங்களில் விழுந்திருந்த சிகப்புக் கோடு இந்தத் தடவை ஐந்தாகி அவனை பார்த்துச் சிரித்தது. ஐந்து பாடங்களில் பெயில்.

போன தடவை வாங்கிய அடியும், இன்று வரை தொடரும் திட்டும் நினைவுக்கு வர வியர்த்துப் போனான் ரமேஷ். நிச்சயமாய் அப்பாவிடம் போக முடியாது. அம்மா, அப்பாவுக்குத் தெரியாமல் கையெழுத்துப் போடவே மாட்டாள்.

டப்பாவைத் திறந்து பேனாவை எடுத்தான். இன்று கையெழுத்து வாங்கி எடுத்துப் போகாமல், ஸ்கூல் போக முடியாது. டீச்சரிடம் கை வலிக்க பிரம்படி வாங்க வேண்டும். நிறுத்தி, நிதானமாய் போன தடவை அப்பா போட்டிருந்த கையெழுத்தைப் போலவே பார்த்துப் பார்த்து உள்ளங்கை வியர்க்கப் போட்டு முடித்தான். உடம்பு பயத்தில் தந்தையின் கையெழுத்தைப் போட்டு விட்டு நிமிர்வதற்குள் முழுவதுமாக குப்பென்று வியர்த்துப் போயிருந்தது. அங்குமிங்கும் யாராவது பார்க்கிறார்களா என்று இன்னொரு தடவை நோட்டமிட்டு விட்டு அதே டிராயிங் நோட்டிலேயே ரிபோர்ட்டை வைத்து மூடினான். தொல்லை விட்டது என்று மனம் ஒரு பக்கத்தில் பெருமூச்சு விட்

டது ரமேஷுக்கு.

வகுப்பாசிரியர் ஒவ்வொருவராகப் பெயர் சொல்லி அழைக்க அவரவர் தத்தம் ரிப்போர்ட் கார்டை எடுத்துப் போய் நீட்டினர். ரமேஷின் முறை வந்தது.

திரும்பவும் ஏனோ உடல் முழுவதும் பயம்! குப்பென்று வியர்வை. உள்ளுக்குள் நடுங்கியபடியே தன் கார்டைக் கொண்டு போய் நீட்டினான்.

"ம்! கையெழுத்து வாங்கியாச்சா? கொண்டா."

அதட்டியபடியே வாங்கி நோட்டம் விட்ட ஆசிரியரின் முகம் அடுத்த நொடியே சுருங்கியது. திரும்பத் திரும்ப தன்னையும் தன் கார்டையும் மாறி மாறி ஆசிரியர் பார்க்க ரமேஷ் வெடவெடத்துப் போனான்.

"இந்தக் கையெழுத்து யார் போட்டா?"

"எங்கப்பாதான் போட்டார் சார்!"

"உங்கப்பாவேவா! நிஜமா உள்ளதைச் சொல்லு?" - அவர் அதட்ட அவன் நடுங்கினான்.

"நிஜம்தான் சார். சத்தியமா எங்கப்பா கையெழுத்து தான் இது. அவர்தான் போட்டாரு!"

அவசரமாய், ஆனால் உறுதிபடப் பொய் சொன்னான் ரமேஷ். மறுகணம் கன்னத்தில் தீப்பொறி பட்டாற்போல 'சுளீர்' என்று ஒரு அறை விழுந்தது.

"முளைச்சு மூன்று இலை விடலை. இத்தனை பொய்...யா? இது உங்கப்பா போட்ட கையெழுத்து இல்லை? - இதுலே சத்தியம் வேற பண்றே. கிளம்பு, ஹெட்மாஸ்டர் கிட்ட வா! நட...."

பளார், பளார் என்று வாங்கிய அறையில் கன்னம் சிவந்து போயிருக்க அழுதபடி ஹெட்மாஸ்டரின் அறைக்குள் நுழைந்தான் ரமேஷ்.

"சார்! இந்தப் பையன் ரமேஷ்... வாடா இங்கே... ஆறாங்கிளாஸ்ல இருக்கான். ப்ராக்ரஸ் ரிபோர்ட்ல அப்பாவோட கையெழுத்தைத் தானே போட்டுக் கொண்டு வந்திருக்கான் பாருங்க." - வகுப்பாசிரியர் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தார்.

ரமேஷ் நிலத்தைப் பார்த்தபடி நிற்க ஹெட்மாஸ்டர் கைக்கு அவன் ரிபோர்ட் போனது.

"ம்! நீதான் போட்டியா கையெழுத்தை?"

"இல்லேன்னு சத்தியம் பண்றான் சார். நல்ல வேளையா பட்னு தேதி என் கண்ணுல பட்டிச்சு. கால் பரீட்சை ரிசல்ட்ல அவங்கப்பா போட்டிருக்கற இருபது எட்டுங்கறதை அப்படியே பார்த்து எழுதிட்டு வந்திருக்கான் பாருங்க!"

ஆசிரியர் விளக்கமளிக்க ரமேஷிக்குப் புரிந்து போனது தான் பிடிபட்ட விதம். நின்றபடியே அழுதவண்ணம் இருந்தான். அடுத்த ஐந்தே நிமிடத்தில் ப்யூன் வடிவேலு சைக்கிளை எடுத்துக் கொண்டு அப்பாவை அழைத்துக் கொண்டு வரப் போக... மனம் ஒடிந்து போனான் ரமேஷ்.

பத்தே நிமிடத்தில் ஆபீஸிற்குள் நுழைந்த அப்பாவை நிமிர்ந்து பார்க்கவில்லை ரமேஷ். குரலை மட்டும் கேட்டான்.

"சார்! உட்காருங்க. உங்க பையன் விஷயமா பேசலாம்னுதான் கூட்டிட்டு வரச் சொன்னேன்!" - சொன்ன ஹெட் மாஸ்டரை குழப்பத்தோடு பார்த்தார் அப்பா.

"ஏன் சார்? என்னாச்சு! ஏதாவது தப்பு பண்ணிட்டானா?"

"ஆமா! இங்க பாருங்க. உங்க பையனோட ரிசல்ட் ஷீட். தானே உங்க பெயரை எழுதி எடுத்து வந்திருக்கான். நீங்க முன்னால எப்பவோ போட்ட தேதியையும் காப்பியடிச்சதால மாட்டிக்கிட்டான் நல்லா" - ஆசிரியர் விளக்கினார்.

கால் நொடியில் அப்பாவுக்கு எல்லாம் புரிந்து போனது. அவமானப்பட்டு, அடிவாங்கி, கூனிக்குறுகித்



தலைகுனிந்து நிற்கும் மக னைத் திரும்பிப் பார்த்தார்.


"இவ்வளவு தடவை கேட் டப்புறமும் நீங்கதான் கையெ ழுத்துப் போட்டுக் கொடுத் தீங்கன்னு சத்தியம் பண்றான் சார்!"

"அவன் பொய் சொல் லலை சார்! இது நான்தான் போட்டுக் கொடுத்தது சார்."

தந்தையின் சொற்களில் சட்டென்று சூடுபட்டாற் போல நிமிர்ந்தான் ரமேஷ்.

"ரமேஷ்! அங்க எதுக்குடா தனியா நின்னுகிட் டிருக்கே! இங்க வா! சார்... காலைல டிபன் சாப்பிட்டு கிட்டிருந்தேன். அவசரமா வெளில வேலையா போக வேண்டியிருந்தது. ஷீட்டைக் கொண்டு வந்து நீட்டி னான். மார்க்கைப் பார்த்துபுட்டு நாலு திட்டு திட்டி னேன். பட்டுன்னு கையழுத்தப் போட்டு விட்டெறிஞ்சு புட்டு சட்டையை மாட்டிக்கறதுக்குள்ளே திரும்ப வந்து நின்னான். ஏண்டான்னேன் - தேதி போடலைப்பா. சார் திட்டுவாருன்னான். நான்தான் எனக்கு நேரமாச்சு தேதியை நீயே போட்டுக்கன்னு சொன்னேன். மூளை கெட்டவன் பழைய தேதியைப் பார்த்து எழுதியிருக் கான்! நடந்தது இதுதான்."


அப்பா சர்வசாதாரணமாக சிரித்தபடி சொல்ல ஹெட் மாஸ்டரும், வகுப்பாசிரியரும் ஒருவரையொருவர் தயக்கத் தோடு பார்த்தபடி ரமேஷை நோக்க அவன் இன்ன மும் அழுது



"அவல் பட்டாணிக் கடைக்காரர் எப்படிக் கடிதம் எழுத ஆரம்பிப்பார்?"

"நலம். நலமறிய அவல்."

— வி.சி. கிருஷ்ணரத்தினம்,
காட்டாங்குளத்தூர்.



கொண்டு நின்றான்:

மணியடித்தது! ஆசிரியர் எழுந்து போய் ரமேஷின் முதுகை செல்லமாகத் தட்டினார். அப்பாவின் பக்கம் திரும்பி "மன்னிச்சுக்குங்க சார்" என்றார்.

அப்பா, நன்றி சொல்லி விட்டு வெளியே வந்தார். கேட்டருகில் புத்தகப் பையோடு நின்ற ரமேஷின் தோள் மேல் கை போட்டு அழைத்துக் கொண்டு கிளம்பினார். நீண்ட மௌனம்.

"ரமேஷ்! இங்க அந்த பார்க், பக்கத்துல தானே இருக்கு? தினமும் ஸ்கூல் விட்டு விளையாடிட்டு வருவியே, அங்கேயே போகலாம்!"

அப்பா சொல்ல மௌனமாய் நடந்தான் ரமேஷ். பார்க்கில் கிடந்த பெஞ்ச்சியில் உட்கார்ந்து கொண்டார் அப்பா. "போப்பா! விளையாடிட்டு வா ஓடு!" - என்றபடியே சாய்ந்து கொண்டவர் மடியில் வந்து திடீரென்று பொத்தென்று விழுந்தான் ரமேஷ்.

"அப்..பா! என்னை மன்னிச்சிடுங்கப்பா! தப்பு பண்ணிட்டேன்! இனிமே நிச்சயமா செய்ய மாட்டேம்ப்பா இப்படி...!"

குலுங்கிக் குலுங்கி அழுத மகனை நிதானமாய்ப் பார்த்தார் அப்பா. நல்ல சூடாக இருக்கிறது இரும்பு. அடித்து வளைக்கும் அருமையான சமயம்!

"அழாதப்பா! தப்பு நீ மட்டுமா பண்ணினே? நானும்தான் தப்பு பண்ணினேன். இல்லையா?"

கேட்ட தந்தையை ரமேஷ் குழப்பமாகப் பார்த்தான்.

"நீ நண்பர்கள் ஆசிரியர்கள் முன்னால அவமானப்படக்கூடாதுன்னு நினைச்சுத் தானே துணிஞ்சு அந்தப் பொய்யைச் சொன்னேன்? அது தப்புத்தானேப்பா? தலைகுனிஞ்சு நின்ன உனக்காக நான் சொன்ன இந்தப் பொய், கடைசி பொய்யா இருக்கணும்னு ஆசைப்படறேன்! இரண்டு பேரும் தலைநிமிர்ந்து நிக்கணும். அது உங்கிட்டதான் இருக்கு. நடக்குமா?"

பதினோரு வயது ரமேஷுக்கு தந்தையின் சொற்கள் மனத்தில் ஆணியடித்தாற் போல் பதிய, நிமிர்ந்தான்.

"நிச்சயமா இனிமே செய்ய மாட்டேம்பா. நல்லா படிப்பேன். பாருங்க. எல்லாத்துலயும் பாஸ் மார்க் வாங்குவேன். பெருமையோடு பிராக்ரஸ் ரிப்போர்ட்டைக் கொண்டு வந்து காட்டுவேன்."

"நீ விளையாடிட்டு வீட்டுக்குப் போ! நான் கடைக்குப் போறேன். என்னா...? கேட்டபடியே எழுந்த அப்பாவின் பின்னாலேயே ரமேஷும் எழுந்தான் புத்தகப் பையோடு.

"இல்லப்பா! நிறையப் படிக்கணும், ஹோம் ஒர்க் பண்ணணும். நான் வீட்டுக்கே போறேன். நீங்க கடைக்குப் போயிட்டு வாங்க" - ரமேஷ் நடந்தான்.

மகனின் வார்த்தைகளில் குளிர்ந்து போய் பெருமையுடன் நடந்தார் அப்பா.

பாதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : வி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.


அலை வரப் போகுது
அளக்கப் போறேன் பாருங்க!